# உதயன்




www.onlineuthayan.com

26 பக்கங்கள் சுடர் 28 கதிர் 032 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 13 வெள்ளிக்கிழமை (28/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


# பல்கலை மாணவர்கள் நால்வரிடமும் பிரபாகரன் பற்றி விசாரணை இல்லை

## ஹத்துருசிங்க சொன்னது பொய்: மாணவர்கள் விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 28

பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்தினர் தம்மிடம் நடத்திய விசாரணைகளில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பற்றிய கேள்விகள் எவையும் எழுப்பப்படவில்லை என்றும் அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பது பற்றிய எந்தக் கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை என்றும் யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தினர், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோரைப் பலாலி படைத் தலைமையகத்திற்கு அழைத்துப் பேசிய யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியின் கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் மாணவர்கள் தமது நிலைமையை விளக்கியுள்ளனர்.

வெலிக்கந்த புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு மாணவர்களில் சிலர், தலைவர் பிரபாகரன் இன்னமும் உயிருடன் இருக்கிறார் என நம்பிக் கொண்டிருக்கின்றனர் என்று கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்திருந்தார்.

''பிரபாகரன் இருக்கிறார்; தமிழீழம் கிடைக்கும் என்ற கொள்கைகளையே இன்னமும் அந்த நான்கு மாணவர்களும் பின்பற்றுகிறார்கள். அதனை அவர்களை மறக்கச் சொல்லுங்கள்; அப்படியானால். விரைவில் விடுதலையாவார்கள். பிரபாகரன் இருக்கிறார் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர் என்பதை புல

பார்க்க பக்கம் 4

## காற்று, இடியுடன் இன்றும் மழை

யாழ்ப்பாணம், டிசெ.28

வடக்கில் பலத்த காற்று மற்றும் இடியுடன் கூடிய மழை இன்று வெள்ளிக்கிழமையும் பெய்யும் என்று வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

கடலில் கொந்தளிப்புக் காணப்படுவதால் மீனவர்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இடிமின்னல் தொடர்பில் அவதானமாகச் செயற்படுமாறு யாழ். வளிமண்டலவியல் திணைக்கள கடமை நேர அதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு கரையோரப் பிரதேசங்களிலும் கிழக்கு, ஊவா, மத்திய மாகாணங்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது. வடக்கில் இன்று பெய்யவுள்ள மழை காரணமாக அதிக அளவான மழை வீழ்ச்சி பதிவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடலில் மணிக்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வரை

பார்க்க பக்கம் 4

## வெள்ளத்தில் கேப்பாபிலவு: பொதுமக்கள் அவதி

முல்லைத்தீவு, டிசெ.28

தொடரும் அடைமழை காரணமாகக் குடிசைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் கேப்பாபிலவில் கட்டாயமாக மீளக்குடியேற்றப்பட்ட தமிழ் மக்கள் அன்றாடக் கருமங்களைச் செய்ய முடியாமல் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

வவுனியா மெனிக்பாம் நலன்புரி முகாம்களில் இருந்து அழைத்து வரப்பட்டு கேப்பாபிலவு, சீனியாமோட்டைப் பகுதியில் 110 குடும்பங்கள் இராணுவத்தினராலும், அதிகாரிகளாலும் கட்டாயமாக மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்யும் மழையினால் இவர்களின் தற்காலிகக்குடிசைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

சமைக்கவோ, படுத்துறங்கவோ முடியாத நிலையில் தாம் அவதிப்படுகின்றோம்

பார்க்க பக்கம் 4

# 12,000 குடும்பங்கள் வடக்கில் பாதிப்பு

## அடைமழை, வெள்ளத்தால் இடப்பெயர்வு குளங்கள் நிரம்பி வான்பாய்கின்றன

கிளிநொச்சி, டிசெம்பர் 28

வடக்கில் பெய்துவரும் அடைமழை மற்றும் குளங்களின் பெருக்கெடுப்புக் காரணமாக மக்களின் இயல்பு வாழ்வு பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மன்னார் ஆகிய மாவட்டங்களில் அனைத்துக் குளங்களும் நிரம்பி வழிகின்றன. ஆறுகள் பெருக்கெடுத்துப் பாய்கின்றன. இதனால் வீதிப்போக்குவரத்து பல இடங்களிலும் தடைப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் வடக்கில் உள்ள 5 மாவட்டங்களிலும் சுமார் 12 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றிரவு வரை 1,732 குடும்பங்களைச் சேர்ந்த 6,592 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 563 குடும்பங்களைச் சேர்ந்த 2,189 பேர் பதினொரு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பரந்தன் வீதி, கிளிநொச்சி முழங்காவில் வீதி, வட்டக்கச்சி கிளிநொச்சி வீதி என்பவற்றில் வெள்ளம் மேவிப் பாய்வதால்

பார்க்க பக்கம் 4

## சொத்து விவரங்கள் வெளியிடாத அரசியல்வாதிகள் அம்பலப்படுவர்

கொழும்பு, டிசெ.28

இதுவரையில் தமது சொத்து விவரங்களை வெளியிடாதிருக்கும் அரசியல்வாதிகளின் பெயர்கள் அம்பலப்படுத்தப்படும் - என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சொத்து விவரங்களை வெளியிடாது இருக்கும் அரசியல்வாதிகளின் பெயர் விவரங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் வெளியிடப்படும்.

இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதான அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும், தங்களுடைய சொத்து விவரங்கள் பற்றிய தகவல்களை வழங்கி வருகின்றனர். சில கட்சிகளும் அரசியல்வாதிகளுமே இதுவரையில் தமது சொத்து விவரங்களை அறிவிக்கவில்லை.

எனினும் சொத்து விவரங்களை வழங்கியவர்களின் விவரங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

அதேவேளை, அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் சொத்து விவரங்களை வெளி

பார்க்க பக்கம் 4

## இரணைமடுக் குள நீர்மட்டம் எட்டியது அபாயக் கட்டத்தை

### நீர்வரத்து அதிகரித்த காரணத்தால்



கிளிநொச்சி, டிசெ.28

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் வேகமாக அதிகரித்து வருவதைத் தொடர்ந்து அதன் 11 வான்கதவுகளும் முழுமையாகத் திறந்துவிடப்பட்டுள்ளன. குளத்தில் இருந்து விநாடிக்கு 8 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்படுவதாக கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப் பாளர் என்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

குளத்தில் வழக்கமாகத் தேக்கப்படும் தண்ணீரின் கொள்ளளவைத் தாண்டி நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

நேற்று இரவு 9 மணித் தகவலின் படி இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 33 அடியாக உயர்வடைந்துள்ளது. குளத்தின் மொத்த நீர்க்

பார்க்க பக்கம் 4

## மஞ்சள், மீன் மழை

கொழும்பு, டிசெ.28

ஹட்டன், குடாஓயா பகுதி, அனுராதபுரம், திரிப்பனே பகுதிகளில் நேற்று மஞ்சள் மழை பெய்ததுடன் புத்தளம் ஆசிரி பகுதியில் மீன் மழையும் பெய்துள்ளது.

நேற்றுக் காலை குடாஓயாப் பகுதியில் சுமார் இரண்டு மணிநேரம் மஞ்சள் மழை பெய்துள்ளது.

மஞ்சள் மழை பெய்வதை கண்ட மக்கள். உடனடியாக அதை பாத்திரங்களிலும் போத்

பார்க்க பக்கம் 4

## இரத்தோட்டையில் தமிழர் ஒருவர் அடித்துக் கொலை

கொழும்பு, டிசெ.28

இரத்தோட்டை - பாத்தாளவத்தையில் தமிழ் இளைஞர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். மத்திய பரிவு பண்வில பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் இவர் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

பார்க்க பக்கம் 4

## உணவு, குடிதண்ணீரில் சுகாதாரம் பேணுங்கள்

### தொற்றுநோய்கள் பரவும் அபாயம் தொடர்மழையை அடுத்து யாழ்.குடாநாட்டில்

யாழ்ப்பாணம், டிசெ.28

தொடர்மழையை அடுத்து வடக்கில் தண்ணீர் மூலமாகப் பரவும் நோய்களின் தொற்று தீவிரமடையலாம் என்பதால் உணவு, குடிதண்ணீர் என்பவற்றின் சுகாதாரத்தைப் பேணுமாறு சுகாதாரப் பிரிவினர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிணறுகள் உட்பட நீர்நிலைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் மலக்குழிகளிலும், கைவிடப்பட்ட கிடங்குகளிலும் வெள்ளம் தேங்கி அவை நிரம்பி கிணறுகளில் கலக்கும் சாத்தியங்கள் உள்ளன.

தண்ணீர் மூலம் பரவும் நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம், செங்கமாரி

பார்க்க பக்கம் 4

# 3 மாகாண சபைகளுக்கு ஏப்ரல் மாதத்தில் தேர்தல்


கொழும்பு, டிசெ.28

மூன்று மாகாணசபைகளுக்கான தேர்தலை அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் நடத்துவதற்கு அரசு உத்தேசிக்கிறது.

ஊவா, மேல் மற்றும் தென் மாகாணசபைகளுக்கான தேர்தலையே நடத்த அரசு தீர்மானித்திருக்கின்றது என்று அரசின் உயர் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். தேர்தலுக்கான அறிவிப்பை எப்போது வெளியிடுவது என்பது பற்றி அரசு தற்போது ஆலோசித்து வருகிறது. அதேசமயம், ஜனவரி மாத இறுதிப் பகுதியில் இதற்கான அறிவிப்பை அரசு உத்தியோகபூர்வமாக வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காரைநகர் ஈழத்துச் சிதம்பர மார்கழித் திருவாதிரை உற்சவ தேர்த்திருவிழா நேற்று பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் புடைசூழ நடைபெற்றது.

# தமிழருக்கு உரிமைகளை வழங்க இலங்கை அரசு தயாராக இல்லை

## பி.பி.சியின் முன்னாள் செய்தியாளர் ஹரிசன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.28

''விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவத்தின் பலத்துக்கு ஈடுசெய்யும் நிலையில் இருந்தார்கள் என்று தமிழர்கள் சொல்கின்றனர். இப்போது எல்லா அதிகாரங்களும் ஒரே பக்கத்தில் உள்ளன. விடுதலைப் புலிகள் இல்லாத நிலையிலும் கூட, இலங்கை அரசு தமிழர்களுக்கு அவர்களின் உரிமைகளைக் கொடுக்கத் தயாராக இல்லை.''

- இவ்வாறு பி.பி.சியின் இலங்கைக்கான முன்னாள் செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசன் தெரிவித்தார்.

இலங்கை அரசு கவனமாக கையாளத் தவறினால், மீண்டும் ஒருமுறை விடுதலைப் புலிகளின் அல்லது அவர்களைப் பின்பற்றுபவர்களின் ஆள்சேர்ப்பு முகவராக மாறும் நிலை ஏற்படும் என்றும் பிரான்சிஸ் ஹரிசன் எச்சரித்துள்ளார்.

'தி ஏசியன் ஏஜ்' ஊடகத்துக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

துப்பாக்கிகள் மௌனமாகி விட்ட போதிலும், அச்சம், அவமானம், பௌதீக ரீதியான பாதுகாப்பின்மை, சட்டத்தின் ஆட்சியின் குறைபாடு, இராணுவ மயமாக்கல், வடக்கில் சிங்கள மயமாக்கல், சிறுபான்மையினருக்கு அதிகாரங்கள் பகிரப்படாத நிலை என்பனவே அங்கு காணப்படுகின்றன.



இலங்கை அரசு கவனமாகக் கையாளத் தவறினால், மீண்டும் ஒருமுறை விடுதலைப் புலிகளின் அல்லது அவர்களைப் பின்பற்றுபவர்களின் ஆள்சேர்ப்பு முகவராக அது மாறும் நிலை ஏற்படும்.

மக்களின் நினைவுகூரும் உரிமை அல்லது அவர்களது கலாசாரத்தைப் பாதுகாக்கும் உரிமை மற்றும் அவர்களின் அரசியல் உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்படுமானால், அது ஏற்கனவே வலுவாக உள்ள உணர்வுகளை அதிகரிக்கவே செய்யும். விரைவில் அல்லது பின்னர், அது பழிவாங்கும் நெருப்பாக எரியும்- என்று அவர் மேலும் கூறியுள்ளார். (சி)

# போர் வெற்றியை நிலைநிறுத்த அதிகாரப் பகிர்வு மிக அவசியம்

## இந்திய இராணுவ முன்னாள் தளபதி கூறுகிறார்

புதுடில்லி, டிசெ. 28

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை அரசு பெற்ற வெற்றியை நிலைநிறுத்துவதற்கு அதிகாரங்களைப் பகிரும் அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது, மிக முக்கியமானது என இந்திய இராணுவத்தின் முன்னாள் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்திய அமைதிப்படையில் பணியாற்றிய இவர், இந்திய ஊடகம் ஒன்றில் எழுதியுள்ள பத்தியில், போருக்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் இலங்கை அரசு நடைமுறைப்படுத்தியுள்ள திட்டங்களைப் பட்டியலிட்டு அதன் நிலைமைகள் தொடர்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீள்குடியமர்வு, கண்ணிவெடி அகற்றப்பட்டமை, பாதுகாப்பு வலயங்கள் சுருக்கப்பட்டமை, முன்னாள் போராளிகள் விடுதலை, காலாற்படைப் பிரிவுகள் மீள் நிலைப்படுத்தப்பட்டமை, பொருளாதார அபிவிருத்தி போன்ற மாற்றங்கள் குறித்து அவர் தனது பத்தியில் பட்டியலிட்டுள்ளார்.

ஆனால் இன்னமும், அரசியல் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை அரசு பெற்றுக்கொண்ட இராணுவ வெற்றி, அரசியல் மீள் இணக்கப்பாட்டுக்குப் பதிலீடாக அமையாது. பெற்ற வெற்றியை நிலைநிறுத்துவதற்கு அதிகாரங்களைப் பகிரும் அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும், பொறுப்புக்கூறலும், மிக முக்கியமானவையாக உள்ளன என்றும் மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா தெரிவித்துள்ளார். (த)

### கடும் மழையை அடுத்து வீதிகளின் நிலை மோசம்

யாழ்ப்பாணம், டிசெ.28

கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் மழை காரணமாக யாழ்.நகரில் சில வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதனால் போக்குவரத்துச் செய்வதில் பயணிகள் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். சில வீதிகள் பல மாதங்களாகச் சேதமடைந்த நிலையில் உள்ளபோதும் அவற்றை திருத்தியமைப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

யாழ். மணிக்கூட்டுக் கோபுர சுற்றுவட்டப் பகுதி, ஆஸ்பத்திரி வீதியில் வேம்படிச் சந்தி, யாழ். நகர் கே.கே.எஸ். வீதி, யாழ். இந்துக் கல்லூரியை அண்மித்துள்ள கஸ்தூரியார் வீதி உட்பட பல வீதிகள் குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன.

மழை இல்லாத நாள்களில் கூட இந்த வீதிகளினூடாகப் பயணிக்க முடியாத நிலையே காணப்படுகின்றது. தற்போது அந்த வீதிகளில் மழை வெள்ளம் தேங்கி நின்று போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என மக்கள் முறையிடுகின்றனர்.

யாழ். கஸ்தூரியார் வீதியில் ஒரு பக்கம் காப்பெற் போடப்பட்டு மறுபக்கம் காப்பெற் போடப் பட்டாமல் இருப்பது போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்துகின்றது.

# கரடிப்போக்கில் விபத்து பயணிகள் 6 பேர் காயம்



கிளிநொச்சி, டிசெ. 28

கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்தியில் ஏ-9 வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து பூநகரி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்றுடன் பரந்தன் பகுதியில் இருந்து எதிரே வந்த டிப்பர் வாகனமும் மோதி விபத்து ஏற்பட்டது.

பஸ்ஸில் பயணித்த 6 பேரே காயமடைந்தனர்.

ஆ.கஜன் (வயது-19, பூநகரி), த.சிந்துஜா (வயது-20, பூநகரி), வி.வசந்தகுமாரி (வயது-34, கறுக்காய்த்தீவு, பூநகரி), க.அனுசியா (வயது-6, கறுக்காய்த்தீவு), மனோசிகன் (வயது-12, பூநகரி), மகேஸ்வரி (வயது-63, புதுமுறிப்பு) ஆகியோர் சிறுகாயங்களுக்கு இலக்காகி, கிளிநொச்சி பொதுவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்த விபத்து நேற்று முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-6)

# யாழ்.குடாநாட்டில் அதிக மழை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ். குடாநாட்டில் இந்த வருடம் இதுவரையான காலப் பகுதியில் அதிகளவாக 96 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி நேற்றுமுன்தினம் புதன் கிழமை பதிவாகியுள்ளது என்று யாழ். வளிமண்டலவியல் திணைக்கள கடமை நேர அதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்றுக்காலை 8.30 மணிவரையான 24 மணித்தியாலங்களில் 96 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நேற்றுக்காலை 8.30 மணிதொடக்கம் நேற்றுப் பிற்பகல் 5.30 மணிவரையான 9 மணித்தியாலங்களில் 4.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் 845 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகி உள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 6.4 மில்லி மீற்றரும் பெப்ரவரி 0.2 மில்லி மீற்றரும், மார்ச் மாதம் 8.3 மில்லி மீற்றரும், ஏப்ரல் மாதம் 6.5 மில்லி மீற்றரும், மே மாதம் 7.2 மில்லி மீற்றரும் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 2.6 மில்லிமீற்றரும், ஒகஸ்ட் மாதம் 8.6 மில்லிமீற்றரும், செப்ரெம்பர் மாதம் 135.4 மில்லிமீற்றரும், ஒக்ரோர் மாதம் 395.3 மில்லிமீற்றரும், நவம்பர் மாதம் 80.6 மில்லிமீற்றரும், டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதிவரை 135.4 மில்லிமீற்றரும், மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. (த-4)

### அரசியல் கைதிகளை விசேட குழு இன்று பார்வையிடும்

கொழும்பு,டிசெ.28

பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை தூதுக்குழுவொன்று இன்று பார்வையிடவுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன, தம்பர அமில தேரர் மற்றும் மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோசப் ஆகியோரே வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்று நிலைமைகள் தொடர்பில் ஆராயவுள்ளனர்.

இதன் போது கைதிகளுக்கு நத்தார் பரிசுகளும் 100 உணவு பொதிகளும் வழங்கப்படும் என ஐ.தே.க. வின் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (ஐ)

# உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாடு இன்று

கொழும்பு,டிசெ.28

உலகத் தமிழர் இரண்டாவது பாதுகாப்பு மாநாடு இன்று கோலாலம்பூர் பெட்டாலிங் ஜெயாவில் உள்ள தோட்ட மாளிகையில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு காலை மணி 9.00 முதல் இரவு 11.00 மணிவரை மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது. மாநாட்டை உலகத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் ஏற்பாடு செய்துள்ளது.

உலகத் தமிழர்கள் தமது இனக்காப்பினை உறுதி செய்து, இன்னுமொரு அழிவு வராவண்ணம் எச்சரிக்கையாய் இருக்கவேண்டிய அவசியத்தை உணர்த்துவதே மாநாட்டின் நோக்கம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்களுக்கு ஏற்பட்ட நிலை உலகில் எந்த நாட்டிலும் வாழும் தமிழர்களுக்கும் ஏற்படக் கூடாது. இதனை ஒரு பாடமாக கொண்டு உலகத் தமிழர்கள் தம்மை எவரும் தொடுவதற்கு அனுமதிக்க முடியாதவாறு ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊறணியில் உள்ள நன்னீர் ஊற்று சுற்றுலா மையமாக விஸ்தரிக்கப்படும்

## மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

*வடமராட்சி, டிசெ.28*

*வல்வெட்டித்துறை, ஊறணி நன்னீர் ஊற்று இந்தப் பிரதேச மக்களுக்கு மட்டுமல்லாது சகல சுற்றுலாப் பயணிகளையும் யாத்திரிகர்களையும் கவரும் இடமாக விஸ்தரிக்கப்பட உள்ளது. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் திருமதி வி.சத்தியகுமார் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.*

மரபுரிமை அமைச்சால் மரபுரிமை பேணப்பட வேண்டிய தலமாக வல்வெட்டித்துறை, ஊறணி நன்னீர் ஊற்றுக்கேணி பிரகடனப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து அதற்கான பெயர்ப் பலகை திரை நீக்கம் செய்யும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மத்திய சுற்றாடல் அதிகார சபை உதவிப் பணிப்பாளர் திருமதி வி.சத்தியகுமார் கலந்துகொண்டு பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

நிகழ்வில் உதவிப் பணிப்பாளர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

வல்வெட்டித்துறையில் திரைநீக்கம் செய்து வைக்கப்படும் இந்த நன்னீர்க் கேணி பல்வேறு மருத்துவக் குணங்கள் நிறையப் பெற்றது.

இந்த நன்னீரானது கடலுக்கு அருகில் தோற்றம் பெற்றமையால் அற்புதமான ஒரு புண்ணிய தீர்த்தமாக விளங்குகின்றது. சுற்றாடல் பயணிகளை மாத்திரமன்றி யாத்திரிகர்களையும் கவரும் இடமாக இந்த நன்னீர்க் கேணி மாற்றியமைக்கப்படும்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின்பரிந்துரைக்கு அமைய மரபுரிமை பேணப்பட வேண்டிய இடமாக இந்த நன்னீர்க் கேணி பிரகடனப்படுத்தப்பட்டு, இதற்கான பெயர்ப் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு வைத்தமை வட மாகாணத்திலேயே முதன் முதலாக நடைபெற்ற நிகழ்வாகும்.

இந்த முயற்சிகளை முன்னெடுப்பதில் உறுதுணையாக இருந்த வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவரின் முயற்சிகளைப் பாராட்ட வேண்டும்.

நன்னீர் ஊற்றைப் புனரமைப்பதற்காக உரிய அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய சுற்றாடல் அதிகார சபை மேற்கொள்ளும்.- என்றார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றுச்சூழல் அலுவலர் திருமதி சண்முகப்பிரியா உட்பட சபையினதும் வல்வெட்டித்துறை நகர சபையினதும் அலுவலர்கள், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், பொது மக்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-8)

## புதிய குடிதண்ணீர் கிணற்றை சுன்னாகத்தில் அமைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

சுன்னாகத்தில் கழிவு எண்ணெயால் மாசுபடாத பிரதேசத்தில் புதிய கிணறு ஒன்றை அமைத்து குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

யாழ்.தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் எந்திரி.பா.தபேந்திரகுமார் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் மின்சார சபையின் ஊடாக வெளியேறும் கழிவு ஓயில் சுன்னாகத்தில் உள்ள நன்னீர் நிலைகளை மாசுபடுத்தியது.

அதனையடுத்து வேறு நீர் நிலைகளில் இருந்து கட்டுடை-நவாலி மக்களுக்கு குடிதண்ணீர் குழாய்மூலம் வழங்கப்பட்டு வந்தது.

தற்போது மேற்படி குடிதண்ணீர் குடிப்பதற்கு உகந்தது அல்ல என்ற கருத்தை முன்வைத்தமையை அடுத்து- சுன்னாகத்தில் உள்ள வேறு நன்னீர் பிரதேசத்தில் புதிய கிணற்றைத் தோண்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்பட்டது. (ம-41)

## மோசடி இடம்பெற்ற கிளை முகாமையாளர் இடைநிறுத்தம்

கொடிகாமம், டிசெ.28

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு நகர் கிளையில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான விசாரணைகளின் முதற்கட்டமாக மோசடி இடம்பெற்ற கிளையின் முகாமையாளர் சங்க பணிப்பாளர் சபையால் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

மேலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

இடைநிறுத்தப்பட்ட கிளை முகாமையாளர் கொடிகாமம் கூட்டுறவு கிளையில் கடமையாற்றிய கடந்த ஐந்து மாத காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொள்வனவு, விற்பனை ஆகியவற்றின் சிட்டைகளை பரிசீலிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பற்றுச் சீட்டுக்கள் பரிசீலனையின் போது பல்வேறு தில்லுமுல்லுக்கள் இடம்பெற்றிருக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உண்மை நிலையைக் கண்டறிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு தொலைபேசி மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருவதாகவும் பணிப்பாளர் சபையினர் தெரிவித்தனர். (ம-9)

## சேதமடைந்த வீதியால் பயணிப்போர் சிரமம்

**சேதமடைந்த நிலையில் காணப்பட்ட வீதி அண்மைய வாகன போக்குவரத்து அதிகரிப்பால் மேலும் பல இடங்களில் சேதமடைந்துள்ளது.**

மீசாலையில் இருந்து தென்மராட்சி கிழக்குப் பகுதிக்கு செல்லும் பிரதான வீதியாகப் பயன்படுத்தப்படும் வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளதாக வீதியைப் பயன்படுத்துவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி கிழக்கின் கெற்பேலி, பாலாவி, வெள்ளாம்போக்கட்டி, உசன், விடத்தற்பளை போன்ற இடங்களுக்கு மீசாலையில் இருந்து செல்வதற்கு குறுக்கு வீதியாக உள்ளதால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், அரச அதிகாரிகள், விவசாயிகள், பொதுமக்கள் போன்றோர் பயன்படுத்தி வருகின்றனர்.

அண்மைக்காலமாக ஏ-9 வீதி அகலிப்புடனான புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் ஏ-9 வீதியில் வரும் வாகனங்கள் மீசாலை அல்லாரை வீதியைப் பயன்படுத்தி வருகின்றன.

ஏற்கனவே வீதியில் பல இடங்களில் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட வீதி அண்மைய வாகன போக்குவரத்து அதிகரிப்பால் மேலும் பல இடங்களில் சேதமடைந்துள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பல வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்ற போதிலும் இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு பொது அமைப்புக்கள் கோரிய போது இந்த வீதி, வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமானது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதியைப் பயன்படுத்துவோரின் நலன்கருதி உரிய திணைக்களத்தினர் புனரமைத்துத்தர வேண்டுமென மக்கள் கோரியுள்ளனர். (ம-9)



*தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு ஆழிப்பேரழிவின் ஆவணப் படத்தொகுப்புக் கண்காட்சி யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவால் நேற்று முன்தினம் யாழ்.செயலக மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வின் ஆவணத் தொகுப்பை வழங்கிய பொதுநூலக முன்னாள் உத்தியோகத்தர் மா.கணேஸ் மாவட்ட அரச அதிபரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (ம-ரி)*

## மகேந்திரபுரம் மக்களுக்கு அடிப்படை வசதிகள்

கொழும்புத்துறை மகேந்திரபுரத்தில் குடியமர்ந்துள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகளை எற்படுத்திக் கொடுப்பதற்கு யாழ்.மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தப் பிரதேசத்தின் தாழ்வான பகுதியில் குடியமர்ந்திருக்கும் மக்களின் குடியிருப்பு பகுதிகளுக்கு மண் நிரப்பி சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தாழ்ந்த பகுதியில் குடியமர்ந்துள்ள மக்கள் மழை காலங்களில் பெரும் சிரமம் அடைகின்றனர்.

குடியிருப்புப் பகுதிகளைச் சுற்றி வெள்ளம் தேங்கி நிற்பதால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு வெள்ளம் தேங்கி காணப்படுவதால் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்து காணப்படுகின்றது.

இதனையடுத்து இந்தப் பகுதி மக்கள் மாநகரசபையிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து இப்பகுதியின் தாழ்ந்த பகுதிக்கு மண் போட்டு நிரப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தப் பகுதி மக்களுக்கு நிலத்தடி குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்யவும் மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் கூறப்பட்டது. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

### சொற்பொழிவு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருவெம்பாவை சிறப்புச் சொற்பொழிவு காலை 6 மணிக்கு நாரந்தனை ஸ்ரீ தான்தோன்றி மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் 'திருவாசகம்'' எனும் தலைப்பில் சைவப் புலவர் கா.கமலநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ம-14)

### இறுவட்டு வெளியீடு

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சைவ ஆலோசனைச் சபையின் ''சிவநெறி'' இறுவட்டு வெளியீட்டு விழா பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் கலந்து கொள்வார். (ம-8-253)

### ஊடகவியலாளர் மாநாடு

யாழ்.மாவட்ட பௌத்த சங்கத்தின் முதலாவது ஊடகவியலாளர் மாநாடு பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.நாகவிகாரை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

### பாராட்டு விழா

நீர்வேலி வடக்கு கிராம அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற சுபசீன் அல்பிறெட்டின் சேவைநலன் பாராட்டு விழா பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி வடக்கு [illegible] மண்டபத்தில் த.பராசசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-14)

## திருடரைக் கண்டு சத்தமிட்ட யுவதிக்கு வாள்வெட்டு

தென்மராட்சி,டிசெ.28

திருடனைத் தடுக்க முற்பட்ட யுவதி திருடர்களின் வாள்வெட்டுக்கு ஆளாகிக் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு வரணி இடைக்குறிச்சியில் இடம் பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:-

வரணி இடைக்குறிச்சியிலுள்ள வீடொன்றினுள் கதவைத் திறந்து உள் நுழைந்த திருடர்கள் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட வேளையில் இளம்பெண் கூக்குரலிடவே வாளால் வெட்டிவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இதனை அறிந்த ஊர் மக்கள் திரண்டு தேடியபோது திருடர்களில் ஒருவரான வரணிமாசேரியைச் சேர்ந்த இளைஞர் வசமாக மாட்டிக்கொண்டார்.

வெட்டுக் காயத்துக்கு ஆளான விநாயகமூர்த்தி தாட்சாயினி (வயது-20) என்னும் யுவதி வாகனம்மூலம் மந்திகை ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

ஊர்மக்கள் இரவு முழுவதும் அந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய போதிலும் திருடர்கள் தப்பியோடி விட்டதாகவும் பிடிக்கப்பட்ட நபர் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-8-9)

## 'படி' –ட்ரக் விபத்து

பின்னால் வந்த வாகனத்தை கவனிக்காது முன்னால் வந்த 'படி' வாகனம் வீதியின் குறுக்கே திரும்பியதால் விபத்து ஏற்பட்டது.

சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் உள்ள பெற்றோல் நிலையத்துக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றது. காங்கேசன்துறை நோக்கி வந்த 'படி' வாகனம் திடீரென வீதியின் குறுக்கே திரும்பிய நிலையில் பின்னால்வந்த இராணுவ ரக்'படி' வாகனத்துடன் மோதுண்டு அருகில் இருந்த கடையுடன் மோதிய நிலையில் நின்றது. குறிப்பிட்ட இடத்தில் பொது மக்கள் எவரும் இல்லாமையால் உயிர் சேதம் ஏற்படாத போதிலும் ரக் வாகனம் சேதத்துக்கு உள்ளாகியது. இதே வேளை படி வாகனத்தின் சாரதி சிறு காயங்களுக்கு ஆளானார். சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. ஒன்பது சபைகளுக்கான ஆயுட்காலத்தை நீடிக்க அரசு அதிரடி முடிவு; விரைவில் அறிவிப்பு

கொழும்பு, டிசெ.28

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒன்பது உள்ளூராட்சி சபைகளுக்கான பதவிக்காலம் எதிர்வரும் மார்ச் மாதம் 17ஆம் திகதியுடன் முடிவடையவுள்ள நிலையில், மேற்படி சபைகளின் ஆயுள்காலத்தை நீடித்து தேர்தலை மேலும் ஒரு வருடத்துக்கு ஒத்திவைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது என நம்பகரமாக அறியமுடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒன்பது உள்ளூராட்சி சபைகளுக்கும் அடுத்த ஆண்டு மார்ச் மாத நடுப்பகுதியில் தேர்தலை நடத்த அரசு முன்னர் தீர்மானித்திருந்தாலும் முக்கிய சில காரணிகளைக் கருத்திற்கொண்டு தேர்தலை ஒத்திவைத்துள்ளது எனவும் தெரியவருகிறது.

மட்டக்களப்பு மாநகரசபை, மண்முனைப்பற்று பிரதேச சபை, மண்முனைப்பற்று தென்மேற்குப் பிரதேச சபை, மண்முனைப்பற்று தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச சபை, மண்முனை மேற்கு பிரதேச சபை, கோரளைப்பற்று வடக்குப் பிரதேச சபை, கோரளைப்பற்று பிரதேச சபை, ஏறாவூர்பற்று பிரதேச சபை மற்றும் போரதீவுப்பற்று பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலே இவ்வாறு மேலும் ஒரு வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளிடமிருந்து கிழக்கு மாகாணம் கைப்பற்றப்பட்டதை அடுத்து கடந்த 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இந்த 9 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டது.

இந்த உள்ளூராட்சி சபைகளின் நான்கு ஆண்டு பதவிக்காலம் இந்த ஆண்டு மார்ச் 17ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது. எனினும், அரசு இந்த உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலத்தை ஓர் ஆண்டுக்கு நீடித்து உத்தரவிட்டது.

**மார்ச் மாத நடுப்பகுதியில் தேர்தலை நடத்த அரசு முன்னர் தீர்மானித்திருந்தாலும் முக்கிய சில காரணிகளைக் கருத்திற்கொண்டு தேர்தலை ஒத்திவைத்துள்ளது**

இந்த ஓர் ஆண்டு பதவிக்கால நீடிப்பு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதையடுத்தே பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துவருகின்றது எனவும் தெரியவருகிறது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டதிட்டங்களில் திருத்தங்களை இதற்கு முன்னதாக அரசு செய்யுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## இரத்தோட்டையில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

''நேற்றுமுன்தினம் மாலை மோதல் இடம்பெற்றுள்ளது. 36 வயதுடைய கோபால் அடிகாயங்களால் உயிரிழந்துள்ளார்'' என்று பொலிஸார் தெரிவித்தனர். மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ளது இரத்தோட்டை.

இரத்தோட்டையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியை பார்வையிட சென்றுகொண்டிருந்தபோது இரு குழுக்கள் இடையே மோதல் ஏற்பட்டது என்கின்றனர் பொலிஸார்.

தாக்குதலில் காயமடைந்த கோபால் இரத்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளார்.

இந்தக் கொலை தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. (சி)

## மஞ்சள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தல்களிலும் சேகரித்துள்ளனர்.

அநுராதபுரம், திரிப்பனே, 50 ஏக்கர் அத்துன்கம மற்றும் லபுனோருவ ஆகிய பிரதேசங்களிலும் காலை 8.30 மணியளவில் ஆரம்பித்த இந்த மஞ்சள் மழை சுமார் 10 நிமிடங்கள் வரை பெய்துள்ளது. (ஐ)

## உணவு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

உள்ளிட்ட நோய்கள் தொற்றுவதற்குச் சாத்தியம் உள்ளன. பெரியளவில் அவ்வாறான தொற்று ஏதும் இதுவரை ஏற்பட்டிருக்கவில்லை. எனினும் அவ்வாறு ஏற்படச் சாத்தியம் உள்ளது.

எனவே கொதித்தாறிய நீரை குளோரின் கலந்து பருக வேண்டும். உணவு வகைகளில் சுகாதாரத்தைப் பேணவேண்டும். நிலத்தில் வைத்தபடி சந்தைகளில் விற்பனை செய்யப்படும் மரக்கறி வகைகளிலும் பொதுமக்கள் விழிப்பாக இருத்தல் வேண்டும். மரக்கறி வகைகள் அரை அவியலுடனும். பச்சையாக பதப்படுத்தியும் உணவாக உட்கொள்ளப்படுவதனால் அவற்றில் மிக அவதானமாக இருக்கவும்.

பழங்களைக் கொள்வனவு செய்வது, கொள்வனவு செய்து வைத்திருப்பது, அவற்றை உண்பது என்பன தொடர்பில் முக்கியமாக சிறார்களின் உணவில் சுகாதாரத்தைப் பேணுங்கள் என்று சுகாதாரப் பகுதியினர் மேலும் அறிவுறுத்தியுள்ளனர். (த-4)

## காற்று...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

காற்று வீசக்கூடும். இது மணிக்கு 50 முதல் 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும். கடல் கொந்தளிப்பாகக் காணப்படும். எனவே மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இடிமின்னல் தாக்கும் என்பதனால் வீடுகள், அனைத்து இடங்களிலும் மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக இருக்குமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர் - என்றார். (த-4)

## 3 மாகாண...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மேற்படி மாகாணசபைகளின் ஆயுள்காலம் முடியஒரு வருடத்துக்கும் மேல் இருக்கும் சூழ்நிலையில் அரசு இந்த அதிரடி முடிவுக்கு வந்திருக்கிறது.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் அரசு தொடர்பான மக்களின் மனநிலையை அறிந்துகொள்ளும் நோக்கில் இவ்வாறு தேர்தலுக்குச் செல்ல அரசு முடிவுசெய்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, வடமாகாணசபைத் தேர்தலை 2013ஆம் ஆண்டின் முற்பகுதியில் நடத்துவது தொடர்பிலும் அரச உயர்மட்டம் இன்னும் தீர்க்கமான முடிவு எதனையும் எடுக்கவில்லை என்று அந்த அமைச்சர் தெரிவித்தார். (சி)

## இரணைமடு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கொள்ளவு 34 அடியாக உள்ள நிலையில் குளத்துக்கான நீர் வரத்து மேலும் அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தண்ணீர் வரத்து அதிகரித்தாலும் குளத்துக்கு எந்த ஆபத்தும் இல்லை என என்.சுதாகரன் தெரிவித்தார்.

இரணைமடுக்குளத்துக்கான நீர் வரத்து தற்போது விநாடி ஒன்றுக்கு 8 ஆயிரத்து 712 கன அடியாக உள்ளது.

மழை தொடருமென்பதால் சகல திணைக்கள உத்தியோகத்தர்களும் கடமைக்கு அமர்த்தப்பட்டு குளங்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-6-18)

## வெள்ளத்தில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

என்று அந்த மக்கள் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

குடிசைகளுக்குள் மேலும் வெள்ளம் புகாதவாறு மண் அணைகளை அமைப்பதிலும், தேங்கியுள்ள வெள்ளத்தை அகற்றுவதிலும் நேற்று முழு நாளும் தாம் ஈடுபட்டனர் என்று அந்த மக்கள் கூறுகின்றனர்.

''ஓர் அடி உயரத்துக்கு வெள்ளம் தேங்கி நிற்பதால் வெளியே நடமாட முடியாத நிலை உள்ளது. இதனால் அன்றாட அலுவல்களை நிறைவேற்றுவதில் சிரமங்களை எதிர்கொள்கிறோம்'' என்கின்றனர் மக்கள். (த-400)

## பல்கலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

னாய்வாளர்கள் என்னிடம் கூறினர்'' என்று தடுப்பில் உள்ள மாணவர்களின் தாய்மாரிடம் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், புனர்வாழ்வு முகாமில் உள்ள நான்கு மாணவர்களையும் யாழ். பல்கலைக்கழக பீடாதிபதிகள் சிலரும் விரிவுரையாளர்களும் நேற்றுச் சென்று பார்வையிட்டனர். தலைவர் பிரபாகரன் பற்றித் தம்மிடம் விசாரணை ஏதும் நடத்தப்படவில்லை என்று அப்போது மாணவர்கள் பீடாதிபதிகளிடம் தெரிவித்துள்ளனர்.

விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் கந்தசாமி, கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன், முகாமைத்துவ பதில் பீடாதிபதி திருமதி அலோசியஸ், பேராசிரியர் மணிவாசகர், மூத்த விரிவுரையாளர் எஸ்.தேவ ரஞ்சினி ஆகியோர் மாணவர்களைச் சந்தித்துப் பேசினர். அவர்களுடன் மாணவர்களின் பெற்றோர்களும் சென்றிருந்தனர்.

தமது விரைவான விடுதலையை எதிர்பார்த்துத் தாம் காத்திருக்கின்றனர் என்று மாணவர்கள் தெரிவித்துள்ளனர். கொழும்பு மேலிடத்திலிருந்து உத்தரவு கிடைத்தால் அவர்களை விடுவித்துவிடுவோம் என்று பேராசிரியர்களிடம் முகாம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரான பவானந்தன், அதன் செயலாளர் ப.தர்சானந், ஒன்றிய உறுப்பினர்களான ஜெனமேஜெயந்த், எஸ்.சொலமன் ஆகியோர் நவம்பர் மாத இறுதியில் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கபட்டுள்ளனர்.

அவர்களுக்கு உணவு மற்றும் படிப்பதற்கான புத்தகங்கள் கொடுப்பதற்கு நேற்று அனுமதிக்கப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர். (ங-4)

## சொத்து...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யிடாது இருக்கும் அரசியல்வாதிகளை அவர்களது பெயர், விவரங்களுடன் அம்பலப்படுத்துவோம் - எனத் தெரிவித்துள்ளார் என்று திணைக்களம் குற்றஞ்சாட்டுகிறது.

அரசியல்வாதிகள் தமது சொத்து விவரங்களை வெளியிடவேண்டும் என தேர்தல் திணைகளத்தினால் பல தடவைகள் அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் சில அரசியல்வாதிகள் அதனை உதாசீனம் செய்துள்ளனர்.

இவ்வாறு அவ்வறிவுறுத்தலை உதாசீனம் செய்யும் அரசியல் வாதிகளது பெயர்களை மக்களுக்கு அம்பலப்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொள்ளும்படி பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரொஹான் ஹெட்டியாராட்சி தேர்தல் ஆணையாளரிடம் ஏற்கனவே கேட்டிருந்தார். (சி)

## 12,000 குடும்ப...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

குளங்களுக்கான நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில் தாழ் நிலப் பகுதிகளில் இருக்கும் மக்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி கிளிநொச்சி இடர் முகாமைத்துவப் பிரிவு கேட்டுள்ளது.

### முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தின் 5 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 2 ஆயிரத்து 362 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 796 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் ஆயிரத்து 120 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 505 பேரும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவில் 278 குடும்பங்களைச் சேர்ந்த 972 பேரும் மாந்தை கிழக்கில் 328 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகிறது என்று அதிகாரிகள் கூறினர்.

துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் 420 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 457 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாடசாலைகளிலும் பொதுக் கட்டடங்களிலும் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு குளம் நிரம்பி வழிவதுடன் பேராறும் பெருக்கெடுத்து ஓடுகிறது. ''உடனடியாக மக்களின் பாதிப்புத் தொடர்பில் முழுமையாகக் கணக்கிட முடியாதுள்ளது. பிரதேச செயலக ரீதியாக பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. நாளை காலையே (இன்று) முழு விவரங்களும் அறிய வரும்'' என்றார் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன்.

ஒட்டுசுட்டானில் பண்டாரவன்னி, கருவேலன்கண்டல், கற்சிலைமடு, பேராறு, கனகரத்தினபுரம் வசந்தபுரம், முத்துஐயன்கட்டு, மூத்தவிநாயகர் முதலாம் கண்டம், இரண்டாம் கண்டம் ஆகிய இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

முல்லைத்தீவு-ஒட்டுசுட்டான் வீதியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. பரந்தன்-புதுக்குடியிருப்பு வீதியை மூடி மூங்கிலாறு பெருக்கெடுத்து பாய்கிறது. போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுக்கு சுற்றுலா வந்த 150 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் வெளியேற முடியாமல் நேற்றிரவு உடையார்கட்டுப் பகுதியில் சிக்கிக்கொண்டிருந்தன. இதனால் சுற்றுலா வந்த பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனிக்குளத்துக்கான நீர் வரத்து அதிகரித்திருப்பதால் அதன் வால்கட்டு வெட்டிவிடவேண்டிய தேவை ஏற்படாலம் என்றும் குளம் உடைப்பதற்கான எந்த சாத்தியங்களும் இல்லை என்றும் நீர்ப்பாசன அதிகாரிகள் தெரிவித்தனர். முன்னெச்சரிக்கையாக வால்கட்டுப் பகுதியில் இருக்கும் கிடாபிடிச்சகுளம் கிராமத்தில் வசிக்கும் 25 குடும்பங்களைப் பாதுகாப்பாக வெளியேறுமாறு கோரப்பட்டுள்ளதாகவும் துணுக்காய் பிரதேச செயலர் தெரிவித்தார்.

### மன்னார்

மன்னார் மாவட்டத்தில் 4,229 குடும்பங்களைச் சேர்ந்த [illegible] பேர் பாதிக்கப்பட்டு பொது இடங்களிலும் நலன்புரி நிலையங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ள நிலைமை தொடர்பாக அவசர கூட்டம் ஒன்று மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டி மெல் தலைமையில் நடைபெற்றது. இதில் மக்களுக்கான அவசர உதவிகள், இடர்காலப்பணிகள் தொடர்பில் ஆராயப்பட்டது. கட்டுக்கரை குளத்தின் நீர் முகாமைத்துவம் தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாருக்கான வெளிப்போக்குவரத்துகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன. மன்னார்-மதவாச்சி வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. பாலியாறு பெருக்கெடுத்துள்ளதால் ஏ-32 வீதியும் போக்குவரத்து செய்யமுடியாத அளவுக்கு வெள்ளம் பாய்ந்து வருகிறது.

இடம்பெயர்ந்த மக்கள் மாவட்டத்தின் 17 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் கூறினர்.

### வவுனியா

வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை வெள்ளம் காரணமாக 4650 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 450 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவில் 8 முகாம்களும் சிங்கள பிரதேச செயலகப் பிரிவில் ஒரு முகாமும் செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவில் 16 முகாம்களிலுமாக 25 முகாம்களில் மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாக்குளம், அழகல்லகுளம், கனகராயன்குளம் என்பன உடைப்பெடுக்கும் நிலையில் உள்ளன. வவுனியா மாவட்டத்தில் இதுவரையும் 53 சிறிய குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. கிராமங்களுக்கான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

### குளங்களின் நீர் மட்டம்

நேற்றிரவு கிடைத்த தகவல்களின் படி சில குளங்களின் நீர்மட்டமும் அவற்றில் இருந்து வெளியேறும் நீர் மட்டமும் வருமாறு-

கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் குள நீர்மட்டம் 26 அடி- 2 அடி வான் பாய்கிறது. கல்மடுக்குளம் 26 அடி - 2 அடி வான் பாய்கிறது. பிரமந்தனாறுகுளம் 13 அடி 6 அங்குலம் - ஒரு அடி 6 அங்குலம் வான் பாய்கிறது. புதுமுறிப்புக்குளம் 17 அடி 8 அங்குலம் - ஒரு அடி 2 அங்குலம் வான்பாய்கிறது. கனகாம்பிகைக்குளம் 11 அடி 3 அங்குலம் -ஒரு அடி 3 அங்குலம் வான்பாய்கிறது. வன்னேரிக்குளம் 10 அடி 3 அங்குலம் -9 அங்குலம் வான்பாய்கிறது.

வவுனிக்குளத்தின் நீர் மட்டம் 27 அடி - 2 அடி வான் பாய்கிறது. ரென்னியன்குளம் 11 அடி -5 அங்குலம் வான் பாய்கிறது. ஐயங்கன்குளம் 13 அடி - 6 அங்குலம் வான்பாய்கிறது. அம்பலப்பெருமாள் குளம் 10 அடி - 5 அங்குலம் வான் பாய்கிறது. கோட்டைகட்டிய குளம் 9 அடி - 7 அங்குலம் வான் பாய்கிறது.

மல்லாவிக்குளம் 11அடி - 5 அங்குலம் வான்பாய்கிறது. மருதங்குளம் 11 அடி - 8 அங்குலம் வான்பாய்கிறது. கல்விளான்குளம் 11 அடி 9 அங்குலம் - 4 அங்குலம் வான்பாய்கிறது. கொல்லவிளான் குளம் 11 அடி 6 அங்குலம் - 6 அங்குலம் வான்பாய்கிறது. பனங்காமம்குளம் 9 அடி - 5 அங்குலம் வான்பாய்கிறது. பழைய முறிகண்டிக்குளம் 9 அடி 6 அங்குலம் - 6 அங்குலம் வான்பாய்கிறது. தேறாங்கண்டல் குளம் 11 அடி 6 அங்குலம் - 4 அங்குலம் வான்பாய்கிறது. (ஐ-6-18-400-500-422-50-12)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஒரே திசையில் மீண்டும் தடம் பதித்து வேண்டாத விளைவைத் தேடுவதா...?

போர்ச் சூழலுக்குள் வாழ்ந்ததைப் போன்ற உணர்வை கடந்த சில வாரங்களாக வடபகுதி மக்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். கைதுகள் பெருகத் தொடங்கியுள்ளன. நீண்ட போர் தந்த வடுவை மெல்ல ஆற்றிக்கொண்டு, இயல்பு வாழ்வுக்குள் நுழைந்த தமிழ் மக்கள் ஆசுவாசப் பெருமூச்சை விடுவதற்கு இடையில் மீண்டும் அவர்களின் கழுத்தை இறுக்குகிறது காலம்.

இதே போன்ற ஓர் இக்கட்டான சூழல்தான் 1979 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சியிலும் நிலவியது. ஜே.ஆர், பொலிஸாருக்கு மிதமிஞ்சிய அதிகாரங்களை வழங்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தைக் கொண்டுவந்து எப்படியான அடக்குமுறைகளைத் தமிழர் பகுதிகளில் கட்டவிழ்த்து விட்டாரோ அதேபோன்ற ஒரு பயங்கர நிலைமையின் ஆரம்பப்புள்ளியை இப்போது உணரமுடிகிறது.

இந்த ஆரம்பம் இன்னும் விரிவாகி மீளவும் ஒரு படுகுழிக்குள் தம்மை தள்ளிவிடுமோ என்ற அச்சம் தமிழ் மக்களிடையே மிக வேகமாகத் தொற்றத் தொடங்கியுள்ளது.

இந்த வருடம் அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் தினத்துக்குப் பின்னரே கைது நடவடிக்கைகள் முழுவீச்சில் இடம்பெறத் தொடங்கின. கொட்டாவி விட்டுக் கொண்டு ஒருமூலையில் தூங்கிக்கிடந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு திடீரென்று 'உசார்' வந்துவிட்டது.

அதன் விளைவாக வடக்கில் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட 48 பேர் இதுவரை கைதாகியுள்ளனர். இவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்று பாதுகாப்புத் தரப்புக் கூறுகிறது.

ஆனால் உண்மையில் வவுனியாவில் உள்ள நலன்புரி முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களே இப்போது விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் கைதுசெய்யப்படுகிறார்கள்.

போர் முடிவடைந்து மூன்றரை வருடங்கள் கடந்த நிலையில், தற்போது இத்தகைய கைது வேட்டை ஆரம்பமாகி உள்ளது. ஆயினும் கடந்த காலங்களைப் போல இத்தகைய கைதுகள் 'இனந்தெரியாதோரால்' நிகழ்த்தப்படவில்லை. இதுவரை கைதுசெய்யப்பட்ட 48 பேரையும் கைதுக்கான உறுதிப்பத்திரத்தை வழங்கிய பின்னரே பொலிஸார் கொண்டு சென்றுள்ளனர்.

ஆகையால் கைதானவர்களுக்கு என்ன நடந்தாலும் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு அரசுக்கும், பொலிஸாருக்கும் உண்டு. கடந்த காலங்களைப் போன்று கைதானவர்களைக் காணாமல் போனவர்களாக மாற்றும் நிலையை இந்த உறுதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை தடுத்துள்ளது என்பது ஓரளவில் ஆறுதலே. இத்தனை துன்பத்திலும் இது மட்டுமே ஆறுதலான ஒன்று என்றும் சொல்லலாம்.. ஆயினும் நெருக்குவார சூழலுக்கான பிள்ளையார் சுழியாகவே இந்தக் கைதுகளை தமிழர்கள் நோக்குகின்றார்கள் என்பதே உண்மை நிறைந்த யதார்த்தம்.

கைது செய்யப்பட்ட அனைவரையும் விசேட புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்ப அரசு தீர்மானித்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆரின் காலத்தில் கைதான தமிழ் இளைஞர்கள் பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டதைப்போன்று, தற்பொழுது கைதானோரும் புனர்வாழ்வு என்ற பெயரில் அங்கேயே அனுப்பப்படுகிறார்கள்.

வடக்கின் இயல்பு நிலையைப் பாதிக்கக்கூடிய இத்தகைய கைதுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படாவிட்டால், மக்கள் மனதில் உள்ள அச்சம் இன்னும் அதிகரிக்கும். அரசின் மீதும், சிங்கள இன மக்கள் மீதும் சந்தேகம் தோன்றும். இத்தகைய செயற்பாடுகள் அனைத்துலக ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் இனங்களுக்கு இடையேயான நல்லிணக்க முயற்சிகளுக்கு வீச்சுடன் வேட்டுவைத்துவிடும் என்பது மட்டும் நிச்சயம்.

மேலும் தமிழ் இளைஞர்களைக் கைது செய்து தடுத்து வைப்பதற்கான சந்தர்ப்பம் ஒன்றைப் பாதுகாப்புத் தரப்பு நீண்ட நாள்களாக எதிர்பார்த்துக் காத்திருந்தது போலவே தெரிகிறது.அதனாலேயே யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாவீரர்தினச் சம்பவங்களைச் சாட்டாக வைத்து கைதுப் படலத்தில் அரசபடைகள் குதித்துள்ளன.

"மிகவும் திட்டமிட்ட முறையில் தமிழ் இளைஞர்களை வன்முறைகளில் சம்பந்தப்படுத்தி அவர்களைப் பயங்கரவாதிகளாக காட்டுவதற்கு அரசு முயற்சி செய்கின்றது. இத்தகைய சதி வலையில் மாட்டிக்கொள்ளாது தமிழ் இளைஞர்கள் புத்திசாதுரியத்துடன் செயற்பட வேண்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுவதையும் கருத்தில் கொள்ள வேண்டிய தேவை எழவே செய்கிறது. இன்றைய நிலையில் அமைதிவழிப் போராட்டமே பொருத்தமானது என்பதும் அவரது கருத்து.

இறுதிப் போரில் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விட்டாலும் விடுதலைப் புலிகள் இயக்கம் இன்னும் வடக்கில் செயற்படுவது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தவேண்டிய அவசியம் அரசுக்கு இருக்கிறது. தமிழ் இளைஞர்கள் வன்முறையில் இறங்கவேண்டும், அவர்களைப் பயங்கரவாதிகளாகக் காட்ட வேண்டும். இதுதான் அரசின் திட்டம். இதற்குப் பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது.

தமிழர் தரப்புக்களுடன் அரசியல் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதில் இருந்து வரும் முட்டுக்கட்டையை நியாயப்படுத்தவும், வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை தொடர்ந்து பேணிவரவும், பாதுகாப்புத்துறையில் இந்தியாவின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கும் அரசின் இந்தப் புலிப் பூச்சாண்டி உதவும் என்று அரசு முழு அளவில் நம்புகிறது என்பதில் எள்ளளவும் சந்தேகம் இருக்க இயலாது.

ஆனால் அதன் விளைவுகள் எதிர்காலத்தில் மிகவும் மோசமானவையாகவே மாறக்கூடும். வரலாறு எப்போதும் ஒரே திசையில் தடம் பதிப்பது இல்லை. அது மீளவும் திரும்பும் போது மோசமான விளைவுகளையே பரிசளித்துவிடக் கூடும் என்ற உண்மையை, நியதியை மறுப்பதும் ஆக்க பூர்வமானது அல்லவே...!

# உலகத்தமிழ் இணைய மாநாடு சிதம்பரத்தில் இன்று ஆரம்பம்

உலகத்தமிழ் தகவல் தொழில் நுட்ப மன்றம் (உத்தமம்) அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் மொழியியல் உயர் ஆய்வு மையத்துடன் இணைந்து நடத்தும் உலகத் தமிழ் இணைய மாநாடு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அண்ணாமலை பல்கலைக்கழக உலகத் தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றத்தின் தலைவர் எம்.மணிவண்ணனின் தலைமையில் அண்ணாமலை பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி எம்.இராமநாதனின் தொடக்க உரையுடன் ஆரம்பமாகவிருக்கின்றது.

தமிழ்த் தகவல் தொழில் நுட்ப விருத்தியைக் கருப்பொருளாகக் கொண்டு உத்தமம் நிறுவனத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் உலகத் தமிழ் இணைய மாநாடு இந்த வருடம் சிதம்பரத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரிட்டன், இலங்கை, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், இந்தியா, கனடா, மலேசியா உட்பட பல நாடுகளிலிருந்தும் வளவாளர்கள் பங்குபற்றித் தமது ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவிருக்கின்றனர்.

இன்றைய காலை அமர்வில் பிரிட்டனைச் சேர்ந்த கலாநிதி சிவா.பிள்ளை, சிங்கப்பூரைச் சேர்ந்த எஸ்.மணிவண்ணன், மலேசியாவைச் சேர்ந்த சீ.எம். இளந்தமிழ், இலங்கையிலிருந்து சிவா.அனுராஜ், ஆஸ்திரேலியாவிலிருந்து முகுந்.சுப்பிரமணியம், இந்தியாவைச் சேர்ந்த கலாநிதி இராமமூர்த்தி ஆகியோர் அறிமுகவுரைகளை வழங்கவுள்ளனர்.

இன்றும் நாளையும் பல்வேறு அமர்வுகளாக வெவ்வேறு அரங்குகளில் இது நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப் படவுள்ள ஆய்வுக்கட்டுரைகளின் விவரம் வருமாறு :

பேராசிரியர் வி.ராமலிங்கம் தலைமையில் கனியன் பூங்குன்றனார் அரங்கு

1. COMPUTER BASED TAMIL BRAILLE SYSTEM & A Review, S Santhosh Baboo, V.Ajantha Devi
2. பயனர் நோக்கில் "மென்தமிழ்" தமிழ்ச்சொல்லாளர், இல. சுந்தரம்
3. On implementing a single tap keypad software for Tamil-V Krishnamoorthy
4. Tamil Publishing for Mobile platforms & Tools Utilities-Hari Prasath, Ganesh Ram
5. தமிழ் மென்பொருள்களும் மக்கள் பாவனையும்-அனுராஜ் சிவராஜா.
6. தமிழ் தொடர்புசால் தரவுதளம் மற்றும் நிரலாக்கம்-முத்துக்குமார் ஆறுமுகம், நிஸங்கா முத்துக்குமார் பர்வத், கிறிஸ்டினா லவ்லீனா.

கலாநிதி எல்.ராமமூர்த்தி தலைமையில் தொல்காப்பியர் அரங்கு

1. தமிழ்மொழியில் எழுத்துகளின் பயன்பாட்டுநிலை: நிரல்களும் வரைபடங்களும்-நா.த. லோகசுந்தர முதலி.
2. தமிழ்மென்பொருள் உருவாக்கத்திற்கு அடிப்படை தேவையான தமிழ்த்தரவுகள்-அ. ஜேம்ஸ், ப.அர.நக்கீரன்.
3. தரவகம்-இரா. பன்னிருகை வடிவேலன்.
4. தமிழில் ஓலைச்சுவடி தரவுத் தளம்-கோவி. சக்கரபாணி.
5. Issues while developing annotated corpora for Modern Tamil-K.Umaraj
6. இணைய வழி தமிழ் ஆய்வு வங்கி-கா. ஆனந்தகுமார்.

டாக்டர் சிவா பிள்ளை தலைமையில் ஔவையார் அரங்கு.

1. கணினி வழி தமிழ் கற்றல் கற்பித்தல் குறித்தஆய்வுகள்-சிவா பிள்ளை.
2. தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் தமிழ் இணையப் பயன்பாடு-கவி.செங்குட்டுவன்.
3. கணினிவழி தமிழ் கற்றல் மற்றும் கற்பித்தல் குறித்தான ஆய்வுகள் -லூயிஸ் ஜசாக் குமார்.
4. எதிர்கால இணைய வகுப்பறைகள்-ப.சு. மூவேந்தன்.
5. இணையதளத்தில் தமிழ் வழிக் கற்றலில் மேன்மை-சு.கணேசன்.
6. தமிழ் இணையப் பயன்பாட்டில் கல்லூரி மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் ஓர் ஆய்வு-தமிழ்ப்பரிதி. மாரி 311
7. Mobile Learning as support to Tamil Language Teaching-P. KUMARESAN, P. VIJAYA (த)

### அதிக வருமானத்தைப் பெற வசதியாக

# இலங்கை சுற்றுலாத்துறையுடன் வடக்கு முதலீட்டாளர் இணைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

வடமாகாண சுற்றுலாத்துறையுடன் இணைந்துள்ள முதலீட்டாளர்களை இலங்கை சுற்றுலாத் துறையுடன் இணைத்து முதலீட்டாளர்கள் அதிகூடிய வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளை வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் மேற்கொள்ளவுள்ளது என்று ஒன்றியத் தலைவர் ரி.வை.சுந்தரேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடமாகாண சுற்றுலாத்துறையுடன் இதுவரை 23 முதலீட்டாளர்கள் இணைந்துள்ளனர். இந்த முதலீட்டாளர்கள் தனியாக வடமாகாணத்தில் மட்டும் சுற்றுலாத் துறையூடாக வருமானத்தை பெறாமல் இலங்கை சுற்றுலாத் துறையுடன் இணைந்தால் இன்னும் அதிகூடிய வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்கான வழிகாட்டல்களை வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் வழங்கவுள்ளது.

இலங்கையில் அதிகூடிய வருமானத்தைப் பெறக்கூடிய துறையாக சுற்றுலாத்துறை உள்ளது. ஆனால் இதனைப் பயன்படுத்துவதற்கு முதலீட்டாளர்கள் முன்வருவதில்லை.

எனவே, முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் ஒன்றியத்துடன் இணைந்துள்ள முதலீட்டாளர்களைத் தனியாக வடமாகாணத்தில் மட்டுமல்லாது இலங்கையின் பல பாகங்களிலும் சுற்றுலாத் துறையூடாக அதிகூடிய வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை சுற்றுலாத்துறையுடன் இணைத்து வெளிநாடுகளில் இருந்து வருகைதரும் உல்லாசப் பயணிகளுக்கு முதலீட்டாளர்கள் தமது முதலீட்டுக்கு ஏற்றவகையில் குறிப்பாக போக்குவரத்து, உணவு, தங்குமிடம் போன்றவற்றை வழங்கி குறிப்பிடப்பட்ட வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உல்லாசப் பயணிகளின் நம்பிக்கைத் தன்மை, விருப்பம் என்பவை முதலீட்டாளர்களுக்கு சாதகமாக அமைவதால் இலங்கை சுற்றுலாத் துறை ஒன்றியத்துடன் இணைந்து முதலீட்டாளர்கள் வருமானத்தை அதிகமாகப் பெறுவதற்கான ஏற்பாடுகளை வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் மேற்கொள்ளவுள்ளது-என்று தெரிவித்தார். (ம-14)

# வடக்கு உள்ளூராட்சிச் சபைகளின் ஊழியருக்கு பதவி உயர்வு வழங்குக

### ஆளுநரிடம் பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

அம்பாறை,டிசெ.28

மலரப்போகும் 2013 புதிய வருடத்திலாவது மாநகரசபை, நகரசபை, பிரதேசசபைகளில் கடமைபுரியும் வடமாகாண உள்ளூராட்சிசபை ஊழியர்களுக்குப் பதவி உயர்வுகள் வழங்க ஆவன செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம், வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் சார்பில் சங்கத் தலைவரும், பிரபல தொழிற்சங்க வாதியுமான எஸ்.லோகநாதன் இந்தக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

தங்களது அனுமதியுடன் 11.02.2011 இல் திருத்தம் செய்யப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத உள்ளூராட்சி சபை ஊழியர்களுக்கான பதவித்திட்டப் பிரமாணம் தயாரிக்கப்பட்டு வடக்கில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பதவித் திட்டப் பிரமாணம் வெளியிடப்பட்டு சுமார் ஒரு வருடகாலம் கடந்தும் வடமாகாண உள்ளூராட்சி சபை ஊழியர்களுக்குப் பதவி உயர்வுகள் வழங்க ஆவன செய்யப்படவில்லை.

எனவே, புதிய வருடத்திலாவது உள்ளூராட்சி சபைகள் சிறு பணியாளர்களுக்குரிய பதவி உயர்வான வகுப்பு II, வகுப்பு I ஐ வழங்க தாங்கள் உரிய பணிப்புரையை விடுக்க வேண்டும்.

வடமாகாண . உள்ளூராட்சி சபைகளின் அதிகாரிகளுக்கு இந்த விடயம் தொடர்பில் கவனமெடுப்பதற்கான பணிப்புரையை வழங்குமாறும் கோருகின்றோம்.

இவ்வாறு பதவி உயர்வு வழங்கும் போது நீண்டகாலமாகப் பதவி உயர்வின்றிப் பாதிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தங்களது அனுமதியுடன் வெளியிடப்பட்ட உள்ளூராட்சி சபை அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்களுக்கான பதவித் திட்டத்துக்கு அமைவாகப் பதவி உயர்வுகள் வழங்கப்பட ஆவன செய்யப்பட வேண்டும்.

அத்துடன் நீண்டகாலமாகப் பதவி உயர்வின்றிக் கடமை புரியும் ஊழியர்களது நலன் கருதி சுற்றறிக்கை 01/86 இல் குறிப்பிடப்படுகின்ற அடிப்படைக் கல்வித் தகைமையையும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மன்னார் மதவாச்சி வீதியை குறுக்கறுத்தோடும் வெள்ளம்


கட்டுக்கரைக்குளத்தின் துரிசும் திறந்துவிடப்பட்டுள்ளது.


வெள்ளக்காடாக மாறியுள்ள தம்பனைக் கிராமம்


இரணைமடு குளத்தின் வெள்ள நீர் ஆக்கிரமித்த வீடு.

# வெள்ளம் பாதித்த வன்னி மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு

வவுனியா, டிசெ.28

கடுமையான வெள்ளப் பாதிப்புக்குள்ளான வன்னி மாவட்ட மக்களுக்கான நிவாரண வசதிகளுக்கு தேவையான நிதியை இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர ஒதுக்கீடு செய்துள்ளதாக வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும்,அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

தற்போதைய சீரற்ற கால நிலையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பல குளங்கள் பெருக்கெடுத்துள்ளமை மற்றும் மல்வத்து ஓயாவின் நீர் மன்னார் மாவட்டத்தை நோக்கி வந்தமை ஆகிய காரணங்களால் மன்னார் மாவட்டதில் மடு,முசலி, நானாட்டான், மன்னார் நகர பிரதேச செயலகப்பிரிவுகளில் உள்ள மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும், இவர்களுக்கு தேவையான நிவாரணப் பணிகளுக்குப் போதுமான நிதியை மாவட்ட செயலாளர்களுக்கு வழங்குமாறு தாம் அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கேட்டுக் கொண்ட தற்கமைவாகப் போதுமான நிதியை அவர்ஒதுக்கீடு செய்துள்ளார் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை வெள்ளத்தால் மடு,சிலாவத்துறை பிரதேசங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால் நிவாரணப் பொருள்களை அந்தக் கிரமங்களுக்கு எடுத்து செல்ல முடியாதுள்ளமையால் ,கடற்படையின் உதவியுடன் படகு மூலம் அதனை விநியோகிக்கப் போதுமான நடவடிக்கையெடுக்குமாறு அமைச்சர் பதியுதீன்,பிரதேசத்துக்குப் பொறுப்பான கடற்படை அதிகாரியிடம் கோரியுள்ளார்.

வெள்ள இடரினால் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கத் தேவையான உதவிகளை நல்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபயவர்தனவிடம் அமைச்சர் றிஷாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்னி பிரதேசத்தில் ,மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் பாதிப்புக்குள்ளான விவசாயிகளின் விவரங்களைச் சேகரிக்குமாறு வட மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஹால்தீன், பிராந்திய விவசாய பணிப்பாளர்கள் ஆகியோருக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக அமைச்சின் ஊடக பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. (க)

# கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்து

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை எல்லைகளுக்குள் கால்நடைகளை வளர்ப்போர் அவற்றை இரவு நேரங்களில் கட்டி வளர்க்குமாறும் தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடிவடிக்கை எடுக்கப்படும் எனவும் வவுனியா தெற்கு பிரதேச சபையினர் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

மன்னார் - வவுனியா வீதியில் இரவு நேரங்களில் மாடுகள் நடமாடுவதுடன் வீதிகளில் தமது இரவுப் பொழுதைக் கழிப்பதனால் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன் அடிக்கடி விபத்துக்களும் இடம்பெற்று வருவதாக பொதுமக்களால் பிரதேச சபையிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கால்நடைகளை வளர்ப்போர் அவற்றை இரவு நேரங்களில் கட்டி வளர்க்கு மாறும் இதனை மீறிச் செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பிரதேச சபையினர் அறிவித்தல் விடுத்துள்ளனர். பொது இடங்களில் கட்டாக் காலிகளாகத் திரியும் கால் நடைகள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் பிடிக்கப்பட்டு பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் எனவும் துண்டுப் பிரசுரம் மூலம் பொதுமக்களுக்கு பிரதேச சபையினரால் மேலும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. (த-400)

## மன்னாரில் சிப்பி கைப்பணி கண்காட்சி

மன்னார்,டிசெ.28

தேசிய அருங்கலை பேரவை ஏற்பாடு செய்திருந்த மன்னார் மாவட்டத்தின் பாரம்பரிய கைப்பணி முயற்சியான சிப்பியினால் உருவாக்கப்பட்ட கைப்பணி பொருள்களின் கண்காட்சி கடந்த 24 ஆம் திகதி மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் சரத் ரவீந்திர, மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது தேசிய மட்டத்தில் ஏற்கனவே வெற்றி பெற்ற கைப்பணியாளருக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (த-12)


நத்தார் தினத்தை முன்னிட்டு வன்னியில் உள்ள சிறுவர் இல்லங்களில் வாழும் சிறுவர்களுக்கு பிரான்ஸ் ரி.ஆர்.ரி. வானொலி, [illegible] பொருள்களை வழங்கியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு [illegible] வைகறை சிறுவர் இல்லத்துக்கு இந்தப் பரிசுப் பொருள்களை வழங்கினார். (த-400)

முல்லைத்தீவு மாவட்டம் எங்கும்

# கடும் மழை காரணமாக களையிழந்த கிறிஸ்மஸ்

> குழந்தை யேசு ஆலயப்பகுதியில் அமைக்கப்பட்ட கொட்டகையில், மிகவும் எளிமையான முறையில் பூசை

முல்லைத்தீவு, டிசெ. 28

முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் கடந்த செவ்வாய்க் கிழமை அதிகாலை முதல் கடும் மழை பெய்து வருவதால் கிறிஸ்மஸ் நிகழ்வுகளில் மக்கள் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டது.

புதுக்குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள புனித சூசையப்பர் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு 11.30 மணிக்கு விசேட பூசை ஆராதனைகள் இடம் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தத் தேவாலயம் கடந்த கால போர் இடர்களால் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ள நிலையில் தறப்பாளினால் தற்காலிக மேடை அமைக்கப்பட்டு பூசைகள் இடம்பெறுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மழைவெள்ளம் ஆலயப் பகுதி எங்கும் உட்புகுந்ததால் மக்கள் ஆராதனைகளில் ஈடுபட முடியாத நிலை காணப்பட்டது.

இதேவேளை புதுக்குடியிருப்பு, குழந்தை யேசு ஆலயப்பகுதியில் அமைக்கப்பட்ட கொட்டகையில், மிகவும் எளிமையான முறையில் பூசை வழிபாடுகள் இடம் பெற்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக கிறிஸ்தவர்கள் தமது கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் ஈடுபடமுடியாது திண்டாடியதையும் அவதானிக்க முடிந்தது. (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்றுமுன்தினம் இரவு பெய்த மழையால் யாழ்.முற்றவெளி பிரதேசம் பெரும் வெள்ளக்காடாகக் காட்சி அளிக்கிறது. (ம-17)

## கச்சாய் பகுதியில் கடை உடைத்துத் திருட்டு

தென்மராட்சி,டிசெ.28

கச்சாய் பகுதியில் கடை ஒன்றினுள் இரவு வேளை உள்நுழைந்த திருடர்கள் கடையில் இருந்த ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்களையும் கடையுடன் இணைந்திருந்த அரிசி ஆலையில் பொருத்தப்பட்டிருந்த மோட்டரையும் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றது.

கச்சாய் பகுதியில் அரிசி ஆலையுடன் இணைந்த நிலையில் கடை இயங்கி வந்தது.

**பால் மா, கிற்காட், சிகரட் வகைகள், பிஸ்கெட் வகை கள் உட்பட பல்வேறு பொருள் களை அபகரித்துச் சென்றுள்ளனர்.**

இந்தப் பகுதியில் குடியிருப்புகள் குறைவு என்பதால் மில் உரிமையாளர் கடையிலேயே தங்கி இருப்பது வழமை என்றும்,ஆனால் கடந்த இருதினங்களாக வீட்டில் தங்கியிருந்ததாகவும் கூறப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் வந்தோர் கடையை உடைத்து உள்நுழைந்து அங்கிருந்த பால் மா, கிற்காட், சிகரட் வகைகள், பிஸ்கெட் வகைகள் உட்பட பல்வேறு பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர். நேற்றுக் காலையில் கடைக்குள் சென்ற உரிமையாளர் கடையில் பொருள்கள் திருட்டுப் போனதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

பின்னர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் மோப்ப நாய்களுடன் வந்து பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-9)

## மாநகர சபை உறுப்பினர் வெளிநடப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

இங்கே இருப்பவர்கள் கௌரவ உறுப்பினர்கள் கிடையாது எனக் கூறி யாழ். மாநகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினரான மாணிக்கம் கனகரத்தினம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற யாழ். மாநகர சபையின் டிசெம்பர் மாதக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தார்.

அன்றைய தினம் தம்மைச் சந்திக்க வந்திருந்த மக்களை அவமதித்துக் கௌரவக் குறைவாகப் பேசியதாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் மீது குற்றம் சுமத்திய அவர், மக்களை மதித்து நடக்கத் தெரியாதவர்களாகச் சில உறுப்பினர்கள் பதவியில் இருப்பது கவலைக்குரியது எனவும் தெரிவித்தார்.

தான் சபையைப் பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்வதாகக் கூறி வெளியேறினார். (த-7)

# திசைகாட்டும் கருவி இல்லாது படகுகளில் பயணிக்க வேண்டாம்

### நெடுந்தீவு கடற்படை அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.28

திசைகாட்டும் கருவி இல்லாத நிலையில் படகுகளில் பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டாம் என்று நெடுந்தீவு கடற்படையினர் படகு உரிமையாளர்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

பயிற்றப்பட்ட கடலோடிகள் அவசியம் எனவும் கடற்படையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

தனியார் படகு சுமார் அறுபது பயணிகளுடன் நேற்று முன்தினம் குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்குச் சென்ற சமயம் பலத்த மழை காரணமாக திசை தெரியாத நிலையில் நெடுந்தீவைக் கடந்து தெற்கு கடற்கரைப் பகுதியான குயின்ரவர் கடற்பகுதிக்குச் சென்றுள்ளது.

குறிப்பிட்ட படகு குறிகாட்டுவானில் இருந்து புறப்பட்டதன் பின்னர்

**பலத்த மழை காரணமாக திசை மாறி படகு இறங்குதுறைக்குப் பதிலாக குயின்ரவர் பகுதிக்குச் சென்றது.**

மற்றுமொரு படகு 45 நிமிடங்களின் பின் புறப்பட்டது. அது நெடுந்தீவுக்குச் சென்றடைந்த நிலையில் முதலில் புறப்பட்ட படகை கடற்பரப்பில் காணமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடற்படை படகுகள் தீவின் கிழக்கு மேற்கு கடற்பகுதிகளுக்கு விரைந்து பயணிகள் படகைத் தேடத் தொடங்கின. இந்தநிலையில் குயின்ரவர் பகுதிக்கு சமீபமாகச் சென்று கொண்டிருப்பதைக் கண்டு அதனை மீட்டுக் கொண்டு நெடுந்தீவுத் துறை முகத்தில் சேர்த்ததாகவும் கூறப்பட்டது.

நெடுந்தீவுக்கான அரச படகுகள் இரண்டும் தற்போது சேவையில் இல்லாத நிலையில் தனியார் படகுகள் மட்டும் சேவையில் உள்ளன.

நேற்று திருத் தத்துக்கெனக் கொண்டு செல்லப்பட்ட குமுதினி சேவைக்கு வரும் எனவும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

குமுதினிப் படகும் அண்மையில் திசைமாறிச் சென்று அவதிப்பட்டதும் பின்னர் கடற்படையினர் அதனைக் கரைசேர்த்த சம்பவமும் தெரிந்ததே. குமுதினியிலும் திசை காட்டிக் கருவி இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கஸ்தூரியார் வீதியின் ஒருபகுதி கவனிப்பார் இன்றி அவலத்தில்



யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்ப்பாணம்,நாவலர் வீதி சந்தியில் இருந்து அரசடி வீதி வரையான கஸ்தூரியார் வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளது.

தற்போது மழைபெய்து வரும் நிலையில் இந்த வீதியில் வெள்ளம் நிறைந்து காணப்படுகின்றது.

வாகனப் போக்குவரத்து அதிகமான இந்த வீதியில் பயணிப்போர் பெரும் சிரமப்படுவதாகவும், பெரும்பாலும் இந்த வீதியை மாணவர்கள் பயன்படுத்துவதால் இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கேட்டுள்ளனர்.

'காப்பெற்' வீதிக்கென வீதியின் இருமருங்கிலும் தார்க் கலவையிட்ட கல்லுப் போடப்பட்ட போதும் தொடர்ந்து உரிய வேலைகள் பூரணப்படுத்தப்படவில்லை.

கல்லுப் போடப்பட்ட பகுதிகளில் குழிகள் நிறைந்து வாகனப் போக்குவரத்து மட்டுமன்றி பாதசாரிகளின் போக்குவரத்துக்கும் பெரும் சிரமமாக உள்ளது என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு வருடங்களுக்கு மேலாக இந்த வீதியின் மோசமான நிலை குறித்துக் கவனம் செலுத்தப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ம-7)

## மனைவியையும் பிள்ளைகளையும் கத்தியுடன் விரட்டிய 'குடி'மகன்

### பொலிஸாரிடம் பிடித்துக் கொடுத்தனர்

வலி.வடக்கு,டிசெ.28

மதுபோதையில் மனைவியையும் பிள்ளைகளையும் கத்தியுடன் விரட்டிய தந்தையைப் பிள்ளைகள் பிடித்துக் கொடுத்தனர். சுன்னாகம் மேற்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வந்துள்ளதாவது:

நாளாந்தம் குடிபோதையில் வரும் தந்தை கத்தியைக் காட்டி தாயை விரட்டியடிப்பதும் பிள்ளைகளைத் துன்புறுத்துவதும் வழமையான செயற்பாடாக இருந்து வந்துள்ளது. இந்தநிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் வேளை மது போதையில் வந்த குறித்த நபர் மனைவியையும் பிள்ளைகளையும் வழமைபோன்று துரத்தியடித்துள்ளார். இதனைப் பொறுக்க முடியாத இரண்டு பிள்ளைகள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தந்தையின் அடாவடி தொடர்பாக முறையிட்டுள்ளனர். குறிப்பிட்ட தந்தை வீட்டின் முன்வீதியில் கத்தியுடன் நின்று பெரிய சத்தம்போட்டுக் கொண்டிருந்த போது பொலிஸாருடன் சென்ற பிள்ளைகள் தந்தையை அடையாளம் காட்டினர். குறித்த நபரைப் பொலிஸார் கைது செய்தனர். (ம 86)



அனலைதீவு பொது நூலகத்தின் "அனலை" சஞ்சிகை வெளியீடு அண்மையில் இடம்பெற்றது. சபையின் தலைவர் ம.ஜெயகாந்தன் வெளியிட்டு வைக்க நிகழ்வின் பிரதம விருந்தினரும் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை பிரதேச செயலருமாகிய திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் சஞ்சிகையைப் பெற்றுக்கொள்கிறார். அருகில் பிரதேச சபைச் செயலாளர் சு.சுதர்ஜன், அனலைதீவு பொது நூலகர் ச.தர்மினி ஆகியோர் காணப்படுகின்றனர். (ம)

## புலோலி வடமேற்கில் வெள்ள வாய்க்கால்

உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் இலகு வேலைத்திட்டத்தில் புலோலி வடமேற்கு கிராம சேவையாளர் பிரிவில் வெள்ள வாய்க்கால் வெட்டப்பட்டு, மழை காலங்களில் வெள்ளம் வடிந்து செல்லக் கூடியவாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கிராம சேவையாளர் அ.உமாசங்கரின் வழி காட்டலில் இலகு வேலைத் திட்டப் பயனாளிகள் மேற்கொண்ட இந்தப் பணியால் வெள்ளம் தேங்கி நிற்காது ஓடிச் செல்வதுடன் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகாமலும் பாதுகாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## இருபாலை இறைச்சிக் கடைகளை அகற்றக் கோருகின்றனர் மக்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.28

இருபாலைச் சந்திக்கு அருகில் உள்ள இறைச்சிக் கடைகளை அகற்றுமாறு பிரதேச மக்கள் வலி.கிழக்குப் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குடிமனைகள் நெருக்கமான இடத்தில், இந்து ஆலயம் மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அமைந்துள்ள சூழலில் இந்த இறைச்சிக்கடைகள் அமைந்துள்ளன.

இந்த நிலையில் இவை அகற்றப்பட வேண்டும் என்று தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

மக்கள் கோரிக்கைக்கு ஏற்ப உரியநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வலி.கிழக்கு பிரதேச சபை உப தலைவர் கே.தர்மலிங்கம் கூறினார். (ம-17)

## யாழ். நகரில் கலாசார மண்டபம் ஜனவரியில் கட்டுமானப் பணிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்.நகரில் புல்லுக்குளம் பகுதியில் அமையவுள்ள கலாசார மண்டபத்துக்கான கட்டுமானப் பணிகள் ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

புல்லுக்குளம் அருகில் முன்னர் திறந்தவெளி அரங்கு இருந்த வளாகத்தில் இந்த மண்டபம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

கலாசார மண்ட பத்தை அமைக்க இந்திய அரசு நிதி உதவி வழங்கவுள் ளது. இந்த நிலையில் பணி களை ஜனவரியில் ஆரம் பிக்கத் திட்டமிடப்பட்டுள் ளது- என்று கூறப்பட்டது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு நேபாளத்துக்கு இந்தியா உதவும்


## அந்நாட்டு ஜனாதிபதியுடனான சந்திப்பில் முகர்ஜி

டில்லி, டிசெ.28

அண்டை நாடான நேபாளத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியா எப்போதும் துணையாக இருக்கும் என்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தெரி வித்தார்.

நேபாள நாட்டின் ஜனாதிபதி ராம் பரண் யாதவ் அரசுமுறைப் பயணமாக நேற்றுமுன்தினம் புதன் கிழமை இந்தியாவுக்கு வருகை தந்தார். அவருடன் அரசியல், பொருளாதாரம் உட்பட பல விடயங்கள் குறித்துக் கலந்துரையாடிய ஜனாதிபதி பிரணாப் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மக்கள் அனைவரும் நேபாள நாட்டினரைத் தங்களது நெருங்கிய நண்பர்களாகவே கருதி வருகின்றனர். நேபாளத்தின்



வளர்ச்சியில் ஏனைய நாடுகளை விட இந்தியா அதிக அக்கறை காட்டி வருகிறது. நேபாள ஜனாதிபதியின் இந்திய வருகை இரு நாடுகளின் நல்லுறவை மேலும் வலுப்படுத்த உதவும்.

நெருங்கிய நட்பு நாடாகத் திகழ்ந்துவரும் நேபாளத்தின் சமூக, பொருளாதார, கல்வி உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கும் இந்தியா எப்போதும் துணையாக இருக்கும்- என்றார்.

இதேவேளை நேபாள ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில்,

இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் அன்புக்கும் உபசரிப்புக்கும் மிகவும் நன்றி. நேபாள அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் இந்தியாவின் பங்களிப்பு இன்றியமையாதது.

எதிர்வரும் காலங்களிலும் இந்த நட்புறவு நீடித்து இரு நாடுகளின் நலனையும் ஆக்கபூர்வமாக முன்னெடுத்துச் செல்ல உதவும்-என்றார். (வ)

## நீராடக்கூட தகுதியற்ற நிலையில் இந்தியாவின் புண்ணிய நதிகள்

டில்லி, டிசெ.28

இந்தியாவின் வட மாநிலங்களில் பாயும் கங்கை, யமுனை உள்ளிட்ட நதிகள், நீராடுவதற்கு ஏற்ற தகுதி கூட இல்லாத அளவுக்கு மாசடைந்துள்ளன என்று அரசு சாரா அமைப்பு மூலம் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

பத்மஸ்ரீ விருது வென்ற சுற்றுச்சூழல் ஆர்வலர் அனில் ஜோஷி தலைமையில், டேராடூனில் இயங்கிவரும் ஹெஸ்கோ என்ற அரசு சாரா அமைப்பு இந்தியாவின் வடக்கு மாநிலங்களில் ஓடும் நதிகள் குறித்து ஆய்வு நடத்தும் நோக்கில் அந்தப் பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டது.

27 தினங்கள் அவர்கள் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின் போது, அந்தக்குழு, ஆயிரத்து 400 கி.மீ. அளவிலான தூரத்தைக் கடந்து அங்கு ஆய்வை மேற்கொண்டது. தாம் மேற்கொண்ட சுற்றுப்பயணம் குறித்து அனில் ஜோஷி கூறியதாவது:

நாம் உத்தரப்பிரதேசம், பீகார் உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள 24 நதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டோம். அந்த மாநிலங்களில் ஓடும் நதிகள், மக்கள் நீராடுவதற்குக் கூடத் தகுதி இல்லாமல் உள்ளன என்பது தெரியவந்துள்ளது. அந்த நதிகளில் பெருமளவு கழிவு நீரே ஓடுகிறது.

இதன் மூலம் அதனைச் சார்ந்து வரும் மனிதன் உட்பட உயிரினங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது. யமுனை, வருணா, கண்டக் உள்ளிட்ட நதிகளே அதிகமாக மாசடைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது என்றார்.

## பஸ்-கார் விபத்து 5 பேர் சாவு

வேலூருக்கு அருகே தேசிய நெடுஞ்சாலையில் காரும், பஸ்ஸும் மோதிக் கொண்ட விபத்தில் காரில் வந்த 5 பேர் உயிரிழந்தனர்.


வேலூரில் இருந்து பெங்களூர் நோக்கி சென்ற காரும், எதிரே வந்த சுற்றுலாப் பஸ்ஸும் மோதியதில் திருப்பூரைச் சேர்ந்த இரண்டு பெண் கள் உட்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அவர்கள் 5 பேரும், காரில் வந்தவர்கள் ஆவர். இவர்களது உடல்கள் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் வைக்கப் பட்டுள்ளன. சுற்றுலா பஸ் சாரதியிடம் விசாரணை நடத்தப்பட்டுவருகிறது. இதுகுறித்து நாட்டறம்பள்ளி பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.



டில்லி வந்துள்ள நேபாள அதிபர் ராம் பரண் யாதவ், தமது குடும்பத்தினருடன் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியைச் சந்தித்தார்.

## வன்புணர்வுக் கொடுமைக்குள்ளான மாணவி அவசரமாகச் சிங்கப்பூருக்கு

### ஆபத்தான நிலையில் அங்கு சிகிச்சை



டில்லியில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட மருத்துவக் கல்லூரி மாணவி, உரிய சிகிச்சைக்காக சிங்கப்பூர் கொண்டு செல்லப்பட்டார்.

நேற்றுக் காலை அவரது நிலைமை கவலைக்கிடமான நிலையில், அவர் உடனடியாக சிங்கப்பூருக்கு விமானம் மூலம் அழைத்துச் செல்லப் பட்டு அங்குள்ள மௌன்ட் எலிசபெத் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள அந்த மாணவியின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாணவியை சிங்கப்பூருக்கு மாற்றுவது என்று மத்திய அரசு முடிவெடுத்து, அங்குள்ள தூதரக அதிகாரிகள் மூலமாக அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. நேற்றுக்காலை 5 மணியளவில், சிங்கப்பூர் சென்றடைந்த மாணவி மற்றும் அவரது குடும்பத்தி னர் அம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனையை அடைந்தனர்.

நாடாளுமன்ற நிலைக் குழு அழைப்பாணை .

இதேவேளை டில்லியில் நிகழ்ந்த பாலியல் வன்புணர்வுச் சம்பவத்தைத் தொடர்ந்து தலைநகரின் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து விவாதிப்பதற்காக உள்துறை செயலர் ஆர்.கே.சிங் மற்றும் டில்லி மாநகர பொலிஸ் ஆணையாளர் நீரஜ்குமார் ஆகியோருக்கு உள்துறை விவகாரங்களுக்கான நாடாளுமன்ற நிலைக்குழு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

## முன்னாள் இராணுவத் தளபதியின் பாதுகாப்பை விலக்கிக்கொள்ள முடிவு

### அரசின் நடவடிக்கையை எதிர்ப்பதால்



டில்லி, டிசெ.28

முன்னாள் இராணுவத் தலைமைத் தளபதி வி.கே. சிங்குக்கு அளிக்கப்பட்டு வரும் பாதுகாப்பை விலக்கிக்கொள்ள மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

ஊழலுக்கு எதிரான போராட்டம், புதுடில்லியில் மருத்துவ மாணவி வன்புணர்வுக்குட்படுத்திய விவகாரம் மற்றும் பல பிரச்சினைகளில் அவர் தீவிரம் காட்டி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

வி.கே.சிங்குக்கு கடந்த நவம்பர் மாதம் வரை 'இசட் பிளஸ்' பாதுகாப்பு அளிக்கப் பட்டு வந்தது. எப்போதும் அவருக்கு பாதுகாப்பாக 30-35 வீரர்கள் இருப்பர். குண்டு துளைக்காத ஒரு கார் உட்பட 7 வாகனங்கள் அவருக்கு ஒதுக்கப்பட்டிருந்தன.

அண்மையில் நடை பெற்ற ஓர் ஆலோசனைக் கூட்டத்தில், வி.கே.சிங்குக்கு எந்தவித பாதுகாப்பும் அளிக் கத் தேவையில்லை என்று மத்திய உள்துறை அமைச்சகம் முடிவு எடுத்துள்ளது என்று டில்லி இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

## வட இந்தியாவில் கடும் குளிர்

### 25 பேர் உயிரிழப்பு

வட இந்தியா முழுவதும் நிலவும் கடும் குளிர் காரணமாக குறைந்தது 25 பேர் உயிரிழந்துள்ளனர். உத்தரப் பிரதேசத்திலேயே அதிகமானோர் குளிரால் உயிரிழந் தனர்.

ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா ஆகிய வட இந்திய மாநிலங்களிலும் கடுமையான குளிர் கால நிலை நிலவுகிறது. வீடற்றவர்களும் வயது முதிந்தவர்களுமே அதிகளவில் உயிரிழந்தனர்.

தலைநகர் டில்லியிலும், அண்டை மாநிலங்களிலும் கடுமையான பனிமூட்டம் காரணமாக விமான சேவைகளும் ரயில் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

டில்லியில் வெப்பநிலை 7 பாகை வரை குறைந்தளவான கடும் குளிர் காணப்படுகிறது. அங்கு விமானப் பயண நேரங் களும் குழம்பியுள்ளன. ராஜஸ்தானில் வெப்பநிலை 3.8 பாகை வரை குறைந்து மாநிலமே உறைந்து போயுள்ளது. அங்கும் ரயில்களும் விமான சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. குளிர்காலநிலை இன்னும் பல தினங்களுக்கு நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (வ)

### பாகிஸ்தானுக்காக வேவு பார்த்த சந்தேகத்தில்

## கைதான உளவாளி அன்சாரி அறிவுசார் கழகத்தில் சாட்சியம்

டில்லி, டிசெ.28

இராணுவ இரகசியங்களை பாகிஸ்தானுக்குக் கடத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கில் கைது செய்யப் பட்ட தமீம் அன்சாரி, சென்னையில் உள்ள அறிவுசார் கழகத்தில் நேற்று முன் தினம் முன்னிலையாகி தனது தரப்பு நியாயங்களைத் தெரிவித்தார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி தஞ்சாவூரைச் சேர்ந்த தமீம் அன்சாரி என்பவர் இந்திய இராணுவ இரகசியங்களை பாகிஸ்தானுக்குக் கடத்த முயன்றதாக திருச்சி விமான நிலையத்தில் கியூ பிரிவுப் பொலிஸார் கைது செய்தனர்.

அவர் மீது இரகசியங்களை வெளியிடுதல், கூட்டுச்சதி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் இலங்கையைச் சேர்ந்த ஷாஜி, லங்கா ஷாஜி, இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரி அமீர் சுபைர் சித்திக் ஆகியோரும் சேர்க்கப்பட்டனர்.

அவர்கள் பாகிஸ்தான் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐயின் தெற்காசிய பகுதியின் முக்கிய முகவர்கள் என்றும் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

அதைத்தொடர்ந்து தமீம் அன்சாரி தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைதுசெய்யப் பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தநிலையில், தன்னை விடுவிக்கக்கோரி அவர் சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலக வளாகத்தில் உள்ள அறிவு சார் கழகத்தில் (அட்வைசரி போர்ட்) மனு தாக்கல் செய்தார். அதையடுத்து, அவரை திருச்சியிலிருந்து பாதுகாப்புடன் சென்னைக்கு பொலிஸார் அழைத்து வந்தனர்.

நேற்று முன்தினம் நண்பகல் அவர் அறிவுசார் கழகத்தில் தலைவர் நீதிபதி ராமன், உறுப்பினர்கள் ரகுபதி, மாசிலாமணி ஆகியோர் முன், முன்னிலைப் படுத்தப்பட்டார். சுமார் அரை மணித்தியாலம் தனது தரப்பு வாதங்களையும், நியாயங்களையும் அவர் எடுத்துரைத்தார். அதன் பின்னர் அவரை திருச்சி பொலிஸார் திருச்சி மத்திய சிறைக்கு வானில் கொண்டு சென்றனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு திரும்பினார் மண்டேலா



கேப்டவுண், டிசெ.28

17 நாள்கள் வழங்கப்பட்ட சிகிச்சைகளின் பின்னர் நெல்சன் மண்டேலா மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார்.

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா (வயது-94) உடல்நலக் குறைவால் கடந்த 8ஆம் திகதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பித்தப்பையில் காணப்பட்ட கற்களை அகற்ற அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சிகிச்சைகளின் பின்னர் நேற்றுமுன்தினம் மருத்துவமனையில் ஜோஹன்ஸ்பெர்க் நகரில் உள்ள தனது வீட்டுக்குத் திரும்பினார். தற்போது அவரின் உடல்நலம் ஆரோக்கியமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

## மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் ஜோர்ஜ் புஷ்

ஹோஸ்டன், டிசெ.28

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் தொடர்ந்து தொடர் காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புஷ் கடுமையான இருமலால் பாதிக்கப்பட்டு கடந்த மாதம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவர் தீவிர மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.



சீனாவின் கைனன் மாகாணத்தில் உள்ள கைனன் விமான நிறுவனம் தனது தலைமையகத்தைப் புதிய கட்டடத்துக்கு மாற்றியது. அதையடுத்து தனது பல அடுக்குமாடிகளைக் கொண்ட பழைய தலைமை அலுவலகத்தை நவீன தொழில்நுட்ப உதவியுடன் தகர்த்தது.

## தொழுகை நேரத்தின்போது விமானங்கள் பறக்கக் கூடாது


### ஈரான் அரசின் புதிய கட்டுப்பாடு

தெஹ்ரான், டிசெ.28

காலைத் தொழுகை நேரத்தில் விமானங்கள் பறப்பில் ஈடுபடுவதற்கு ஈரான் அரசு தடை விதித்துள்ளது.

ஈரானில் இஸ்லாமிய மதச் சட்டங்கள் கடுமையாக பின்பற்றப்படுகின்றன. பெண்கள் பர்தா அணிந்துதான் வெளியே வரவேண்டும் போன்ற நடைமுறைகள் இற்றைவரை பின்பற்றப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், "காலைத் தொழுகையை அவசியம் செய்ய வேண்டும். அந்த நேரத்தில் விமானப் புறப்பாடு, பறப்பு இருக்கக்கூடாது.



காலை தொழுகை முடிந்து அரை மணி நேரத்தின் பின்னரே விமானங்கள் பறப்பில் ஈடுபட வேண்டும். இதன் மூலம், அனைவரும் காலை தொழுகையில் கலந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்"- இவ்வாறு ஈரான் அரசு வெளியிட்டுள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புரட்சியில் இணைந்தார் தளபதி

### சிரிய இராணுவத்துக்கு பெரும் பின்னடைவு



கெய்ரோ, டிசெ.28

சிரியாவின் இராணுவத் தளபதி அல்-ஷலால் கிளர்ச்சியாளர்களுடன் இணைந்து கொண்டுள்ளார். இது சிரிய இராணுவத்துக்குப் பெரும் பின்னடைவாக அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத்தைப் பதவி விலகக்கோரி கிளர்ச்சியாளர்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். அசாத் பதவி விலக மறுத்து வருகிறார். இதனையடுத்து இருதரப்பினருக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. கிளர்ச்சியாளர்களை அங்கீகரித்துள்ள அமெரிக்கா, அவர்களுக்கு ஆயுதங்களை வழங்குகிறது.

இந்த நிலையிலேயே இராணுவத் தளபதி அல்-ஷலால் கிளர்ச்சியாளர்களுடன் இணைந்துள்ளார். "சிரிய இராணுவம், மக்களை கொல்லும் கொலை வெறிக் கும்பலாக மாறி விட்டது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 20 மாதங்களில் சிரியாவில் நடந்த மோதல்களில் 50 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இரண்டு லட்சம் பேர் அயல் நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அசாத்தின் பிடிவாதப் போக்கைக் கண்டித்து, துணை ஜனாதிபதி உட்படப் பலர் பதவி விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



**"சிரிய இராணுவம், மக்களைக் கொல்லும் கொலை வெறிக் கும்பலாக மாறி விட்டது"**

*அல் ஷலால்*

## ஜப்பான் பிரதமராக பதவியேற்றார் ஷின்சோ அபே

டோக்கியோ, டிசெ.28

ஜப்பானின் புதிய பிரதமராக ஷின்சோ அபேவும், அமைச்சர்கள் ஏழு பேரும் நேற்றுமுன்தினம் பதவி ஏற்றனர்.

ஜப்பானில் கடந்த 16 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. 480 இடங்களில் ஜனநாயக விடுதலை கட்சி அமோக வெற்றி பெற்றது. அதையடுத்து அந்தக் கட்சியின் தலைவர் ஷின்சோ அபே புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் பதவியேற்பு நடைபெற்றது. ஷின்சோவுடன், ஏழு அமைச்சர்களும் தமது பொறுப்புகளை ஏற்றுக் கொண்டனர்.

பதவியேற்று உரை நிகழ்த்திய ஷின்சோ "சீனாவுடன் காணப்படும் தீவுப் பிரச்சினை, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம், சரிந்து கிடக்கும் பொருளாதாரத்தை நிலை நிறுத்துதல் போன்ற முக்கிய வேலைத்திட்டங்கள் காத்திருக்கின்றன. இவற்றை நாம் சிறப்பாகச் செய்து முடிப்போம்" என்று தெரிவித்தார்.

## திடீரெனக் குமுறியது நிகாரகுவா எரிமலை

நியூயோர்க், டிசெ.28

நிகாரகுவாவில் மிகப் பெரிய எரிமலை திடீரெனக் குமுறத் தொடங்கியுள்ளதால் சுற்றியுள்ள கிராம மக்கள் அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

அமெரிக்க நாடான நிகாரகுவாவில் சினான்டெக்கா நகரம் அருகே சான் கிறிஸ்டோபல் என்ற இடத்தில் உள்ள மிகப் பெரிய எரிமலையே குமுறத் தொடங்கியுள்ளது.


எரிமலை திடீரென வெடித்து சிதறியதால், கரும்புகை வெளியாகி வானத்தில் பல நூறு மைல் சுற்றுக்கு படர்ந்தது.

அதனால் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் எரிமலையை சுற்றி வசிக்கும் மக்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

எரிமலையில் இருந்து வெளியாகும் வெப்பம் 2,500 மீற்றர் பரப்பரளவுக்கு தாக்குகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

## உலகின் அதிவேக ரயில் சேவை ஆரம்பமானது சீனாவில்

### பயண நேரம் 20 இல் இருந்து 8 மணி நேரமாகியது



பீஜிங், டிசெ.28

2 ஆயிரத்து 298 கிலோ மீற்றர் தூரத்துக்கு அதிவிரைவு ரயில் சேவையை சீனா நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது. இதுவே உலகிலேயே நீளமான அதிவிரைவு ரயில் பாதையாகும். அதில் மணிக்கு 300 கி.மீ. வேகத்தில் செல்லக்கூடிய அதிவிரைவு புல்லட் ரயில் சேவை தொடங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் பெய்ஜிங்-குவாங்கு நகரங்களுக்கு இடையிலான ரயில் பயண நேரம் 20 மணி நேரத்தில் இருந்து 8 மணி நேரமாகக் குறைந்துள்ளது.

அதிகபட்சமாக மணிக்கு 350 கி.மீ. வேகத்தில் பயணிக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது இந்த அதிவேக ரயில். தற்போது சீனாவில் 9,300 கி.மீ தூரத்துக்கு அதிவிரைவு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

## பின்லேடன் வீடு கட்டுவதற்கு இலஞ்சம் வாங்கிய அதிகாரி!

### ரூபா 50 ஆயிரம் பெற்று அனுமதி

இஸ்லாமாபாத், டிசெ.28

ஐம்பது ஆயிரம் ரூபா பெற்றுக் கொண்டு ஒசாமா பின்லேடனுக்கு வீடு கட்ட அனுமதி வழங்கியிருக்கிறார் பாகிஸ்தானின் வருவாய் அதிகாரி. இந்தத் தகவல் பாகிஸ்தான் ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

சர்வதேச ரீதியில் தேடப்பட்டு வந்தவர் அல் குவைதா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன். அவர் கடந்த வருடம் பாகிஸ்தானில் உள்ள அவரது வீட்டில் வைத்து அமெரிக்கப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அங்கிருந்து அமெரிக்கப் படைகள் கைப்பற்றிய நாட்குறிப்பிலேயே இந்தத் தகவல் உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

"பட்வாரி என்ற அந்த அதிகாரி மூன்று அடுக்கு மாடிக் கட்டடத்தைக் கட்டவும், 14 அடி உயர பெரிய சுற்றுச் சுவர் கட்டிக்கொள்ளவும் அதற்கு இரும்புக் கம்பிகளால் ஆன வேலி போடவும் ரூபா 50 ஆயிரம் பெற்றுக் கொண்டு அனுமதி வழங்கினார்" என்று குறிப்பிட்டுள்ளாராம் ஒசாமா.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஹவாய் தீவுக்கு நத்தார் பண்டிகையை கொண்டாட குடும்பத்துடன் சென்றிருந்தார். அங்குள்ள அமெரிக்கப் படை வீரர்களைச் சந்தித்து உரையாற்றினார். விடுமுறை முடித்து நேற்று அவர் வெள்ளை



## மகாராணி எலிசபெத்தின் நத்தார் வாழ்த்து '3டி' யில்

லண்டன், டிசெ.28

பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத்தின் நத்தார் செய்தி முப்பரிமாண (3டி) தொழில்நுட்பத்தில் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பானது. பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் முதல்முறையாக தொலைக்காட்சியில் நேரடியாக நத்தார் வாழ்த்துச் செய்தி வழங்கியவர் மகாராணி எலிசபெத். தற்போது நவீன தொழில்நுட்பமான முப்பரிமாணத் தொழில்நுட்பத்தில் இந்த வருட நத்தார் வாழ்த்துச் செய்தியைப் பகிர்ந்துள்ளார்.

தனது கணவர், மகன், மகள்கள், பேரக்குழந்தைகளுடன் தேவாலயத்தில் நடைபெற்ற நத்தார் சிறப்பு பிரார்த்தனையிலும் ராணி எலிச பெத் பங்கேற்றார்.

தேவாலயத்தில் அவரை வரவேற்க காத்திருந்த 70 குழந்தைகளிடமும் மலர்க் கொத்தைப் பெற்றுக் கொண்டு அவர்களுடன் உரையாடி மகிழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலேஷியாவில் கடும் மழை

## இருவர் உயிரிழந்தனர்; 15 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

கோலாலம்பூர், டிசெ.28

மலேஷியாவின் கிழக்கு கடற்கரை பகுதியில் ஏற்பட்ட பலத்த மழை வெள்ளத்தால் 2 பேர் உயிரிழந்தனர். பல ஆயிரம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

மலேஷியாவின் நான்கு மாகாணங்களில் பலத்த மழை பெய்வதால், தாழ்வான பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் இருவர் உயிரிழந்தனர். 15 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

பகாங் மாகாணத்தில் ஆற்றின் கரை உடைந்து நீர் நகருக்குள் உட்புகுந்ததால் பிரதான வீதிகளில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில தினங்களுக்கு பலத்த மழை பெய்யும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

## எகிப்து மக்கள் ஒன்றிணைய வேண்டும்

### – முர்சி ஆதரவாளர்கள்

கெய்ரோ, டிசெ.28

எகிப்து மக்களை ஒன்றிணைந்து செயற்பட வருமாறு ஜனாதிபதி மொஹமட் முர்சியின் ஆதரவாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சர்ச்சைக்குரிய புதிய அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அங்கு ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்புத் திருத்தம் நடைமுறைப்படுத்துவது குறித்து பொதுமக்களின் கருத்தை அறியும் வகையில் பொது வாக்கெடுப்பு அண்மையில் நடத்தப்பட்டிருந்தது. அதில் புதிய அரசமைப்புத் திருத்தத்துக்கு 60 சத்வீதமான மக்கள் ஆதரவளித்துள்ளனர்.

எனினும் அங்குள்ள கிறிஸ்தவ அமைப்புக்கள் உள்ளிட்ட சில அமைப்புகள் இது முஸ்லிம் மயமான அரசமைப்புத் திருத்தம் என்று தெரிவித்து அதனை எதிர்த்து வருகின்றனர். அதற்கு எதிரான பெரும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகின்றனர். இந்த் நிலையிலேயே முர்சி ஆதரவாளர்களால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

சட்டத் திருத்தத்துக்கு எதிராக நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்களுக்கு எகிப்தின் எதிர்க்கட்சி பின்புலமாக இருக்கிறது.

## சிறுமி மீது துப்பாக்கிச் சூடு

இஸ்லாமாபாத், டிசெ.28

பாகிஸ்தானின் வட மேற்கு பகுதியில் உள்ள இசா நகர் பகுதியில் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த ஒரு சிறுமி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சிறுமியின் வீட்டு வாசலில் வைத்து அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறுமி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்கள் யார்?, காரணம் என்ன? என்பவை பற்றிய விவரங்கள் தெரியவரவில்லை. இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# பட்டாசுக் களஞ்சியத்தில் பற்றியது தீ!

## நைஜீரியாவில் ஒருவர் சாவு


லாகோஸ் டிச. 28

நைஜீரியா லாகோஸ் தீவில் உள்ள பட்டாசு களஞ்சியத்தில் தீ விபத்து ஏற்பட்டது. இதனால் பயங்கர வெடிச் சத்தத்துடன் தீ கொழுந்து விட்டு எரிந்தது. அதில் ஒருவர் உயிரிழந்தார்.

வேகமாகப் பரவிய தீயில் அருகில் இருந்த 9 கட்டடங்கள் சேதமடைந்தன. களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த பட்டாசுகள் தொடர்ந்து வெடித்து சிதறின.

இதைப் பார்ப்பதற்குக் கூடிய மக்கள் மீதும் பட்டாசுகள் வெடித்து வீழ்ந்தன. சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்தது போன்ற சத்தம் கேட்டதாக அந்தப் பகுதியில் வசிப்பவர்கள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் களஞ்சியத்தில் இருந்த பட்டாசுகள் அனைத்தும் வெடித்துச் சிதறின. அந்த கட்டடத்தின் சில பகுதிகள் இடிந்து தரை மட்டமாகின. சம்பவம் நடந்த இடத்தில் எழுந்த புகைமூட்டம் லாகோஸ் நகரம் முழுவதும் பரவியது. இந்த விபத்தில் உயிரிழந்த ஒருவரின் உடல் மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளது. இடிபாடுகளில் மேலும் சிலர் சிக்கியிருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது.






மணி விழா நாயகனை அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

உயர் திரு - செல்லத்தம்பி மதியாபரணம்

சேவைக் காலம் :07.01.1982- 29.12.2012

இலங்கை வங்கியில் 32 ஆண்டு காலம் கடமை புரிந்து இளைப்பாறிச் செல்லும் உயர் திரு. செல்லத்தம்பி மதியாபரணம் அவர்களை நீடூழி காலம் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

இலங்கை வங்கி,
விளையாட்டுக்கழகம், பருத்தித்துறை,
வல்வெட்டித்துறை, நெல்லியடி.



சிவாச்சார்யார் (குருக்கள்) தேவை

நோர்வே (Norway) பேர்கனில் (Bergen) அமைந்துள்ள சித்திவிநாயகர் ஆலயத்தில் ஆலயக் குருக்களாக பணிபுரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்

★ சிவாச்சார்யாபிஷேகம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
★ சிவாகமமுறைப்படி சகல அபிஷேகங்கள், பூசைகள் மற்றும் அனைத்து கிரியைகள் தனித்து செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
★ சாத்துப்படி மற்றும் மடப்பள்ளி வேலைகள் தனித்து செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
★ 35 வயதிற்கு மேற்பட்டவராகவும் திருமணமானவராகவும் இருத்தல் வேண்டும்.
★ சமய சொற்பொழிவாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
★ பதவிக்காலம் ஆகக்கூடியது இரண்டு வருடங்கள்.
★ தகுந்த வேதனமும் தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.
★ ஆலயம் திருக்கணித பஞ்சாங்கத்தைப் பின்பற்றி நடைபெறுகின்றது.

*தகுதியுடையவர்கள் ஆகமம் பயின்ற இடம், பணிபுரிந்த இடங்கள் மற்றும் ஏனைய நற்சான்றிதழ்கள், முழுப்படம், பாஸ்போட் பிரதிகளையும் இணைத்து கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 15.01.2013 இற்கு முதல் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

Bergen Hindu Sabha,
Storetveit veien 5,
5067 Bergen,
NORWAY.

மேலதிக தொடர்புகளுக்கு: +47 941 46 069 / +47 951 94 834
E-mail: styret@bergenhindusabha.info,
www.bergenhindusabha.info

[அ/27069][6]


## அதிகம் ஒளிரும் புதிய வால் நட்சத்திரம்

சூரிய மண்டலத்தில் இசோன் என்ற வால் நட்சத்திரம் கடந்த செப்ரெம்பர் மாதம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தற்போது அது சூரிய மண்டத்தில் இருந்து விலகி சூரியனை நோக்கி வருகிறது. இது அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் சூரியன் அருகே வரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த நட்சத்திரம் சுமார் 460 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவானதாக கணிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை லண்டனில் உள்ள ஹோர்வார்ட் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். 20 ஆம் நூற்றாண்டில் ஹேல்-பாட் என்ற வால் நட்சத்திரம் அதிகம் ஒளிரும் தன்மையுடன் திகழ்ந்தது. 1997ஆம் ஆண்டில் இதை பார்க்க முடிந்தது. அதை தொடர்ந்து இந்த 21ஆம் நூற்றாண்டில் முதன் முறையாக அதிகம் ஒளிரும் வால் நட்சத்திரமான இசோன் தெரிய உள்ளது.

சந்திரனுக்குபோட்டியாக அதிக வெளிச்சத்துடன் ஒளிரும் சக்தி கொண்ட [illegible] அழைக்கின்றனர்


NEW SCIENCE HALL
JAFFNA

2015 அ/க

கணித, உயிரியல் பிரிவு

| | |
|---|---|
| PHYSICS | திரு.S.சோதிலிங்கம்<br>திரு .R. குமரன்<br>திரு .R. குகன் |
| CHEMISTRY | திரு .K. சிவத்திரன்<br>திரு .S. டயஸ்<br>திரு .M. மகேஸ்வரன் |
| BIOLOGY | திரு .T. தம்பிராஜா<br>திரு .T. கெங்காதரன்<br>வழமையான ஆசிரியர்<br>திரு .M.M. அல்போன்ஸ் |
| COM . MATHS | திரு .S. செந்தில்ராஜ்<br>திரு .S. செந்தில்நாதன்<br>திரு .A . குணசிங்கம் |

ஆரம்பம் 28.12.2012 வெள்ளி
வெள்ளி காலை 9.00 மணி

(C/5101)(5.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவீனம், பலவீனம் அல்ல!

(8)

இந்தத் தலைவர்களைப் பற்றி மக்கள் மனதிலே ஒரு மதிப்பு தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. அது சரியானதாகவும் இருக்கலாம், தவறானதாகவும் இருக்கலாம். அந்த மதிப்புக்கு உரியவர்கள் தானா அவர்கள் என்கிற ஆராய்ச்சிக்குள் நான் இறங்க விரும்பவில்லை. தங்களைப் பற்றிய ஒரு மதிப்பை, மரியாதையை ஏற்படுத்துவதில் இவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை.

இது அவர்களுக்கு எப்படிச் சாத்தியமாயிற்று? அவர்களின் சாதனைகளோடு அல்லது செயல்களோடு அவர்களின் உருவத்தை இணைத்துப் பார்க்கின்ற மக்கள், அவர்கள் எப்படி இருப்பார்கள் என்று அறிந்து கொள்ளுகின்ற ஆவலில் அவர்களைப் பார்ப்பதற்கு கூடுகிறார்கள். அவர்களைப் புகைப்படத்தில் கூட மக்கள் பார்த்ததில்லை என்று வைத்துக் கொள்வோம். அவர்களின் சாதனைகள் அல்லது செயல்களை வைத்து மக்கள் அவர்களைப் பற்றிய ஒரு கற்பனை வடிவத்தை தங்களின் மனதிலே உருவாக்கிக் கொண்டு விடுகிறார்கள். பின்னர் தாங்கள் கற்பனை செய்த மனிதர் நிஜமாக எப்படி இருப்பார் எனத் தெரிந்து கொள்கின்ற ஆவலில் கூடுகிறார்கள்.

புகைப் படங்களைப் பார்த்திருந்தால் கூட நிஜமான தோற்றம் எப்படி இருக்கும் என்கிற ஆர்வம் மக்களிடையே இருக்கத்தான் செய்கிறது. திரைப்படங்களில் பார்த்த நடிகர்களையும் நடிகைகளையும் நேரில் பார்ப்பதற்கு மக்கள் கூட்டம் பெருமளவில் திரள்வதற்கும் இதுவே காரணம். அதாவது சாதனை புரிவதில் இரண்டு வகை உண்டு.

ஒன்று, தனிப்பட்ட முறையில் ஒருவன் தனது திறமையாலும், முயற்சிகளாலும் புரிகின்ற சாதனைகள். மற்றொன்று, மக்களின் செல்வாக்கை ஆதாரமாக வைத்துப் புரிகின்ற சாதனைகள். சாதனைகள் எந்த வகையைச் சார்ந்ததாக இருந்தாலும் சாதனையாளர் மற்றவர்களிடம் ஏற்படுத்துகின்ற பாதிப்பைப் பொறுத்தே சாதனையாளரின் செல்வாக்கு அமைகிறது.

ஆக, சாதனை புரிகின்றவர்கள் தங்களை உணர்ந்தவர்களாகவும், தாங்கள் உணர்ந்ததை மற்றவர்களுக்கு உணர்த்துகின்றவர்களாகவும் இருப்பது அவசியமாகின்றது. இந்த இரண்டு நிலைகளும், என்ன என்பதைப் பற்றி நாம் கொஞ்சம் தெரிந்து கொள்வது அவசியம்.

எந்த ஒரு மனிதனும் தன்னை உணர்ந்துகொள்ளாமல் சாதனைகள் நிகழ்த்துவது முடியாத காரியம். தன்னை உணர்வது என்பது என்ன- ஆற்றலே இல்லாத மனிதன் என்று எவரும் இருக்க முடியாது. ஒவ்வொரு மனிதனிடமும் ஏதோ ஓர் ஆற்றல் இருக்கவே செய்கிறது. அதை முதலில் அவன் உணர்வது அவசியம். கணிதத்தில் குறைந்த புள்ளிகள் வாங்குகின்றவன் இலக்கியத்தில் திறமை படைத்தவனாக இருக்கிறான். படிப்பு சரியாக வராதவன் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்றவனாக இருக்கலாம். ஊரைச் சுற்றுகின்றவன் சங்கீத ஞானம் கொண்டவனாக இருக்கலாம். சராசரி வாழ்க்கைக்குக் கட்டுப்படாமல் ஒருவன் செயற்படுகிறான் என்பதற்காக அவனை உதவாக்கரை என்று ஒதுக்கிவிட முடியாது.

கம்பன் எந்த கல்லூரியிலும் படித்துப் புலவர் பட்டம் பெறவில்லை. ஆயினும் சாகாவரம் பெற்ற பதின்மூன்றாயிரம் பாடல்களை எழுதி கம்பராமாயணம் என்கிற பேரிலக்கியத்தை தந்து விட்டு சென்றிருக்கிறான்.

கணித மேதை இராமானுஜம் உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்றபோது கணிதத்தில் போதுமான புள்ளிகள் பெறத் தவறி விட்டான்.

பெற்றோருக்கும், மற்றோருக்கும் அடங்காமல் திரிந்த ரொபர்ட் கிளைவ் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். கிழக்கிந்திய கம்பெனியின் பொறுப்பை ஏற்று பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் உருவாக்குவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தார் ரொபர்ட் கிளைவ்.

உலகப் புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர் சார்லி சப்ளினை அறியாதவர்கள் இருக்க முடியாது. அனாதைச் சிறுவனாக நாடெங்கும் சுற்றிய அவர் உலகப் புகழ்பெற்ற நடிகராகவும், திரைப்படத் தயாரிப்பாளராகவும் உருப் பெற்றார்.

இப்படி எத்தனையோ பெருமக்களுடைய வாழ்க்கைகளில் இருந்து மேற்கோள்களை எடுத்துக் காட்டிக் கொண்டே போகலாம். சராசரி வாழ்க்கை அமைப்புக்குத் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதவர்கள் எல்லாம் பயனற்றவர்கள் என்று ஆகிவிட மாட்டார்கள்.

இவர்கள் அனைவரும் ஏதோ ஒரு கால கட்டத்தில் தங்களை உணரத் தொடங்கிய போது சாதனைகள் புரிகின்ற மனிதர்களாக விசுவரூபம் எடுத்து எழுந்து நின்றிருக்கிறார்கள். இவர்களின் வாழ்க்கை நம் அனைவருக்கும் ஒரு படிப்பை. நம்மிடமுள்ள ஆற்றலை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.சாதனையின் முதல்படியே இதுதான்.

ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் பற்றி நமக்குத் தெரிந்த அளவுக்கு அவருடைய வாழ்க்கையைப் பற்றி நமக்குத் தெரியவில்லை. ஆனால் அவருடைய நாடகங்களைப் படிக்கின்ற போது அவற்றை எழுதிய அந்த மனிதரைப் பற்றி சில விஷயங்களை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

எத்தனையோ பாத்திரங்களை அவர் படைத்திருக்கிறார். பல்வேறுபட்ட பாத்திரங்கள். மனித இயல்புகளை சரிவரப் புரிந்து கொள்ளாமல் உயிர்த்துடிப்புள்ள பாத்திரங்களை எவரும் படைக்க முடியாது. அந்த வகையில் பார்த்தால் ஷேக்ஸ்பியர் மனித உணர்வுகளைத் துல்லியமாக அறிந்திருந்தவர் என்றே தோன்றுகிறது. மனிதர்களைப் புரிந்து கொள்கின்ற தன்னுடைய ஆற்றலை நாடகங்களை எழுதுவதற்கு அவர் பயன்படுத்திக் கொண்டார். அவர் படைத்த பல பாத்திரங்கள் சாகாவரம் பெற்ற பாத்திரங்களாகி இன்றைக்கும் அவருடைய புகழைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

பி.சி.கணேசன் (தொடரும்)

# நடமாடும் சேவைகளை மக்கள் பயன் மிக்கதாக்க வேண்டும்

## வடவலய பிரதிப் பதிவாளர் நாயகம் தெரிவிப்பு

அச்சுவேலி,டிசெ.28

அரச அலுவலகங்களை மக்கள் நாடிச்சென்று காத்து நின்று கருமங்களை செய்விக்கின்ற நிலை மாறி, நடமாடும் சேவை என்ற நிலையில் அரச அலுவலர்கள் மக்களை நாடி வந்து சேவையாற்றுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை உரிய முறையில் பயன்படுத்தி பொதுமக்கள் தமது கருமங்களை நிறைவுசெய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு கூறினார் வடவலய பிரதிப் பதிவாளர் நாயகம் செல்வி ஜெ.ஆனந்தராசா.

வலி.கிழக்குப் பிரதேச செயலகத்தின் பதிவாளர் அலுவலகத்தில் நடமாடும் சேவை அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

நடமாடும் சேவையில் கலந்து கொண்டு வடவலய பிரதிப்பதிவாளர் நாயகம் கருத்துத் தெரிவித்தபோது மேலும் கூறியதாவது:-

எமது நாளாந்த வாழ்க்கையில் பிறப்புச் சான்றிதழ் மிகமுக்கியமான ஆவணம்.அது இல்லாத நிலையில் எமது நாளாந்த சிவில் நடைமுறைகளை நிறைவுசெய்ய முடியாத நிலை ஏற்படும். அதே போல திருமணச் சான்றிதழ் மற்றும் இறந்தவர்களின் இறப்புச் சான்றிதழும் மிகவும் முக்கியமானது.

இறப்புப் பதிவை ஒருவர் இறந்து குறிப்பிட்ட கால இடைவெளியில் பதிவு செய்து அதனை பெற்றுக் கொள்வது அவரது மரணத்துக்கு பிந்திய சிவில் உரிமையை அவரின் வாரிசுகள் உரியமுறையில் அத்தாட்சிப்படுத்த முடியும்.

இறப்பு பதிவுகளை காலம் பிந்தியது என்ற வகையில் குறிப்பிட்ட மாத இடைவெளியில் பதிவுசெய்து செய்துகொள்ளலாம். ஆனால் 25 வருடங்களின் பின்னர் எந்தவகையிலும் பதிவு செய்ய முடியாது.

இறப்புச் சான்றிதழ் இல்லாத நிலையில் அவரின் இறப்புக்குப் பிந்திய சிவில் உரிமைகளை அவரின் பிள்ளைகளோ மற்றும் அவரின் வாரிசுகளோ சட்ட ரீதியாக உறுதிப்படுத்த முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுவிடும்.

திருமணச்சான்றிதழ் சிவில் நிலையை அத்தாட்சிப் படுத்தவதற்கான ஆவணமாகும். திருமணப் பதிவை தம்பதிகளில் ஒருவர் காலமான பின்னர் பதிவு செய்ய முடியாது. இருவரும் உயிருடன் இருக்கும் போது பதிவு செய்து கொள்ளவேண்டும். இல்லாதவிடத்து பல்வேறு விதமான நெருக்கடிகளை சந்திக்க நேரிடும்.

இவற்றை எல்லாம் உரியவர்களுக்கு உரிய முறையில் இலகுபடுத்தப்பட்ட நிலையில் நடமாடும் சேவை இடம்பெறுகின்றது. நடமாடும் சேவை மூலம் பதிவாளர் அலுவலக அதிகாரிகள் மக்களின் இருப்பிடங்களுக்கு அண்மையில் வந்திருந்து கருமங்களை நிறைவு செய்து பொதுமக்களுக்கு வழங்குகின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தை உரியமுறையில் பயன்படுத்தி மக்கள் தமது தேவைகளை உரிய முறையில் நிறைவு செய்துகொள்ள வேண்டும்.


ஒவ்வொரு தனிமனிதனும் தனது தேவை கருதியும் தனது எதிர்கால சந்ததியினரின் வசதியை கருத்தில் கொண்டும் உரிய ஆவணங்களை உரிய முறையில் பெற்று ஆவணப்படுத்த வேண்டும்- என்றார். (ம-11)

## கௌரவிப்பு

தொடர்ச்சியாக நாற்பது வருடங்கள் உள்ளூராட்சி சேவையில் சிரேஷ்ட வருமான பரிசோதகராக கடமையாற்றிய சிதம்பரநாதன் சிறிகாந்தன் சிறந்த உள்ளூராட்சி சேவையாளன் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு, சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட யாழ். உள்ளூராட்சி திணைக்கள சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி அதிகாரி எஸ். தவநாயகம், 25 வருடம் சேவையாற்றிய சிரேஷ்ட வருமான பரிசோதகர் சிதம்பரநாதன் சிறிகாந்தனுக்கு விருதும் சான்றிதழும் வழங்கி கௌரவித்தார். (ம-41)



வேலணை பிரதேச சபை பொது நூலகத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி வாரப் பெருவிழாவில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட பிரதேச செயலர் திருமதி சதீசன் மஞ்சுளா தேவி அல்லைப்பிட்டி பொறுப்பதிகாரி எஸ். கிருஸ்ணராசாவுக்கு சிறந்த ஆக்கத்திறனுக்கான பரிசில் வழங்குகிறார். (ம-50)

## தென்மராட்சி கல்வி வலயத்தில் ஒளி விழா

தென்மராட்சி,டிசெ.28

தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தின் ஒளிவிழா நேற்று வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரியைச் சேர்ந்த தேவாலயங்களின் மதகுருமார் ஆசிரியுரையை வழங்கினர். வலய உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-9)

## சமாதான நீதிவான்



யாழ்ப்பாணம் குப்பிழானைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதம் கஜேந்திரகுமார் வவுனியா மாவட்ட சமாதான நீதிவானாக வவுனியா மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் சாவதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவராவார். (ம)

# வாழ்வாதார உரிமைகள் கிடைத்தால் மனித உரிமை கிடைத்தது போன்றது

## கலைப் பீடாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

வாழ்வாதார உரிமைகள் சகல மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கப்பட்டால் மனித உரிமைகள் அவர்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கொள்ள முடியும்.

எனவே அவர்களின் வாழ்வாதார உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளையே நாம் மேற்கொள்ள வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு சிவில் சமூகத்தினர்களுக்கான செயலமர்வு இடம்பெற்றது. அங்கு சமூக, பொருளாதார உரிமைகள் எனும் தலைப்பில் உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-


அடிப்படைத் தேவைகளில் கல்வி, வாழ்விடம், உணவு, நீர் போன்ற தேவைகள் சரியாகப் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இதுவே மக்களின் உரிமையாகக் கருத முடியும். எனவே மக்கள் தமது உரிமைகள் எவை என்பது தொடர்பான அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.

இடப்பெயர்வால் பொருளாதார ரீதியாகப் பாதிப்படைந்துள்ளதுடன் தமது வாழ்வாதார உரிமைகளை இழந்தவர்களாகவும் உள்ளனர்.

பொருளாதார ரீதியாக எவை என எடுத்துக் கொள்வோமானால் தொழில் வாய்ப்புகள் இல்லாமல் இருப்பதைக் கூறமுடியும். உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் மக்கள் செல்ல முடியாதவர்களாக இருப்பார்களானால் அவர்களின் வாழ்வுரிமை மறுக்கப்பட்டுள்ளது என்றே கருத முடியும் -என்றார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய - சீன உறவு தமிழகத் தமிழரின் கைகளில்



சீன-இந்திய-இலங்கை பூகோள மூலோபாய உறவுநிலையானது முக்கியமாக இந்தியாவில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் செல்வாக்கிலேயே தங்கியுள்ளது. இந்தியத் தமிழர்கள், இலங்கை அரசு தொடர்பான இந்திய மத்திய அரசின் வெளியுறவுக் கொள்கைகளை வகுப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டிய காரணியாக உள்ளனர்.

இவ்வாறு அமெரிக்காவை தளமாகக் கொண்ட வெளிநாட்டு கொள்கைகள் பற்றிய ஆய்வை செய்யும் நிறுவனம் தனது இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள மார்ச்ஜெ.கப்ரீல்சன், ஜோன் ஜோன்சன் பிறீஸ் ஆகிய இருவரால் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மாக்கடலில் சீனா தனது கடற்படைத் தளத்தை அமைப்பதற்கான சாத்தியப்பாடுகள் சீன-இலங்கை உறவுநிலையிலேயே தங்கியுள்ளது. இந்த உறவுநிலையானது நீண்டகாலமாக தொடரும் சீன-இந்திய விரிசலை கருத்திற் கொள்ளும் போது இது இந்தியாவுக்கு எவ்வித நலனையும் அளிக்காது.

சீன-இந்திய-இலங்கை பூகோள மூலோபாய உறவுநிலையானது முக்கியமாக இந்தியாவில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் செல்வாக்கிலேயே தங்கியுள்ளது. இலங்கை வாழ் தமிழர்களின் உரிமை தொடர்பாக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வரும் இந்தியத் தமிழர்கள், இலஙகை அரசுதொடர்பான இந்திய மத்திய அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைகளை வகுப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டியகாரணியாக உள்ளனர்.

இந்த நிலையில் சீனா இராணுவ வளங்களைப் பயன்படுத்தி இலங்கையின் அம்பாந்தோட்டையில் கட்டப்படும் புதிய துறைமுகம் உள்ளடங்கலாக சீனாவுடனான இலங்கையின் ஆழமான உறவினை இந்தியா எதிர்த்து நிற்பதில் இந்தியாவின் உள்நாட்டு அரசியல் இயங்குவியல்கள் துணைநிற்கின்றன. இதன் மூலம் இந்திய மாக்கடலில் இலங்கை இந்தியா மற்றும் சீனா ஆகிய மூன்று நாடுகளின் சமநிலையில் தாக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இலங்கையிலிருந்து மிக ஒடுங்கிய பாக்குநீரிணையால் பிரிக்கப்படும் இந்தியாவின் தென்கிழக்கில் தமிழ்நாடு அமைந்துள்ளது. இது மிகப் பெரிய மாநிலமாக காணப்படுவதுடன், பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் மிக்க ஒன்றாகவும் காணப்படுகிறது. 2011இல் அமெரிக்க இராஜாங்கச் செயலர் கிளின்ரன் தமிழ்நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டதன் மூலம் தமிழ்நாடு அரசியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்றுள்ளதை உறுதிப்படுத்த முடியும். தமிழ்நாட்டின் பெரும்பாலான மக்கள் தமிழ் இந்துக்களாவர்.

> சீனா 'முத்து மாலை' என்கின்ற மூலோபாயத்தின் மூலம் இந்திய மாக்கடலில் தன்னைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. இதன் ஒருகட்டமாக பாகிஸ்தானின் குவாடரிலும், பங்களாதேஷின் சிற்றகொங்கிலும், இலங்கையின் அம்பாந்தோட்டையிலும் புதிய துறைமுகங்களை அமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டுள்ளது.




இந்திய மாக்கடலின் வடக்கே அமைந்துள்ள இலங்கை கேந்திர முக்கியத்துவம் மிக்க, சுறுசுறுப்பான கப்பல் போக்குவரத்து மார்க்கங்களைக் கொண்டுள்ளது. இது இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளினதும் வர்த்தகத் துறை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரமாக உள்ளது. மத்திய கிழக்கிலிருந்து சீனாவால் இறக்குமதி செய்யப்படும் 80 சதவீதமான ஹைட்ரோகாபன்கள் இலங்கையின் 50 கடல்மைல் தூரத்திற்குள் கப்பல்களில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

தென்னாசியப் பிராந்தியத்திற்கான ஒத்துழைப்புச் சங்கமான சார்க் நாடுகளுடன் சீனாவின் வர்த்தக செயற்பாடுகள் 1995இல் 3 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது. ஆனால் 2008ல் இத்தொகை 65 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்தது. இதேபோன்று ஆபிரிக்காவுடனான சீனாவின் வர்த்தக செயற்பாடு 2011இல் 160 பில்லியன் டொலர்களாகும். ஆனால் 2009இல் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளின் 60 சதவீதமாக இது காணப்படுகிறது.

இவ்வாறு சீனாவால் மேற்கொள்ளப்படும் வர்த்தக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகள் இலங்கையின் தென் கரையோரத்தின் ஊடாகவே நடைபெறுகிறது. தற்போது சீனாவானது இலங்கையின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளியாகும். 2007இல் சீனா இலங்கைக்கு 17.7 சதவீத நிதியுதவிகளையும் கடன் உதவிகளையும் வழங்கியது. ஆனால் 2009இல் இது 44.2 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதைவிட இலங்கையின் அபிவிருத்தி திட்டங்கள், பராமரிப்பு மற்றும் [illegible] திட்டங்களுக்காக 3 பில்லியன் டொலர்களை வழங்குவதாக சீனா வாக்குறுதி அளித்துள்ளது.

இந்திய மாக்கடலில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கை எதிர்ப்பதற்காக தற்போது இந்தியா பல்வேறு எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதில் எச்சரிக்கை மற்றும் கட்டுப்பாட்டு முறைமை, இந்தியாவின் வட பிராந்தியத்தில் 3500கி.மீ தூரம் வரை செல்லக் கூடிய அக்னி - 03 ஏவுகணைகள் போன்றவை சீனாவின் செல்வாக்கை தடுப்பதற்காக இந்தியாவால் எடுக்கப்பட்டுள்ள சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாகும். மேலும், இலங்கையின் வடக்கே உள்ள வங்காள விரிகுடாவில் விமானத் தளம் ஒன்றை அமைப்பதற்கான திட்டமிடலில் இந்திய கடற்படை ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் சீனா 'முத்து மாலை' என்கின்ற மூலோபாயத்தின் மூலம் இந்திய மாக்கடலில் தன்னைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. இதன் ஒருகட்டமாக பாகிஸ்தானின் குவாடரிலும், பங்களாதேஷின் சிற்றகொங்கிலும், இலங்கையின் அம்பாந்தோட்டையிலும் புதிய துறைமுகங்களை அமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டுள்ளது.

இந்தியாவின் தென் வாயிலில் சீனாவானது தனது நங்கூரத்தை விரைவில் கட்டும் என்பதையே இலங்கையில் சீனா தற்போது மேற்கொள்ளும் செயற்பாடுகள் சுட்டிக்காட்டுவதாக இந்திய கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் தென் பகுதியிலுள்ள அம்பாந்தோட்டையில் சீன நிதியுதவியுடன் புதிய துறைமுகம் கட்டப்படுகிறது. அம்பாந்தோட்டை துறைமுகத்தில் [illegible] ஒவ்வொன்றும் கால் மைல் நீளமானவை. இங்கு கப்பல்களுக்கான எரிபொருள் நிரப்பு நிலையம் போன்ற பல்வேறு வசதிகளை சீனா செய்துவருகிறது.

இதுஒருபுறமிருக்க, இந்தியாவின் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியன இரு முக்கிய கட்சிகளாகக் காணப்படுகின்றன. இவ்விரு கட்சிகளும் தமிழ்நாட்டின் அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்தியா மற்றும் இலங்கையில் தமிழ்த் தேசியவாத உரிமையை நிலைநிறுத்துவதற்காக ஆதரவளிக்க வேண்டிய கட்டாயத்தை இவ்விரு கட்சிகளும் கொண்டுள்ளன. ஏனெனில் இவை இவ்வாறு ஆதரவளிக்கத் தவறினால் தேர்தலில் தமக்கான வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உண்டாகும்.

இந்திய மத்திய அரசாங்கத்தை ஆளும் ஐக்கிய கூட்டணி கட்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் முக்கிய கூட்டணியாக காணப்படுகிறது. இந்திய நாடாளுமன்றின் கீழ்ச்சபையில் காணப்படும் 500 ஆசனங்களில் 262 ஆசனங்களை ஆளும் கூட்டணி கொண்டுள்ளது. இதில் திராவிட முன்னேற்றக் கழகம் 18 ஆசனங்களைக் கொண்டுள்ளது. தி.மு.க உறுப்பினர்கள் ஆளும் கூட்டணியுடன் இணைவதும் அதிலிருந்து பிரிவதும் என பல்வேறு வரலாறுகளைக் கொண்டுள்ளனர். தி.மு.க கூட்டணியிலிருந்து விலகினால் ஆளும் இந்திய அரசாங்க கட்சியானது 251 ஆசனங்களை மட்டுமே கொண்டிருக்கும். இதனால் முன்னர் ஏற்பட்டது போன்று இது தொடர்ந்தும் ஆட்சியில் நிலைத்திருப்பதற்கான பெரும்பான்மையைக் கொண்டிருக்காது.

''இந்தியாவிலுள்ள தமிழ் மக்களின் ஆதரவில்லாது இந்திய மத்திய அரசாங்கம் உறுதியான அரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொள்வது மிகக் கடினமானது'' என ஹவாட் பல்கலைக்கழக பேராசிரியர் சுகற்ற போஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கை மாற்றீடானது தமிழ்நாட்டு அரசியல் அழுத்தங்களால் மட்டுப்படுத்தப்படுகிறது. இந்த விடயத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய மத்திய அரசாங்கம் ஆதரவளிக்கவேண்டும். அத்துடன் இலங்கையுடனான சீனா மற்றும் பாகிஸ்தானின் உறவுநிலையை எதிர்கொள்வதற்கும் இந்தியா இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் ஆதரவளிக்க வேண்டிய கட்டாய நிலையிலுள்ளது'' என கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் கொள்கை மாற்றீடுகளுக்கான மையத்தைச் சேர்ந்த பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

சீனா-இலங்கை உறவை இந்தியா கட்டுப்படுத்த வேண்டுமாயின் முதலில் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள இலங்கை அரசுக்கு எதிரான அழுத்தங்கள் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் உணர்வலைகள் என்பது இந்தியத் தேர்தல்களில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ள காரணியாகும். இந்த நிலையில் தொடர்ந்தும் சீனாவானது அம்பாந்தோட்டையில் கால்பதித்து தனது செல்வாக்கை பிரயோகிப்பதன் மூலம் இந்திய மாக்கடலில் சீனாவின் தலையீடு அதிகரித்துக் காணப்படும்.

இது மட்டுமல்லாது இந்திய மாக்கடல் பிராந்தியத்தின் அதிகாரத்தை தற்போது இந்தியா தக்கவைத்துள்ள போதிலும் இலங்கையுடனான சீனாவின் ஆழமான உறவின் மூலம் இதனை சீனா தனது கையில் எடுப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவதை தடுக்க முடியாது. இந்தியாவானது இலங்கையுடன் கலாசார, உதவி, பொருளாதார ஒத்துழைப்புக்களை வழங்குவதன் மூலம் இந்த நாடுகளின் உறவுநிலையை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் தமிழ்நாட்டு மக்களின் அரசியற் கோரிக்கைகளை இந்திய மத்திய அரசாங்கம் கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும். தமிழ்நாட்டு அரசியல் முக்கியத்துவப்படுத்தப்படாவிட்டால், கிட்டிய எதிர்காலத்தில் சீனப் போர்க்கப்பல்கள் தென் இலங்கையில் தளம் அமைப்பதற்கான அல்லது இலங்கையின் கடலில் நடமாடுவதற்கான வாய்ப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

(நன்றி: புதினப்பலகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த சிந்தனை வாக்குறுதியை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும்

*அமைச்சரும் சமசமாஜக் கட்சித் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண ''டெய்லிமிரர்'' ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து ஒரு பகுதி*

■ ரம்பன்



★ அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிந்தால் மோசடிக்கு இடம் ஏற்படும்

★ மாகாணசபை முறையை இந்தியா திணிக்கவில்லை

★ பண்டாரநாயக்க காலத்திலிருந்து விவாதிக்கப்பட்ட விடயம்- அதிகாரப் பகிர்வு

★ மாகாண சபையை ஒழிப்பதால் சிங்கள- முஸ்லிம் இளைஞர்களுக்கும் தவறான செய்தியாகிவிடும்

★ மகிந்த சிந்தனையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுக

> " இராணுவப் பின்னணியுள்ள ஒருவர் அடுத்த ஜனாதிபதியானால், இராணுவ சர்வாதிகாரம் ஏற்படும் அபாயம் இருக்கிறது.

1978 ஆம் ஆண்டு அரசமைப்பில் மக்களின் இறைமையின் செயற்பாடானது பிரிக்கப்பட்டுவிட்டது. அது நாடாளுமன்றத்துக்கும் நிறைவேற்று ஜனாதிபதிக்கு மிடையில் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.

சட்டம் தயாரிக்கும் அமைச்சரவையை ஜனாதிபதி கட்டுப்படுத்துகிறார். அதற்கு தலைமை வகிக்கிறார். அது எண்ணிக்கை அதிகமான அமைச்சர் சபையானாலும் நாடாளுமன்றத்துக்கு அவர் பதிலளிப்பதில்லை.

அமைச்சுகளுக்கான செயலாளர்கள், பொதுச்சேவைகள் ஆணைக்குழு மற்றும் ஆணைக்குழுக்களின் செயலாளர்களையும் அவரே நியமிக்கிறார். அந்த வகையில் பொதுச் சேவைகள் முழுவதையும் அழுத்தமாகக் கட்டுப்படுத்துகிறார் ஜனாதிபதி.

ஜனாதிபதியே பிரதம நீதியரசரை நியமிக்கிறார். மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர், நீதித்துறை சேவை ஆணைக்குழு ஆகியவற்றையும் நியமித்து அதன் வழியில் நீதித்துறையையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்.

ஆயுதப்படைகள் மீதும் ஜனாதிபதி கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளார். நிதிகளின் மீது நாடாளுமன்றத்துக்குக் கட்டுப்பாடு உண்டு. ஏனென்றால் வரவு- செலவுத் திட்டத்தை அது நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. ஆனால் நிதியமைச்சர் என்ற முறையில் அதுவும் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிலுள்ள அதிகாரிகளாலேயே தயாரிக்கப்படுகின்றது.

### சகல அதிகாரங்களும் ஒரு தனிநபரிடம்

இவ்வாறாக 1978 ஆம் ஆண்டு அரசமைப்பின்படி பெரும்பாலும் சகல அதிகாரங்களும் நிறைவேற்று ஜனாதிபதி என்ற முறையில் தனிநபர் ஒருவரிடமே குவிக்கப்பட்டுள்ளன.

முக்கியமான சட்டவரைவுகளுக்கு மக்களின் ஒப்புதலை கருத்துக்கணிப்பின் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விதிகள் இருந்தபோதிலும் அதுவும் கூட ஜே.ஆர். ஜயவர்த்தனா காலத்தில் ஒரே ஒருமுறைதான் பயன்படுத்தப்பட்டது. அதுவும் கூட அவருடைய அரசின் ஆயுளை தேர்தல் நடத்தாமலே நீடித்துக் கொள்வதற்காக. இவைகளுக்கு மாற்றீடாக நாடாளுமன்றம் ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணை யொன்றை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும். ஆக சகல அதிகாரங்களும் தனி ஒரு மனிதரிடம் மையப்படுத்தப்பட்டுள்ளன.

### 13 ஆவது திருத்தம் தந்த நன்மை

13 ஆவது திருத்தமானது மாகாண சபைகளை உருவாக்குவதன் மூலம் கொழும்பிலுள்ள அதிகாரங்களை அங்கிருந்து பகிர்ந்தளித்து மக்களை நெருங்கிச் செல்வதாகவும் 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பிலுள்ள ஜனநாயகத்துக்கு மாறான தன்மைகளை சமப்படுத்துவதாக அமைந்தது.

ஆனால் மாகாண சபைகளை - 13 ஆவது திருத்தத்தை அழித்தும் அதன் மூலம் கிடைத்த நன்மையான பணிகளை குலைத்தும் விடவும் ஜனநாயகத்துக்கு மாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது கவலையளிப்பதாகவுள்ளது.

சமசமாஜக் கட்சியும் சோஷலிஸ கூட்டணியும் இந்த செயற்பாட்டை கடுமையாக எதிர்த்து வருகின்றன.

இவ்வாறான ஜனநாயக விரோத செயல்களை நாடாளுமன்றத்திலுள்ள சுமார் 30 அரச உறுப்பினர்கள் - பல அமைச்சர்கள் தலைவர்களும் கூட இதில் என்முடன் சேர்ந்து கொண்டிருப்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

### இந்தியாவின் திணிப்பா?

மாகாண சபைகள் முறையானது இந்தியாவால் திணிக்கப்பட்டது என்ற கருத்து முற்றிலும் தவறானது.

1926 ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க காலத்திலிருந்து சமஷ்டி அமைப்பில் பிராந்திய சபைகளை உருவாக்குவதை அவர் ஆதரித்திருந்தார். அதிகாரப் பரவலாக்கலுக்கான அலகுகளை உருவாக்குவது பற்றிய பிரச்சினை விவாதிக்கப்பட்டு வந்துள்ளது.

சிலர் மாகாணங்களை ஓர் அலகாக ஏற்றுக் கொள்ளலாம் என்று கருதினார்கள். வேறு சிலர் மாவட்டங்களை விரும்பினார்கள். ஆனால் இலங்கை- இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபோது-மாகாண சபைகளை ஓர் அலகாக ஏற்றுக் கொள்வது என்ற வகையில் கருத்துக்கள் நகர்ந்தன. இன்னும் மாகாண சபை முறையானது வெள்ளை யானைக்கு ஒப்பானது, பொது நிதிகள் இதன் மூலம் வீணாக்கப்படுவதாகவும் குறை கூறப்படுகின்றது. ஆனால் உண்மை என்னவென்றால், அரசின் முழு செலவினத்தில் 7.5 வீதம்தான் மாகாண சபைகள் மூலம் பயன்படுத்தப்படுகின்றது. அதன் பெருந்தொகையும் பாடசாலைகள், மருத்துவமனைகள் போன்றவற்றுக்கான சம்பளம் மற்றும் செலவுகளுக்காகவே போகின்றது. மாகாண சபைகள் இல்லாதுபோனாலும் இவை அரசினால் மேற்கொள்ளப்பட வேண்டியவைகளே. மேலும் இந்தப் பணத்தில் ஒரு வீதமளவிலான பணம் அரசியல்வாதிகளின் செலவினங்களுக்குப் போகின்றது.

இவைகளில் மக்கள் நன்மைக்கான முக்கிய அதிக செலவு பிடிக்கும் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிக்கான செலவுகளை மாகாண சபைகள் மேலதிகமாக மத்திய அரசாங்கத்திலிருந்தே செய்து கொள்கின்றன.

இதற்கு மாற்றீடாக மாவட்ட சபைகளை நிறுவுவது பற்றி ஆலோசனை தெரிவிக்கப்படுகின்றது. இவை பொருளாதார ரீதியில் பயனளிக்கவல்லதல்ல என்பதுடன் 25 மாவட்ட சபைகள் இருக்குமென்பதால் செலவுகளையும் அதிகரிக்க செய்வனவாக இருக்கும்.

### அதிகாரம் பகிர்வதை தடுப்பதற்கு

இதன் முக்கிய குறிக்கோள் என்னவென்றால் மாகாண சபைகள், பிறகு உள்ளூராட்சி சபைகள் கடைசியில் கிராம சபைகள் மூலமாக மக்களை அதிகாரமுள்ளவர்களாக ஆக்கும் வழிமுறைக்கு ஒரு முடிவு கட்டி எல்லாத் தீர்மானங்களையும் கொழும்பிலிருந்தே எடுத்துக் கொள்வதற்கு வழி செய்வதே.

மாகாண சபைகள் உள்ளூராட்சிச் சபைகள், கிராம சகைள் மூலமாகவே மக்களுக்கு அதிகாரங்களைப் பகிரமுடியும். அதன் மூலம் அவர்களே தமது அபிவிருத்திகளை செய்து, ஊழல்களை ஒழித்துக் கொள்வார்கள். அதன்மூலம் அவர்களை ஒரே நாட்டுக்குள் ஒருங்கிணைக்க முடியும். அவ்வாறாயின் அவர்கள் ஒருபோதும் பிரிவினையைக் கோரமாட்டார்கள்.

உண்மையில் 1987 ஆம் ஆண்டு மாகாண சபைகள் உருவானதையடுத்து ஆயுதம் ஏந்திய எல்.ரி.ரி.யினரைத் தவிர ஏனைய எல்லா போராளிக் குழுக்களும் ஆயுதங்களை வைத்துவிட்டு ஜனநாயக நீரோட்டயில் இணைந்து கொண்டன.

மாகாண சபை முறையை ஒழிப்போமானால் நாம் ஒரு தவறான செய்தியை வழங்குபவர்களாக இருப்போம். அது தமிழர்களுக்கு மட்டுமல்ல சிங்கள மற்றும் முஸ்லிம் இளைஞர்களுக்கும் ஆனதாகவே இருக்கும். இங்கும் வெளிநாட்டிலும் செயற்படும் எல்.ரி.ரி.ஈ. ஆதரவாளர்கள் மற்றும் ஜெனிவாவில் அமெரிக்காவின் தலைமையில் நடைபெறும் சதித்திட்டத்துக்கு எம்மை தாக்குவதற்கான வெடிமருந்தை வழங்கியவர்களாவோம்.

ஒரு தனி மனிதரால் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அவர் என்னதான் புத்திசாதுரியமானவராக இருந்தாலும் மோசமான தவறுகளை இழைத்துவிட முடியும். உதாரணத்துக்கு பிரதம நீதியரசர் நியமனம். ஒரு நபரிடம் அதிகாரங்கள் குவியும் போது அதிகாரத் துஷ்பிரயோகம் நிச்சயமாக இடம்பெறமுடியும்.

அதிகாரம் மோசடிக்கு இடம் கொடுக்கும். முழுமையான அதிகாரம், முழுமையான மோசடிக்கு வழிவகுக்கும்என்பதுமுதுமொழி.

### இராணுவ சர்வாதிகாரம் தோன்றும்

அடுத்து வரும் ஜனாதிபதியாக இராணுவப் பின்னணியுள்ள பொன்சேகாவைப் போன்ற ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் இராணுவ சர்வாதிகாரம் ஏற்படுவதற்கான அபாயம் இருக்கின்றது. இப்பொழுதும் கூட செயற்பட்டுக் கொண்டிருக்கும் அது பெரிதாக விஸ்தரிக்கப்பட்டு விடும்.

எனவே தான் எவ்வளவு விரைவாக நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து 1972 ஆம் ஆண்டு அரசமைப்பில் பொருத்தமான சீர்திருத்தங்களை செய்து ஒரு கலப்பு முறையான தேர்தல் முறைக்கு வருகிறோமோ அது நாட்டுக்கும் நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்கும் நன்மையாக இருக்கும்.

அடுத்த தேர்தலில் இதைச் செய்வதாக வாக்குறுதியளிப்பவர்கள் இந்த அபரிமிதமான அதிகாரங்கள் கிடைத்தபின் செய்வார்கள் என்று நம்ப முடியாது. நாம் இன்றைய ஜனாதிபதியை மஹிந்த சிந்தனையில் அவர் வாக்குறுதியளித்ததை செய்யும்படி கோரி நிற்கின்றோம். (பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்முனைப்பு

ஒரு காட்டில் ஒரு நரி இருந்தது. ஒரு நாள் காலை அது தன் இருப்பிடத்தில் இருந்து வெளியே வந்து சிறிது தூரம் நடந்து வந்தது. அப்பொழுதுதான் அது தன்னுடைய நிழலைக் கவனித்துப் பார்த்தது. அது மிகவும் நீளமாக, பெரிதாக இருந்தது.

காலை நேரத்தில் நிழல் அப்படித்தான் இருக்கும் என்பது அந்த நரிக்குத் தெரியவில்லை. தன்னுடைய நீண்ட பெரிய நிழலைப் பார்த்து ஆச்சரியப்பட்டது.

''ஆஹா! நான் இவ்வளவு பெரிதாகவா இருக்கின்றேன். அப்படி என்றால் என்னுடைய காலை உணவுக்கு ஒரு யானை அல்லது ஓர் ஒட்டகம் கிடைத்தால் தான் போதுமானதாக இருக்கும்'' என்று முடிவு செய்தது.

உடனே ஒரு யானையை அல்லது ஒட்டகத்தைத் தேடி அலைந்தது. நண்பகல் 12 மணி வரையும் மிகவும் அலைந்தது. ஆனால் கிடைக்கவில்லை அப்பொழுது தன்னுடைய நிழலைப் பார்த்தது. மத்தியான நிழல் எவ்வாறு இருக்கும்... அதன் நிழல் மிகவும் குறுகிப் போய் இருந்தது.

உடனே அந்த நரி என்ன நினைத்தது என்றால்.. ''காலை உணவு சாப்பிடாததால் எனது உடம்பு இவ்வாறு இளைத்துப் போய்விட்டது'' என்று நினைத்துக் கொண்டது.

சிறிது நேரம் கழித்து மறுபடியும் தன்னுடைய நிழலைப் பார்த்தது. அது இன்னும் குறுகிப் போய் அதன் காலடியிலேயே வந்து விட்டது. அதற்குப் பயமாகப் போய்விட்டது.

ஐயோ..! இன்னம் சிறிது நேரத்தில் நான் இறந்து விடுவேன் போல் உள்ளது. இப்பொழுது என்ன செய்வேன்? இந்த நேரத்திலே ஓர் எறும்பு கிடைத்தால் கூட போதும். அதனை காலை உணவாக நினைத்துச் சாப்பிட்டு விடலாம்''என்று நினைத்தது.

எங்களுடைய நிழலும் எங்களை மாதிரியேதான் அடிக்கடி மாறிக்கொண்டுதான் இருக்கின்றது.

அது எப்பொழுதும் ஒரே மாதிரி இருப்பது இல்லை.

மனிதனுக்கு ஏற்படுகின்ற தன்முனைப்பு என்பது ஒரு நிழல் மாதிரிதான் என்று நினைக்க ஆரம்பித்தால், அதனால் எந்தப் பிரச்சினையும் வராது.

''தன்முனைப்பை நிழல் போல ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்கிறார் ஓஷோ.

ஒரு காரியத்தை வெற்றிகரமாக, நல்ல விதமாக செய்து முடிக்கிறோம் என்றால் அந்த நேரத்திலே ஒரு வித நுட்பமான தற்பெருமை எமக்குள்ளே உண்டாகின்றது. இது இயற்கையானது. அதனால் இதன் மேல் பற்று வைக்கக்கூடாது. அவ்வாறு வைக்க ஆரம்பித்தால் அந்தக் ''தற்பெருமை'' ஒரு நிரந்தர விருந்தாளியாக எங்களிடம் தங்கிவிடும். எங்கள் நிழல் எப்படி என்றால்.... நாங்கள் நடக்கும் போது எங்கள் பின்னாலே வரும். தன் முனைப்பையும் அப்படியே நினைத்துக் கொள்ளுங்கள் . நிழல் எவருக்கும் எந்தப் பிரச்சினையையும் உண்டாக்குவது இல்லை.

ஆனால்... அந்த நிழலைப் பார்த்து நாம் பயப்பட ஆரம்பித்து விட்டால்... நாங்கள் எதிலும் வெற்றி காண முடியாது. நிழலோடு சண்டை போடக் கூடாது. அது போல தன்முனைப்புடன் சண்டை போட வேண்டியதில்லை.

இல்லாத ஒன்றுடன் சண்டை போடுவது என்பது இருட்டுடன் சண்டை போடுவது போலவே.

நாங்கள் நிழலல்ல; ஆனால் எங்களிடம் உள்ள தன்முனைப்பு என்பது ஒரு நிழல்.எங்கள் நிழலையும் எங்களுக்குச் சமமான தாகப் பார்க்கின்றோம். அங்குதான் சிக்கல் ஆரம்பமாகின்றது.

நாங்கள் நடந்து போய்கொண்டிருக்கின்றோம் என்றால்.. எங்களின் நிழல் தரையிலே விழும். யாரோ ஒருவர் எங்கள் நிழல் மீது காலை வைத்து நடந்து போனால்... உடனே அவரிடம் சண்டைக்காகவா போகின்றோம்..? ''ஏன் எனது நிழலை மிதித்தாய்'' என்று நாம் கேட்பதில்லை.

எமக்குத் தெரியும் அது நிழல்தான் என்று. அவர் உங்கள் மீது நடக்கவில்லை. உங்கள் நிழல் மீதுதான் நடந்தார் என்பது தெரியும்.

அதுபோல உங்கள் தன்முனைப்பின் மேல் யாராவது நடந்தால் உங்களை அவமானப்படுத்துவதாக நினைக்கிறீர்கள். காரணம் நாங்களும் எங்கள் தன்முனைப்பும் ஒன்று என்கின்ற நினைப்பு தான் வேறு ஒன்றுமில்லை.



எங்கள் நிழல் மீது நடப்பவர் எங்களை காயப்படுத்துவது இல்லை. தன்முனைப்பை வேண்டாத ஒன்றாக பார்க்க வேண்டியதில்லை. அது இயற்கை. நிழலை உங்கள் முன் வைக்க வேண்டாம். அது பின்னாலேயே இருக்கட்டும்.

''நிழலின் நிழலாகி விடாதீர்கள்..., நீங்கள் நீங்களாகவே இருங்கள்'' இதைத்தான் ஓஷோ சொல்கின்றார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# மக்களின் வாழ்வாதார மேம்பாட்டில் சிறுப்பிட்டி ஜனசக்தி ச.ச.நிலையம்



**ஞானி**

பொருளாதாரத்திலும் கல்வியிலும் பின் தங்கிய தமது உறுப்பினர்களின் குடும்ப வாழ்வாதார மேம்பாட்டில் சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி சனசமூக நிலையத்தின் பணி முன்னெடுப்புக்கள் காத்திரமானவை. மக்களும் சனசமூக நிலையமும் ஒன்றுபட்ட நிலையில் செயற்படுவதோடு, ஏனைய கிராமங்களுக்கும் சனசமூக நிலையங்களுக்கும் எடுத்துக்காட்டாகவும் முன்னோடியாகவும் விளங்குவது ஜனசக்தி சனசமூக நிலையம்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் சிறுப்பிட்டி மத்தடி கலைவாணி சனசமூக நிலையத்துக்கு அருகில் மேற்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையில் 1500 மீற்றர் தூரத்தில் ஜனசக்தி சனசமூக நிலையம் அமைந்துள்ளது. சனசமூக நிலையத்தின் பெயரிலேயே '' ஜனசக்தி கிராமம் என குறித்த கிராமம் அழைக்கப்படுவது சனசமூக நிலையத்துக்கும், கிராமத்துக்கும் இடையே உள்ள ஒன்றிப்பை வெளிப்படுத்தி நிற்கின்றது.

1971 ஆம் ஆண்டு ஸ்தாபிதம் செய்யப்பட்ட ஜனசக்தி சனசமூக நிலையம் இது வரை காலமும் சாதாரண கட்டடத்தில் செயற்பட்ட போதிலும், தற்பொழுது பொருளாதார அமைச்சின் நிதி உதவியுடனும் பொது மக்களின் நிதி உதவியுடனும் 36 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதனோடு இணைந்து சமூக மேம்பாட்டுக்கான ஏழு அமைப்புக்கள் செயற்படுவதும் ஜனசக்தி சனசமூக நிலையத்தின் காத்திரமான செயற்பாட்டுத் திறனை துலாம்பரப்படுத்தி நிற்கின்றது.

வடமராட்சிப் பகுதியில் இருந்து வந்து சிறுப்பிட்டிப் பகுதியில் வாழ்க்கைத்துணையை தேடிக்கொண்டவர் வை.கந்தசாமி. அவர் குறித்த கிராமத்தில் வாழும் பின் தங்கிய மக்களின் நிலையைக் கண்டு கிராமத்தில் உள்ள மக்களோடு கலந்துரையாடி சனசமூக நிலையம் ஒன்றை நிறுவ வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

> **வடமராட்சிப் பகுதியில் இருந்து வந்து சிறுப்பிட்டிப் பகுதியில் வாழ்க்கைத்துணையை தேடிக்கொண்டவர் வை.கந்தசாமி. அவர் குறித்த கிராமத்தில் வாழும் பின் தங்கிய மக்களின் நிலையைக் கண்டு கிராமத்தில் உள்ள மக்களோடு கலந்துரையாடினார். சனசமூக நிலையம் ஒன்றை நிறுவ வேண் டியதன் அவசியத்தை வலியுறுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.**

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் பணிபுரிந்த கந்தசாமியின் விசுவாசமான ஆலோசனையையும் கரிசனையையும் ஏற்றுக் கொண்ட முன்னோடிகள் சனசமூக நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக் கொண்டனர். அத்துடன் ஊருக்கு நடுவிடத்தில் சனசமூக நிலையத்தை அமைப்பதற்கு காணியையும் வழங்கி உதவினர்.

1971 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 09 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டு J/VC/38CC/111 பதிவிலக்கம் கொண்ட ஜனசக்தி சனசமூக நிலையத்தின் செயற்பாட்டு எல்லைப் பரப்பில் 315 குடும்பங்களைச் சேர்ந்த 1055 மக்கள் வாழ்கின்றனர்.

சனசமூக நிலையத்தின், ஒழுங்கமைக்கப்பட்ட மேற்பார்வையின் கீழ் ஜனசக்தி விளையாட்டுக் கழகம், ஜனசக்தி சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கம், ஜனசக்தி சமூக அபிவிருத்தி மன்றம், ஜனசக்தி விண்மீன் சிறுவர் கழகம், ஜனசக்தி அபிவிருத்தி அமைப்பு, ஜனசக்தி வை. கந்தசாமி பாலர் முன்பள்ளி, பெருந்தலை பார்வதி பரமேஸ்வரன் ஆலயம், ஜனசக்தி கிராம அபிவிருத்திச் சங்கம் உள்ளிட்ட 8 அமைப்புக்கள் செயற்படுகின்றன.

கிராமத்தில் செயற்படும் பொது அமைப்புக்கள் அனைத்தினதும் செயற்பாடுகளும் ஜனசக்தி சனசமூக நிலையத்தின் கண்காணிப்பிலும் மேற்பார்வையிலும் வழிப்படுத்தலிலும் செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. குறித்த ஒவ்வொரு அமைப்புக்களின் செயற்பாடுகளும் கிராமத்தினதும் அங்கு குடியிருக்கும் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாடுதான் தமது குறிக்கோள் என்ற உயர் நோக்கோடு மேற்கொள்ளப்படு கின்றன. சனசமூக நிலையத்திற்கு முன்பாக அமைந்திருக்கும் விளையாட்டு அரங்குக்கு கிழக்குப் புறத்தில் அமைந்துள்ள ஜனசக்தி அபிவிருத்தி அமைப்பு அலுவலகத்தில் இவற்றைத் துல்லியமாக அவதானிக்க முடிந்தது.

அபிவிருத்தி அமைப்பில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அட்டவணைகள், வரைவுகளில் ஒவ்வொரு அமைப்பினதும் செயற்பாடுகள், உறுப்பினர் தொகை இலக்கு, தூர நோக்கு, என்பன காட்சிப் படுத்தப்பட்டிருப்பதோடு நிர்வாகிகளின் விவரமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த அமைப்புக்களின் நிர்வாகிகளான இளைஞர்கள், யுவதிகள், மூத்த பிரஜைகள் மாலை நேரத்தில் அபிவிருத்தி அமைப்பில் ஒன்று கூடுவர் தமது கிராமத்தில் மேற் கொள்ள வேண்டிய அபிவிருத்தி முயற்சிகள் மற்றும் குறித்த தினத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக கலந்துரையாடி ஆரோக்கியமான தீர்மானங்களை மேற்கொண்டு நடைமுறைப் படுத்தி வருகின்றனர்.

இந்த வகையில் கிராமமே ஒரு கூட்டுக் குடும்பம் என்ற நிலைப்பாட்டோடு செயற்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் கிராமத்தில் குடியிருக்கும் ஒவ்வொரு குடும்பத்தின் நல்வாழ்விலும் அக்கறை கொண்டு போட்டி, பொறாமை இன்றிச் செயற்படுகின்றது. அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களும் குடும்பத்தலைவர்களும் அமைப்புக்களின் ஆலோசனையை தாரக மந்திரமாக ஏற்று வழி நடப்பதும் சமூகத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் உறுதுணையாக உள்ளது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்சரிவுகளைக் கட்டுப்படுத்த 50 மில்.டொலர் செலவில் திட்டம்

## இடர் முகாமைத்துவ அமைச்சர் அறிவிப்பு

நுவரெலியா, டிசெ.28

மலையகத்தில் ஏற்பட்டு வரும் மண்சரிவு இடர்களைக் கட்டுப்படுத்த 50 மில்லியன் டொலர் செலவில் திட்டம் ஒன்று எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தின பிரதான நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை பதுளையில் உள்ள ஊவா மாகாண கல்வி அமைச்சு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசு மேற்கொண்டு வரும் வெள்ளத் தடுப்பு நடவடிக்கையால் கொழும்பு, கம்பஹா உள்ளடங்கலான பல பகுதிகளில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படுவதில்லை. மேலும் பல மாவட்டங்களில் வெள்ளத்தடுப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மண்சரிவால் மலையகத்தில் அதிக சேதம் ஏற்படும் நிலையில், அதனைத் தடுக்கும் விசேட திட்டமொன்றை ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் திட்டம் ஜைக்கா உதவியுடன் முன்னெடுக்கப்படும். அடிக்கடி ஏற்படும் மண்சரிவு இடர்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதே எமது நோக்கமாகும்.

கடும் மழை காரணமாக மட்டுமன்றி மக்களின் தவறான செயற்பாடுகளினாலும் இயற்கை இடர்கள் நிகழ்கின்றன.

சுனாமி இடரால் நாட்டுக்கு அழிவு ஏற்பட்டது. ஆனால் தற்பொழுது ஏற்படும் இயற்கை இடர்கள் குறித்து மக்களுக்கு அறிவூட்டி முன்னெச்சரிக்கை வழங்கியுள்ளோம். அதனால் வெள்ளம் மற்றும் இயற்கை இடர்களின் போது உயிர் சேதங்களை குறைக்க முடிந்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. வழங்கப்படும் நிவாரணம் மக்களுக்கு சென்றடைவது குறித்து கண்காணிக்கக் கூடுதலான அதிகாரிகளை ஈடுபடுத்தவுள்ளோம்.-என்றார்.

இந்நிகழ்வில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்ததாவது:-

இடர்களின்போது செயற்படுவதற்கான தனியான அமைச்சு அமைக்கப்பட்டு மக்களுக்கு துரித நிவாரணம் வழங்கப்படும்.

இடர்களின்போது முகம் கொடுப்பது குறித்த ஒத்திகைகள், பயிற்சிகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் இயற்கை இடர்கள் ஏற்படும்போது அதற்கு உரிய நடவடிக்கை



மேற்கொள்ளப்படுகிறது.

நீர்த்தேக்கங்கள், ஆற்றோரங்களில் உள்ள சட்டவிரோத வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. வீடுகளை விட வீதிகள் உயரமாக அமைக்கப்படுவதால் நீர் வடிந்து செல்ல முடிவதில்லை. கடல் மட்டம் குறித்து கவனித்தே வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட வேண்டும்-என்றார். (ச)

## சிவனொளிபாதமலைக்கு விரைவில் கேபிள் கார் வசதி

இரத்தினபுரி,டிசெ.28

சிவனொளிபாதமலைக்குச் செல்கின்ற பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் ஆகியோரின் வசதி கருதி கேபிள் கார்களை உபயோகிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு சுற்றுச்சூழல் பாதுகாப்பு அறக்கட்டளையின் நிறைவேற்று அதிகாரி திலக் காரியவசம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லதண்ணியிலிருந்து பீனவொடி வரை ஒரு கேபிள் கார்த் தடமும், அரிதான தாவரங்களைக் கொண்ட உயிரின பண்ணைப் பகுதியூடாக ஏரத்னவிலிருந்து சிவனொளிபாத மலை வரை மற்றைய கேபிள் கார்த் தடமுமாக இரு தடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதேபோன்று நக்கிள்ஸ் மலைத்தொடரிலும், வெதிஹிரிகந்த புனிதப் பகுதியிலும் கேபிள் கார் திட்டம் செயற்படுத்தப்படும்.

கேபிள் கார் திட்டங்களை ஆய்வு செய்வதற்காக ஆஸ்திரேலியா மற்றும் ஹொங்கொங் போன்ற நாடுகளுக்கு பல அமைச்சர்கள் சென்றுள்ளனர். எனினும் இந்தத் திட்டத்தில் சமய, கலாசார மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றின் தாக்கம் மீதான விளைவுகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம் என்றார்.

இதேவேளை, இதற்கான உத்தேசத்திட்டம் அண்மையில் நடைபெற்ற இரத்தினபுரி குருவிட்ட பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நூல் வெளியீட்டு விழா

அம்பாறை, டிசெ.28

மூத்த எழுத்தாளர் முகில்வண்ணனின் இரு புதிய நூல்கள் வெளிவரவுள்ளன.பாவை நோன்பு, பொங்கல் கவிதைகள் என்னும் இரு நூல்களினதும் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பாண்டிருப்பு மாணிக்கப்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், இலக்கிய கர்த்தாக்கள், முக்கியஸ்தர்கள் உட்படப் பலர் கலந்துகொள்வர். (ச-30)



கரையோரத்தில் மாமிசக் கழிவுகள் வீசப்படுவதால் அவற்றை உண்பதற்காக முதலைகள் படையெடுத்து வரும் மட்டக்களப்பு வாவியின் கரையோரம்.

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு மூன்று வாரங்களுக்குள் வீடுகள்

### உறுதியளித்தார் அஜித் ரோஹண



மட்டக்களப்பு,டிசெ.28

அக்கரைப்பற்றில் சுனாமியால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மக்களுக்கு எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் வீடுகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண எழுத்து மூலம் உறுதியளித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மக்கள், தமக்குரிய வீடுகளை உடன் வழங்குமாறு கோரி நேற்றுமுன்தினம் புதன்கிழமை அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற அஜித் ரோஹண, அம்பாறை மாவட்ட செயலாளருடன் பேசி எதிர்வரும் 3 வாரங்களுக்குள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆர்ப்பாட்டக்காரர்களிடம் உறுதியளித்துள்ளார். அந்த உறுதி மொழியை அடுத்து மக்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டு கலைந்து சென்றனர்.

சவூதி அரேபியாவின் நிதி உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை வீட்டுத் திட்டத்திலுள்ள வீடுகளை வழங்குமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (ச)

## சுனாமி நினைவு நாளில் மாணவருக்கு நிதி

மட்டக்களப்பு,டிசெ.28

இலங்கை ஜமா அத்தே இஸ்லாமிய சன்மார்க்க அமைப்பின் ஏற்பாட்டில் சுனாமி பேரலை தாக்கிய எட்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்றுமுன்தினம் புதன்கிழமை தந்தையை இழந்த மாணவர்களுக்கு கொடுப்பனவு வழங் கப்பட்டது.

இந்தக் கொடுப்பனவு ஏறாவூர் , காத்தான்குடி பிரதேசங்களைச் சேர்ந்த 79 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்தக் கொடுப்பனவு சுனாமிக்குப் பின்னர் ஒவ்வொரு வருடமும் காலாண்டுத் தவணைக் காலத்தில் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 2 கோடி ரூபா பெறுமதியான சட்டவிரோத வலைகள் அழிப்பு

### மட்டு. கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் கூறுகிறார்

மட்டக்களப்பு,டிசெ.28

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடம் மட்டும் சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான தடைசெய்யப்பட்ட வலைகளைக் கைப்பற்றி நீதிமன்ற உத்தரவின்பேரில் அழித்துள்ளோம்.

இவ்வாறு மட்டக் களப்பு கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் டொமிங்கோ ஜோர்ஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, ஏறாவூரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காத்தான்குடியில் சுமார் 35 இலட்சம் ரூபா பெறுமதியான முக்கூட்டு வலை கைப்பற் றப்பட்டது. பாலமீன்மடு முகத்துவாரத்தில் இதுவரையில் 12 படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஏறாவூரை அண்மித்த மட்டக்களப்பு வாவியில் கடந்த நான்கு நாள்களில் சுமார் 18 இலட்சம் ரூபா பெறுமதியான தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளும் படகுகளும் சுற்றிவளைப்பின்போது கைப்பற்றப்பட்டன.

யார் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் அதனை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதில் தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற வேறுபாடு காட்டப்படாது.

தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் [illegible] கடற்றொழில் பயிற்சிகளைப் பெற்று கடற்றொழில் மூலம் அபிவிருத்தி காணமுடியும். மீனவர்களின் அபிவிருத்திக்கு நிதிகள் அடுத்த ஆண்டில் வழங்கப்படும். தென்னிலங்கையர்கள் இங்கு வந்து எங்களது வளங்களைச் சுரண்டுகிறார்கள் என்று கூறுவதற்கு முதல், நாங்களே எங்களது வளங்களை அழித்துவிடாமல் பாதுகாக்க வேண்டும்.

ஆகவே சிங்கள மக்களோடு வைத்திருக்கும் உறவை நாங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களிடம் இருந்து ஆழ்கடல் மீன்பிடி சம்பந்தமான தொழில்நுட்ப அறிவைக் கற்றுக்கொள்ள வேண்டும். மீனவர்களிடம் தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற வேறுபாடுகள் இல்லை. மீன் வளம், கடல் வளம் என்பன இறைவன் தந்த சொத்துக்கள்.- என்றார். (ச)

## கிடைத்தது நிவாரணம்

### வழங்கினார் தண்டாயுதபாணி



திருகோணமலை, ஆலங்கேணி கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்களை நேற்றுமுன்தினம் புதன்கிழமை கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணி வழங்கினார்.

உள்ளூர் பிரமுகர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியில் இந்த நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 750 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

நாளை

மார்கழி -14 சனிக்கிழமை 28.12.2012
திதி: பிரதமை மா. 05.55 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் முழுவதும்
சுபநேரம்: 03.29- 04.59 வரை
ராகுகாலம்: 09.29- 10.59 வரை

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும்.

**இடபம்:** உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். தடைப்பட்ட வேலையை மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். சிலவற்றிற்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**மிதுனம்:** அயலவர் சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடைவீர்கள். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டுப் பேசாதீர்கள். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் கவனமுடன் செயற்படப்பாருங்கள்.

**கடகம்:** ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். வீதிகளைக் கவனமாகக் கடந்து செல்லுங்கள். வியாபாரத்தில் போராடி இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.

**சிங்கம்:** நீண்ட நாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு முடிவுகட்டுவீர்கள். வாகனச்செலவு நீங்கும். உத்தியோகத்தில் மதிப்புக் கூடும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். கோபம் குறையும்.

**கன்னி:** மனநிறைவுடன் காணப்படுவீர்கள். குடும்பத்தில் அனுசரித்துப் போவீர்கள். பிள்ளைகளின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். பால்ய நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**துலாம்:** பழைய கசப்பான சம்பவங்கள் நினைவுக்கு வரும். திட்டமிடாத செலவுகளும் பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் ஓரளவு வேலைச்சுமை குறையும்.

**விருச்சிகம்:** தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் இலாபம் ஏற்படும். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். எதிலும் முன் எச்சரிக்கையுடன் செயற்படப்பாருங்கள்.

**தனுசு:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை வெல்வீர்கள். பெண்களுக்கு உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும்.

**மகரம்:** நண்பர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதர வகையில் நன்மை கிடைக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிமுகப்படுத்துவீர்கள்.

**கும்பம்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிட்டும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

**மீனம்:** மனசாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டுமென நினைப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | 6 | 4 | | | | 1 |
| | | 9 | | 2 | | | 4 | |
| | | 1 | | 9 | | | | 7 |
| 1 | | 6 | 7 | | | | 3 | 4 |
| | | 8 | 4 | | 9 | 1 | | |
| 4 | 9 | | | | 2 | 7 | | 6 |
| 2 | | | | 7 | | 3 | | |
| | 8 | | | 3 | | 6 | | |
| 6 | | | | 8 | 1 | | | 9 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 5 | 9 | 4 | 1 | 7 | 3 | 6 |
| 3 | 7 | 9 | 6 | 8 | 5 | 4 | 2 | 1 |
| 6 | 4 | 1 | 7 | 3 | 2 | 9 | 8 | 5 |
| 7 | 1 | 3 | 2 | 6 | 9 | 8 | 5 | 4 |
| 2 | 5 | 8 | 1 | 7 | 4 | 6 | 9 | 3 |
| 9 | 6 | 4 | 3 | 5 | 8 | 1 | 7 | 2 |
| 1 | 9 | 6 | 8 | 2 | 3 | 5 | 4 | 7 |
| 5 | 3 | 7 | 4 | 9 | 6 | 2 | 1 | 8 |
| 4 | 8 | 2 | 5 | 1 | 7 | 3 | 6 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# மரண அறிவித்தல்

## திருமதி தியாகராசா சின்னம்மா



வட்டுக்கோட்டை,சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ்.வீதி, இணுவில் 4ஆம் கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா சின்னம்மா 25.12.2012 செவ்வாய்க்கிழமை வவுனியாவில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா தியாகராசா அவர்களின் பாசமிகு மனைவியும், நித்தியானந்தன்(ஆனந்தன்-பிரான்ஸ்),சிவானந்தன் (வெற்றி-பிரான்ஸ்), சுந்தரமூர்த்தி (மூர்த்தி-கனடா), நாகேஸ்வரி (லதா-வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயும், தங்கமலர்(பிரான்ஸ்), சாரதாதேவி(பிரான்ஸ்), பிரயாவதி(கனடா),சந்திரகுமார் (HNB, வவுனியா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.12.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் (இல.125,பாடசாலை வீதி, பண்டாரிக் குளம், வவுனியா) நடைபெற்று, பண்டாரிக்குளம்,தச்சனாதன்குளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.125, பாடசாலை வீதி,
பண்டாரிக்குளம்,வவுனியா.
தொ.பே.: 024 222 3442
024 222 4691

(27296)(5-6)

தகவல்:
பிள்ளைகள்



# 26ஆம் பிறந்தநாள் நினைவும், 3ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

செல்வி
## யசோபாரதி தில்லையம்பலம்

(உள்ளகப் பயிற்சி ஆசிரியர்
(3ஆம் வருடம்)
தேசிய கல்வியியற் கல்லூரி,
மட்டக்களப்பு



மனம் மகிழ 29.12.1986
மனம் நெகிழ 28.12.2009

திதி:
துவாதசி (24.12.2012)

மென்மையான உன் சிரிப்பும்
அர்த்தமான உன் பேச்சும்
சத்தமின்றிப் போய்
மூன்றாண்டுகள் சென்றதோ!
பட்டங்கள் பல பெற்று
சுற்றத்தவரோடு சுகமாய் நீ
வாழ்வாயென்று காத்திருந்தோம்
கற்பனையாகி காற்றுடன் கலந்ததோ
உன் கீதமும் ஜீவனும்

நாவற்குழி கிழக்கு,
கைதடி.

தற்போதைய முகவரி: பருத்தித்துறை வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
தொ.பே.: 021 227 0393

(27231)(5.6)

உன் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
அப்பா,அம்மா,
அக்கா குடும்பம், சகோதரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கதிர்காமத்துக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை சென்ற பிரதமர் டி.எம். ஜயரத்ன அங்கு பூசை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

## அரச ஊடகங்கள் சேறு பூசும் நடவடிக்கைகளில்

### பிரதம நீதியரசர்

அரச ஊடகங்கள் சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன என்று பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்தார்.

பிரதம நீதியரசர், சிரேஷ்ட சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பை இழிவுபடுத்தும் நோக்கில் அரச ஊடகங்களில் திட்டமிட்ட பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர் சொன்னார்.

சட்ட ரீதியாக என்னை பதவி விலக்க முடியாது என்று அரசு புரிந்துகொண்டுள்ளது. அதனால் போலிப் பிரசாரங்களை மேற்கொள்கிறது- என்றும் அவர் மேலும் கூறினார். (ச)

## சொத்து விவரம் வெளியிடாதோர் பெயர்கள் பகிரங்கப்படுத்தப்படும்

### தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.28

சொத்து விவரங்களை இதுவரையில் வெளியிடாத அரசியல்வாதிகளின் பெயர்கள் அடுத்த மாதம் அம்பலப்படுத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சில அரசியல்வாதிகளும், கட்சிப் பிரமுகர்களும் சொத்து விவரங்கள் குறித்த தகவல்களை வழங்கி வருகின்றனர். ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரதான அரசியல் கட்சிகளின் அரசியல்வாதிகள் சொத்து விவரங்களை வெளியிட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.



எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் சொத்து விவரங்களை வெளியிட முடியும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (ச)

## சட்டக் கல்லூரிக்கான பரீட்சையை மீள நடத்துக

### மாணவர் அமைப்பு வேண்டுகோள்

கொழும்பு,டிசெ.28

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வு சர்ச்சைக்குரிய முறையில் நடைபெற்றுள்ளது என்று சட்டக் கல்லூரி நுழைவுக்கான மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது. அதனால் சட்டக் கல்லூரிக்கான பரீட்சையை மீள நடத்த வேண்டும் என்று குறித்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த ஆண்டு சட்டக் கல்லூரிக்கான பரீட்சையில் அதிகளவான முஸ்லிம் மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் 7 ஆம் திகதி சட்டக் கல்லூரிக்கான மாணவர் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**பரீட்சை வினாத் தாள்கள் மீள மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அல்லது பரீட்சைகளை மீள நடத்த வேண்டும்.**

எனவே பரீட்சை வினாத் தாள்கள் மீள மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அல்லது பரீட்சைகளை மீள நடத்த வேண்டும் என்று சட்டக்கல்லூரி நுழைவுக்கான மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது. (ச)

# பிரதம நீதியரசருடைய ஆவணங்களே பரிசீலனை

### அவரை யாரும் தூற்றவில்லை என்கிறார் யாப்பா

கொழும்பு,டிசெ.28

பிரதம நீதியரசருக்கு எதிராக நாம் எந்தவிதமான ஆவணங்களையும் முன்வைக்கவில்லை. அவரிடம் இருந்த ஆவணங்கள் மட்டுமே பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன.

இவ்வாறு நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரும் அமைச்சருமான அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அறிவிப்பு கிடைத்துள்ளது. சமுகமளிப்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை

நாடாளுமன்றம், நிலையியற் கட்டளை, அரசமைப்பு, சட்டம் ஆகியவற்றில் நாம் நம்பிக்கை வைத்துள்ளோம். அரசமைப்பை செயற்படுத்தும்போது நாடாளுமன்றத்துக்கு விசேட அதிகாரம் இருக்கின்றது. எதற்கும் ஒரு வரையறை இருக்கின்றது. அதற்கு அப்பால் செல்லமுடியாது.



தெரிவுக் குழுவின் செயற்பாடானது ஜனாதிபதியின் அறிவிப்புடனேயே நிறைவடையும்.

அதனால் அவருக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஒரு குழுவை அவர் நியமித்துக்கொள்ளலாம். அந்தக் குழுவை நியமிப்பதன் மூலமாக எனது தலைமையிலான தெரிவுக் குழுவை ஜனாதிபதி குறைத்து மதிப்பிடவில்லை.

பிரதம நீதியரசருக்கு எதிராக 14 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவற்றில் 5 குற்றச்சாட்டுகளை மட்டுமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டோம். இரண்டு குற்றச்சாட்டுகளில் இருந்து அவரை விடுதலை செய்துள்ளோம்.

குற்றப்பிரேரணையில் உள்ள குற்றங்களில் ஒன்றுக்கு மட்டுமே பிரதம நீதியரசர் பதிலளித்தார். அந்தத் தெரிவுக்குழுவுக்கு தன்னுடன் ஒரேயொரு சட்டத்தரணியை மட்டுமே அழைத்து வர முடியும். எனினும், 7 சட்டத்தரணிகளை அவருடன் அழைத்து வருவதற்கு நாம் இடமளித்தோம்.

தெரிவுக்குழு விசாரணையில் இருந்து பிரதம நீதியரசர் வெளியேறியதுடன், எதிரணியினரும் வெளியேறிவிட்டனர். எதிரணியினர் எழுந்து செல்லாமல் எமது அறிக்கைக்கு எதிரான அறிக்கையொன்றை சமர்ப்பித்திருக்கலாம்.

ஜனாதிபதியின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், நீதியரசர் ஷிராணி திலகவர்தன ஆகியோரே தெரிவுக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்தனர்.

எதிரணியினரும் வெளிநடப்பு செய்யாமல் இருந்திருந்தால் அவர்களிடம் குறுக்கு விசாரணை செய்திருக்கலாம்.

1978 ஆம் ஆண்டு அரசமைப்பின் பிரகாரமே தெரிவுக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.


பிரதம நீதியரசரை யாரும் தூற்றவில்லை. தெரிவுக் குழுவில் ஒலிவாங்கி முடுக்கிவிடப்பட்டிருந்த சந்தர்ப்பங்களில் பேசப்பட்ட சகல விடயங்களும் அறிக்கையிடப்பட்டுள்ளன. ஒலிப் பதிவும் செய்யப்பட்டுள்ளன. அவற்றை சபாநாயகர் மற்றும் ஹன்சாட் திணைக்களத்தின் அனுமதியின்றி யாரும் பார்வையிட முடியாது.-என்றார். (ச)

## எனக்கு தொடர்பு ஏதுமில்லை முஸ்லிம் மாணவர் தெரிவில்

### மறுக்கிறார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு,டிசெ.28

சட்டக் கல்லூரிக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதற்கும் எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது தலையீட்டால் முஸ்லிம் மாணவர்கள் கூடுதலாகத் தெரிவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் எந்தவித உண்மையும் இல்லை. பரீட்சைத் திணைக்களத்தின் ஊடாகவே சட்டக் கல்லூரி அனுமதிக்கான பரீட்சை நடத்தப்பட்டது.

இந்தப் பரீட்சைக்கான ஏற்பாடுகளைச் சட்டக்கல்வி கவுன்ஸிலே மேற்கொண்டது.

இனங்களுக்கு இடையில் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான தவறான குற்றச்சாட்டுகளை சிலர் முன்வைக்கின்றனர்.- என்றார்.

சட்டக் கல்லூரி தெரிவில் முதல் மூன்று இடங்களை முஸ்லிம் மாணவர்கள் பெற்றுள்ளனர். முதல் 50 இடங்களில் 28 முஸ்லிம்கள் வந்துள்ளமை குறித்து தேசிய கல்வியாளர் பேரவை அமைப்பு குற்றம்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அன்னதான சாலைக்குள் நுழைந்தவர் சாவு

கொழும்பு,டிசெ.28

அம்பாந்தோட்டை, வீரகெட்டிய பகுதி விஹாரையொன்றின் அன்னதான சாலைக்குள் அனுமதியின்றி நுழைய முற்பட்ட ஒருவர் ஜன்னலில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

அன்னதான சாலையின் ஜன்னல் கம்பிகளுக்கு இடையில் அந்த நபரின் கழுத்து சிக்கியிருந்தது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

வலஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த குறித்த நபரின் சடலம், நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 6.45 மணிக்கு மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## மக்கள் துயர்போக்க பிரார்த்தனை...



அண்மையில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக [illegible] பம்பலப்பிட்டி கதிரேசன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளை ஜனநாயக மக்கள் முன்னணியினர் நேற்று வியாழக்கிழமை மேற்கொண்டபோது...

## அநுராதபுரத்தில் மஞ்சள் மழை


கொழும்பு,டிசெ.28

அநுராதபுரம், திரிப்பனே, லபுனோருவ ஆகிய பிரதேசங்களில் நேற்று வியாழக்கிழமை மஞ்சள் மழை பெய்துள்ளது என்று பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

நேற்று காலை 8.30 மணிக்கு ஆரம்பித்த இந்த மஞ்சள் மழை சுமார் 10 நிமிடங்கள் வரை நீடித்ததாக மக்கள் குறிப்பிட்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
1952 - 12 - 08

உதிர்வு
2012 - 01 - 09

அமரர்
## சின்னத்துரை செல்வரெத்தினம்

அன்பான அப்பாவே!
இன்று ஆண்டொன்று கடந்து போனது! ஆனால் உங்கள் நினைவுகள்
என்றும் எம்மோடு வாழ்கின்றதப்பா! எம்மை வாழ வைத்த தெய்வம் நீங்கள்
உங்கள் நினைவுகளுடன் என்றும் வாழும் உங்கள் உயிர்கள் நாம்

கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.
(சி/5103)(5.6)

மனைவி,
மக்கள்.

### பலகைகளும் 'அபேஷ்'

வீதி அகலிப்பின் போது வெட்டப்பட்ட குழியில் போக்குவரத்துக்காகப் போடப்பட்டிருந்த பலகைகள் நேற்று முன்தினம் இரவோடிரவாக மாய மாக மறைந்தன. மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

வீதி அகலிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனம் ஒன்றால் வெட்டப்படும் குழிகள் கற்கள் போடும் வரை குடியிருப்புகள், பொது அமைப்புகள், ஆலயங்கள் ஆகியவற்றுக்குச் செல்வதற்கு வசதியாக பலகைகள் போடப்பட்டிருந்தன. 10 அடி நீளமான பலகைகள் குழிக்கு மேலாகப் போடப்பட்டிருந்த நிலையில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மழைபெய்ததால் மக்கள் வெளியே வராத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இனந்தெரியாதோர் குழிக்கு மேல் போடப்பட்டிருந்த பலகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர். பலகைகள் அப்புறப்படுத்தப்பட்டதால் குழிக்குள் நிறைந்துள்ள வெள்ளத்தினுள் பயணிக்க வேண்டிய நிலையில் சனசமூக நிலைய வாசகர்களும் குடியிருப்பாளர்களுமே உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
13 . 06 . 1946

இறப்பு
20 . 12 . 2010

அமரர்
## பஞ்சலிங்கம் செல்வராஜா

திதி : மார்கழி பூரணை - 28.12.2012

ஆண்டுகள் இரண்டு ஓடிவிட்டன
ஆனாலும் உங்கள் நினைவு
என்றும் எம்மை விட்டு அகலாது.

செல்வமஹால்,
மில் லேன், ஏழாலை மேற்கு,
ஏழாலை.

- குடும்பத்தினர்.

# நினைவஞ்சலி

நேற்றைய உதயனில் (27.12.2012) பக்கம் 16 இல் 14 ஆவது ஆண்டு நினைவஞ்சலியில் பிரசுரமான அமரர் கந்தபுஸ்பதேவி அமரலிங்கம் எனும் பெயரை அமரர் கந்தபுஸ்பதேவி அமரசிங்கம் எனத் திருத்தி வாசிக்கவும்.

# லொறி விற்பனைக்கு

42 XXXX தொடரிலக்கமுடைய அசோக் லேடன் லொறி விற்பனைக்கு. யாழ். ப.நோ.கூ. சங்கத்தில் பார்வையிடலாம். விண்ணப்பங்களை தலைவர், நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம், நெடுந்தீவு என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

தலைவர், நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம்,
நெடுந்தீவு.
(c/5107)(6.11)

# 6ஆம் மாத நினைவஞ்சலி



தோற்றம்
28.08.1948

மறைவு
28.06.2012

அமரர்
## கனகேந்திரம் அன்னலிங்கம்
(கிளி)
(உரிமையாளர்-டினா ரவல்ஸ்)


இமைகள் மூடித் திறப்பதற்குள் மாதங்களோ ஆறாகின.
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்.......

82/8, பருத்தித்துறை வீதி,
3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(27306) (5.6)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சிவானந்தன்



சங்கத்தானை,சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்,சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவானந்தன் நேற்று(27.12.2012)வியாழக்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் சிவயோகம் (சுவிஸ்), சிவராஜன் (லண்டன்),சிவாஜினி, சிவகாந்தன்(லண்டன்) காலஞ்சென்ற சிவசக்தி ஆகியோரின் அருமைச் சகோதரனும், பாலச்சந்திரன், சிவறூபராணி, கமலநாதன், நிமலராணி, இராஜ்குமார், ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெற உள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.
(18007)(5.6)

தகவல்:
சிவாஜினி
காலநாதன்
[தங்கை]

# மரண அறிவித்தல்

## சிவபாக்கியம் பழனியப்பா



வேலணை மேற்கு, தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும், கரம்பன் கொன்றை, வேலணை 9ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், தற்போது லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் பழனியப்பா 24.12.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிராசா பழனியப்பாவின் அன்பு மனைவியும், அருளார் அமுதன்(லண்டன்), அருளார் அமலன் (சுவிஸ்), அருளாரூரன் (லண்டன்), அருளார்நிமலன் (சுவிஸ்), அருளார்அகிலன் (சுவிஸ்), அருள்கௌரி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், சித்திராதேவி (லண்டன்), கனகாம்பிகை (சுவிஸ்), சுகந்தி (லண்டன்), ஜெயராணி (சுவிஸ்), சந்திரிகா (சுவிஸ்), கிருஸ்ண குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் திலகவதி(ஓய்வு பெற்ற ஆசிரியர்-வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை), சறோஜினிதேவி (லண்டன்), லக்சுமி (இந்தியா), பத்மாவதி, பாலசுப்பிரமணியம் (பொறியியளாளர், ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற திருஞானம் ஆகியோரின் சகோதரியும், திருஞானசம்பந்தமூர்த்தி (ஓய்வு பெற்ற சுங்க இலாகா அதிகாரி), கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்,வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலை), காலஞ்சென்ற குமாரவேலு மற்றும் கணபதிப்பிள்ளை, திலகவதி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, கணேஸ் மற்றும் மகாலட்சுமி (கனடா), மகாலிங்கம்(ஓய்வு பெற்ற தபாலதிபர்), திருநாவுக்கரசு(கனடா) ஆகியோரின் அண்ணியும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், இரத்தினாம்பிகை, இராமசாமி மற்றும் பொன் மயிலாம்பிகை, வள்ளிநாயகி(கனடா) ஆகியோரின் சகலியும், ராஜீவ், ரமேஷ், ரூபேஷ், கிருஷாந்த், கீர்த்தனா, சங்கவி, யதுர்ஷா, யர்னிதன், அபிராம், அக்சயன், பிரவீணா, பிரணாஸ் ஆகியோரின் அருமைப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 30.12.2012 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே.:+41435490065,
+41797906591

தகவல்:
அகிலன்(மகன்)

(27285)(6.11)

# 31 ஆம் நாள் நினைவு நாள்



தோற்றம்
10.09.1960

மறைவு
28.11.2012

அமரர் **சின்னத்துரை தவராசா**
(பிரான்ஸ்)

(திதி- 28.12.2012)

த.ஜெயராணி (மனைவி - பிரான்ஸ்),
தேசிகராசா (மகன் - பிரான்ஸ்),
டேனுகா(மகள் - பிரான்ஸ்)
சகோதரர்கள் : சி.செல்வராசா,
சி.துரைராசா, சி.நற்குணராசா (காலஞ்சென்றவர்கள்)
சி.சவுந்தரராசா (ஜேர்மனி), ப.புஸ்பராணி,
ச. அருள்ராணி

அளவெட்டி மேற்கு,
நாக்கனாவத்தை,
பெரியமதவடி.

(27908) (6.7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத் துடன் கூடிய வானிலை நிலவும்.

## கலந்துரையாடல்

வட்டுக்கோட்டை சமூக ஜனநாயக மன்றம், கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் வட்டுக்கோட்டை காந்திஜி சனசமூக நிலையத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது. இ.கு.சிவஞானம் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில் வளவாளராக ஏ.சி.ஜோர்ஜ் கலந்துகொள்வார். (3)

# நீதியரசர் விடயத்தில் இலங்கைக்கு 'செக்'

## கனேடிய சட்டத்தரணிகள் சங்கம் அதிரடி

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக இலங்கை அரசு கொண்டு வந்துள்ள குற்றப் பிரேரணையை எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதிக்கு முன்னர், விலக்கி கொள்ளுமாறு இலங்கை ஜனாதிபதியை வற்புறுத்துமாறு கனேடிய சட்டத்தரணிகள் சங்கம், அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜோன் பேயார்ட்டிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

டிசம்பர் 21 ஆம் திகதி கனேடிய சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அரச சட்டத்தரணி ரொபர்ட் சீ. பிரவுண், வெளிவிவகார அமைச்சருக்கு அனுப்பியுள்ள மின்னஞ்சலில் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

சட்டத்தரணிகள், நொத்தாரிசுகள், சட்ட மாணவர்கள், சட்ட கலாநிதிகள் என 37 ஆயிரம் உறுப்பினர்களை கொண்ட கனேடிய சட்டத்தரணிகள் சங்கம், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சட்டத்தின் சுயாதீனத் தன்மையை பாதுகாக்க பாடுபட்டு வரும் ஓர் அமைப்பாகும்.

இலங்கையின் பிரதம நீதியரசருக்கு எதிராக நியாயமான மற்றும் வினைத்திறனான சுயாதீனமாக விசாரணைகளை நடத்தாது, அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு, அரசின் பெருபான்மை உறுப்பினர்களை கொண்ட நாடாளுமன்ற குழுவினால், பிரதம நீதியரசர் குற்றவாளியாக்கப்பட்டுள்ளார். இலங்கை அரசு தனது பெரும்பான்மை பலத்தை பயன்படுத்தி, அவரை பதவியில் இருந்து விலக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதனால் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை இரத்துச் செய்து, இலங்கையில் சட்டத்தின் சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக, தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தில் மாற்றங்களை செய்யுமாறு இலங்கை அரசை கனேடிய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும் கனேடிய சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை, இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு தொடர்பாகவும் கனடா ஏற்கனவே எதிர்ப்புகளை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(3)

## 'பாலியல்' தேடலில் முதலிடம் பிடித்தது இலங்கை

இணையத்தளங்களில் 'கூகுள்' வலைத்தளத்தில் பாலியல் எனும் சொல்லை அதிகம் தேடும் நாடுகளின் பட்டியலில் 2012 ஆம் ஆண்டு இலங்கை முதலிடத்தை பிடித்துக்கொண்டுள்ளது.

'கூகுள் போக்குகள்' என்ற ஒரு பொது வலைத்தளம் நடத்திய ஆய்விலேயே இந்தத் தகவல் கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வு 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதிவரை நடத்தப்பட்டுள்ளது.

கூகுள் வலைத்தளத்தில் 'பாலியல்' என்ற சொல்லை அதிகமாக தேடிய நாடுகளின் பட்டியலில் இந்தியா இரண்டாம் இடத்தில் இருக்கின்றது. 3ஆம் இடத்தில் பப்புவா நியூகினி தீவுகளும், எத்தியோப்பியா நான்காம் இடத்திலும், பாகிஸ்தான் ஐந்தாம் இடத்திலும் இருக்கின்றன.

ஆறாம் இடத்தில் பங்களாதேஷும், வியட்நாம் 7ஆம் இடத்திலும் நேபாளம் எட்டாம் இடத்திலும் இருக்கின்றன. வறுமை கூடிய நாடுகளில் ஒன்றான சோமாலியா ஒன்பதாம் இடத்திலும் கம்போடியா பத்தாம் இடத்திலும் உள்ளன. இலங்கையை பொறுத்த வரையில் 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதி வரையும் டிசெம்பர் 23 ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் 26ஆம் திகதிவரையும் 'பாலியல்' என்ற சொல்இணையத்தளத்தில் கூடுதலாக தேடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## அகதிகள் இடையே மோதல்: மனுஸ் தீவில் ஏழு பேர் காயம்

பபுவா நியூகினியின் மனுஸ் தீவில் கிறிஸ்மஸ் தினத்தன்று ஏற்பட்ட கைகலப்பில் 7 பேர் படுகாயமடைந்துள்ளதாக ஆஸ்திரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

மனுஸ்தீவு அகதிகள் முகாமில் உள்ள தமிழர்களுக்கும் ஈரான் அகதிகளுக்கும் இடையில் இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாக ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் பொவன் உறுதி செய்துள்ளார்.

இணைய அறையில் இந்த மோதல் ஏற்பட்டதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள ஈரான் அகதிகள் விடுத்த அழைப்பை தமிழ் அகதிகள் மறுக்கவே இந்த மோதல் ஏற்பட்டுள்ளது. அகதி முகாமில் சேவையில் இருந்த நிறுவனம் ஒன்றின் ஊழியர் ஒருவரும் மோதலில் காயமடைந்துள்ளார்.

மோதல் குறித்து மனுஸ் தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மனுஸ் தீவில் 30 சிறுவர்கள், பெண்கள் உட்பட இலங்கை, ஈரான், ஆப்கன், ஈராக், பாகிஸ்தான் அகதிகள் 130 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## இந்தோனேஷியாவின் உதவிகளை நிராகரித்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்

இந்தோனேசியாவின் உதவிகளை இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நிராகரித்துள்ளனர். இந்தோனேசிய கடற்பரப்பல் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் கைவிடப்பட்ட நிலையில்

பயணம் செய்த படகின் இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நடுக் கடலில் குறித்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் தத்தளித்து வருகின்றனர். இவ்வாறு தத்தளித்து வரும் இலங்கையர்களுக்கு உதவிகளை வழங்க இந்தோனேசிய அதிகாரிகள் முன்வந்துள்ளனர். எனினும், இந்த உதவிகளை இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நிராகரித்துள்ளனர்.

40 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் இவ்வாறு கடலில் தத்தளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தோனேசியாவின் மந்தாவி தீவுகளுக்கு அருகில் படகு இயந்திரக் கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ளது. குறித்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்ல முயற்சித்தவர்கள் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (3)

விற்பனைக்கு
நல்ல நிலையிலுள்ள டவுனேசி 53-XXXX CR 27 மொடல் வான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 936 1314
(27308)(5-6)

## 'சமுத்திர தேவா' மட்டுமே படகு சேவையில்

யாழ்ப்பாணம்,டிசெ.28

நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவையில் தற்சமயம் நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் படகான 'சமுத்திர தேவா' மட்டுமே சேவையில் ஈடுபட்டுள்ளது. தனியார் படகுகள் சேவையில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளன. அரச படகு குமுதினி நேற்று வியாழக் கிழமை சேவையில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் குமுதினி சேவையில் ஈடு [illegible] (3-7)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோபோக்களைக் கட்டுப்படுத்தும் Tabletகள்



கடந்த 60 வருடங்களுக்கு மேலாக தொழிற்சாலைகளில் ரோபோக்களின் பங்களிப்பானது தொடர்ந்த வண்ணம் காணப்படுகின்றது.

எனினும் இந்த ரோபோக்களை இயக்குவதற்கு மனித மூளை மற்றும் வலு என்பன அவசியமாகக் காணப்பட்டன.

இதன் காரணமாக விபத்துகள் ஏற்படுவதை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது Universal Robots எனும் ரோபோக்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்தினால் விபத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

அதாவது ரோபோக்களை இயக்குவதற்கான விசேட செய்நிரல்களைத் தயாரித்து, அவற்றினை Tablet கணினிகளைப் பயன்படுத்தி செயற்படுத்துவதன் மூலம் விபத்துக்களுக்கு பரிகாரம் தேடும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளது.

# கடதாசிக் கழிவிலிருந்து செங்கற்களை தயாரித்து ஆய்வாளர்கள் சாதனை

இறைச்சிக்காக பயன்படுத்தப்படும் விலங்குகளிலிருந்து பெறப்படும் இரத்தத்தின் மூலம் செங்கட்டிகள் உருவாக்கும் முயற்சிகள் இடம்பெற்றதை செய்திகளின்மூலம் அறிந்திருப்பீர்கள்.


ஆனால் ஸ்பெயின் நாட்டின் Jaen பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் சிலர் இதுவரை காலமும் நுரைக்கும் பொருள்கள் மற்றும் மின்கலத்தயாரிப்புகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த கடதாசிக் கழிவுகளிலிருந்து செங்கற்களை உருவாக்கி சாதனை படைத்துள்ளனர்.

இதற்கென கடதாசித் தொழிற்சாலைகளிலிருந்து பெறப்படும் செலுலோசுக் கழிவு மற்றும் கழிவுநீர்ப்பரிகரிப்பின்போது அல்லது நீர்ச்சுத்திகரிப்பின்போது வெளியேற்றப்படும் சகதி (கழிவு) என்பனவற்றின் சேர்க்கையை பயன்படுத்தியதாக தெரிவித்த குறித்த ஆராய்ச்சியாளர்குழு இச்செங்கற்களை பெரிதாக்கவேண்டிய அவசியம் இல்லை எனவும் தெரிவித்துள்ளது.



அத்துடன்இவற்றினைஉற்பத்திசெய்வதற்கான செலவு குறைவாகஇருப்பது டன் உறுதியானவையாகவும் காணப்படுகின்றன.

# அதி உயர் சக்தியை வெளிவிடும் லேசர் ஆயுதம் வெற்றிகரமாக பரீட்சிப்பு



விசேடமாக ஆகாய மார்க்கமான பாதுகாப்புக்கெனத் தயாரிக்கப்பட்ட அதி உயர் சக்திவாய்ந்த லேசர் ஆயுதம் ஒன்றை ஜேர்மனை அடித்தளமாகக் கொண்டு இயங்கும் ஆய்வுக்குழு ஒன்று வெற்றிகரமாகப் பரீட்சித்துள்ளது.

Beam Superimposing Technology (BST) தொழில்நுட்பத்தில் இரண்டு வகையான லேசர் பிறப்பாக்கிகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த ஆயுதமானது குறித்த ஓர் இலக்கின் மீது 30 kW மற்றும் 20 kW சக்தியை பிரயோகிப்பதன் மூலம் மொத்தமாக 50 kW சக்தியை பிரயோகித்து சேதத்தை விளைவிக்கவல்லது.

இந்த ஆயுதமானது மூன்று இலக்குகளை அடிப்படையாக வைத்துப் பரீட்சிக்கப்பட்டுள்ளது.

முதலாவதாக 1,000 மீற்றர்கள் தொலைவிலுள்ள 15 mm தடிப்புள்ள உருக்கு ஒன்றை அடிப்படையாகக் கொண்டும்,

இரண்டாவதாக, 3 கிலோமீற்றர்கள், 2 கிலோமீற்றர்கள் தொலைவில் செக்கனுக்கு 50 மீற்றர்கள் எனும் வேகத்தில் வீழ்ந்துகொண்டிருக்கும் பொருள்களை இலக்கு வைத்தும்,

இறுதியாக, செக்கனுக்கு 50 மீற்றர்கள் வேகத்தில் பயணிக்கும் 82 மில்லிமீற்றர் மோட்டார் குண்டுகளை அடிப்டையாகக் கொண்டும் பரீட்சிப்பு இடம்பெற்றுள்ளது.

கடந்த வருடம் 10 kW சக்தியை பிறப்பிக்கும் லேசர் ஆயுதத்தை உருவாக்கிய Rheinmetall நிறுவனமே இந்த ஆயுதத்தையும் உருவாக்கியுள்ளதோடு எதிர்வரும் காலங்களில் 100 kW சக்தியை பிறப்பிக்கும் லேசர் ஆயுதங்களைத் தயாரிக்க முடியும் என்றும் அந்தநிறுவனம் தெரிவித்துள்ளது.

# அப்பிளின் அடுத்த தயாரிப்பு




அப்பிள் நிறுவனம் அடுத்ததாக தொலைக்காட்சி தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தற்போது Apple iTV தயாரிப்பதற்கான முதற்கட்ட சோதனைகள் Hon Hai என்ற நிறுவனத்தில் நடைபெறுவதாகவும், இந்த தொலைக்காட்சிகள் 46 மற்றும் 55 inches என்ற அளவில் இருக்கும் என்றும் தாய்வானைச் சேர்ந்த நிறுவனம் வெளியிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இந்தத் தொலைக்காட்சி சிறப்பான தொழில்நுட்பங்களை கொண்டதாக இருக்கும் என்றும், IOS இயங்குதளத்தை அடிப்படையாக கொண்டு இயங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# HP அறிமுகப்படுத்தும் ElitePad 900 Tablet

சிறந்த கணினிகள் உற்பத்தியில் முன்னணியில் திகழும் நிறுவனங்களுள் ஒன்றான HP ஆனது தனது புதிய தயாரிப்பான ElitePad 900 Tablet - களை அறிமுகப்படுத்தியுள்ளது.

விண்டோஸ் 8 இயங்குதளத்தில் செயற்படக்கூடிய இவை 10.1 அங்குல அளவுகொண்டதும் 1280 x 800 Pixel Resolution உடையதுமான தொடுதிரையைக் கொண்டுள்ளன.

அத்துடன் Intel Atom Z27760 Clover Trail processor மற்றும் 2GB RAM ஆல் உருவாக்கப்பட்ட இவை 32GB மற்றும் 64GB சேமிப்பு சாதனங்களைக் கொண்ட இரண்டு பதிப்புக்களாக வெளியிடப்பட்டுள்ளன. இதில் 32GB சேமிப்பு சாதனத்தைக் கொண்ட Tablet - இன் பெறுமதி 649 டொலர்கள் எனவும், 64GB சேமிப்புச் சாதனத்தைக் கொண்ட Tablet - இன் பெறுமதி 649 டொலர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர 802.11a/b/g/n WiFi, Bluetooth 4.0, 8MP Rear Camera, 1080p Fron-t&Facing Camera மற்றும் microSDHC card sl-ot ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளன.

# iOS 6.1 பீட்டா பதிப்பினை அறிமுகப்படுத்தியது அப்பிள்

அப்பிள் நிறுவனமானது தனது உற்பத்திகளுக்கென தனியான இயங்குதளத்தினைப் பயன்படுத்தி வருகின்றமை தெரிந்ததே.

அந்நிறுவனம் அண்மையில் iOS 6 ஐ வெளியிட்டிருந்த நிலையில் தற்போது iOS 6.1 எனும் புதிய பீட்டா பதிப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த பீட்டா பதிப்பானது, நான்காவது தடவையாக வெளியிடப்பட்டிருப்பதனால் iOS 6.1 Beta 4 என அழைக்கப்படுகின்றது.

மென்பொருள் வடிவமைப்பாளர்களுக்கென சோதனைப் பதிப்பாக வெளியிடப்பட்டிருக்கும் iOS 6.1 Beta 4 இல் புதிய வரைபட மென்பொருள் (Mapping API) ஒன்று இணைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் சில புதிய வசதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனினும் தற்போதுள்ள iOS 6 இயங்குதளத்தினை iOS 6.1 இற்கு பதிவேற்றம் செய்வது தொடர்பான தகவல்களை அப்பிள் நிறுவனம் இதுவரையில் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.5மில். நட்டஈடாக புலிகளுக்கு வழங்க இணங்கினார் ராஜீவ்

## அம்பலப்படுத்தியது விக்கிலீக்ஸ்


இந்திய-இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகளுக்கு ஏற்படும் மாதாந்த வரி வருமானத்துக்காக 5 மில்லியன் ரூபாவை (இந்திய நாணயத்தில்) நட்டஈடாக வழங்குவதற்கு அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி இணங்கியுள்ளார் என்று விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவலில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளால் அந்தநாட்டு ராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்த குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அப்போதைய தூதராக இருந்த ஜே.என்.டிக்ஸிற் மற்றும் இந்திய பிரதமரின் பேச்சாளர்·ஆகியோர் லண்டன் ஒப்சேவருக்கு இதனைத் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து லண்டன் ஒப்சேவரை கோடிட்டு இலங்கையின் பத்திரிகைகளும் இந்த இரகசிய உடன்படிக்கை செய்தியை பெரிதாகப் பிரசுரித்தி ருந்தன.




1988 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதி இந்த தகவல் கொழும்பு அமெரிக்க தூதரகத்தால் ராஜாங்க திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தத் தகவலின்படி ராஜீவ் காந்தி மாதம் ஒன்றுக்கு விடுதலைப்புலிகள் அமைப் புக்கு நட்டஈடாக இந்திய பணத்தில் 5 மில்லியன்களை வழங்க இணக்கம் வெளியிட்டிருந்தார்-என்றுள்ளது.(வ)

## பருத்தித்துறை பிரதேச மக்களுக்கு நுளம்பு வலைகள் விநியோகம்

வடமராட்சி,டிசெ.28

பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் குடும்பங்களுக்கு தலா ஒரு நுளம்பு வலை வீதம் பல்லாயிரக்கணக்கான வலைகள் அவ்வப் பகுதி கிராம சேவையாளர்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

டெங்குக் காய்ச்சல் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் பரிந்துரைக்கு அமைய சர்வோதய நிறுவனம் நுளம்பு வலைகளை வழங்கியுள்ளது.

இதில் பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகள் தோறும் பங்கீட்டு அட்டைகளை வைத்திருக்கும் குடும்பங்களுக்கு, ஒரு பங்கீட்டு அட்டைக்கு ஒருநுளம்பு வலை என்ற வீதம் வழங்கப்படுகின்றது.

35 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மேற்குப் புற எல்லையான தொண்டமானாறு கிராம சேவையாளர் பிரிவில் இருந்து நுளம்பு வலை விநியோகம் ஆரம்பமாகி இதுவரை பத்துக்கு மேற்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டு விட்டன.

எஞ்சிய கிராம சேவையாளர் பிரிவுகளில் நுளம்பு வலைகளை விநியோகிக்கும் பணிகளை அந்தந்தப் பகுதி கிராம அலவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர். எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் அனைத்துக் குடும்பங்களுக்கும் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுவிடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-8)




## மர வேலை பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

தொழிற்றுறை திணைக்களத்தினால் மரவேலைப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டுக்கான இந்தப் பயிற்சி நெறியில் தரம் 8 இல் சித்தியடைந்த 14-40 வரையான ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். சுன்னாகம், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் பயிற்சி நெறிகள் இடம்பெறும். பயிற்சியின் போது ஊக்குவிப்புப் படியும் பயிற்சி நிறைவில் அரச அங்கீகாரம் பெற்றதற்கான சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவர்கள் எதிர்வரும் 10.1.2013 வியாழக்கிழமைக்கு முன்பாக தமது விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்து கிராம அலுவலரினால் உறுதிப் படுத்தப்பட்டு பணிப்பாளர் தொழில் திணைக்களம் , கைதடி, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தெரிவித்துள்ளார். (3- 7)

## புதுக்கோட்டையிலுள்ள ஈழ அகதிகள் முகாமில் தீ

புதுக்கோட்டை, ஆலங்குடி சாலை, தோப்புக்கொல்லையில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அந்த முகாமில் சுமார் 500 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

முகாமில் நேற்று அதிகாலை ஒரு வீட்டில் திடீரென தீ பற்றி எரிந்தது. அதை முகாமில் உள்ள மக்கள் அணைக்க முயன் றனர். ஆனால் தீ அந்த வீட்டிலும் அருகில் உள்ள வீட்டிலும் பற்றிக் கொண் டது.

சிறிது நேரத்தின் பின்னர் மக்களது விடா முயற்சியின் காரணமாக தீ அணைக்கப்பட்டது.

இத்தீ விபத்தின்போது எவருக்கும் உயிர்ச் சேதமோ, காயமோ ஏற்படவில்லை என்றும் வீடுகளில் இருந்த பொருள்கள் சில எரிந்து விட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(வ)

## வலி.தெற்கு பிரதேச சபையின் வாசிப்பு மாத நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.28

வலி.தெற்கு பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிரதேச சபையின் தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் மனநல மருத்துவர் வைத்தியகலாநிதி எஸ்.சிவதாசன், நூலக விழிப்புணர்வு நிறுவத் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக பிரதம நூலகருமான ஸ்ரீகாந்தலக்ஷ்மி அருளானந்தம், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ.இரவீந்திரன், வலி.தெற்கு பிரதேச சபையின் உபதலைவர் இ.பரமேஸ்வரன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.தவநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

''பூவுலகில் வெற்றி பெற நூலுலகை உபயோகிப்போம்'' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும், ''வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்'' எனும் நாடக ஆற்றுகையும், நூலக சேவையாற்றி ஓய்வு பெற்ற , இடமாற்றம் பெற்ற நூலகர்கள், நூலக உதவியாளர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வும், சிறப்புரைகளும் இடம்பெற்றன.

(3-14)

## பேராசை பெருநஷ்டம்

கடவுளை நோக்கி தவமிருந்தான் ஒரு பக்தன். அவன் பக்கத்திலேயே பேராசைக்காரன் ஒருவனும் கொட்டக் கொட்ட விழித்தபடி உட்கார்ந்திருந்தான். பக்தனுக்குத் தரிசனம் தர இறைவன் வரும்போது, தவம் செய்யாமலே தானும் தரிசனம் செய்துவிடலாம் என்ற பேராசை அவனுக்கு.

பக்தனுடைய தவ வலிமையால் கடவுள் அவன் முன்பு தோன்றினார். பேராசைக் காரனுக்கும் தரிசனம் கிடைத்தது. இருவருக்கும் எதிரில் இரண்டு குடங்களை வைத்து, யாருக்கு எது தேவையோ அதை எடுத்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு மறைந்தார் கடவுள். ஒன்று ஜொலிக்கும் தங்கக் குடம், இன்னொன்று மண்பானை.




பேராசைக்காரன் அவசரமாகத் தங்கக் குடத்தை எடுத்துக் கொண்டு ஓடினான். பக்தன் மண்பானையே போதும் என திருப்தியடைந்தான்.

பிறகுதான் விவரம் தெரிந்தது பக்தனிடம் இருந்த குடம் தங்கத்தால் ஆனது. ஆனால், மேலே களிமண் பூசப்பட்டிருந்தது. பேராசைக்காரன் எடுத்துக் கொண்டு போன குடம் களிமண்ணால் ஆனது. ஆனால் சும்மா தங்கமுலாம் பூசப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வடமாகாண அமைச்சுகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் அண்மையில் நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இதில் பிரதம செயலாளர் கொத்தணி அணி வீராங்கனைகளும், உட்கட்டமைப்பு அமைச்சு அணி வீராங்கனைகளும் ஆக்ரோஷத்துடன் மோதிக்கொண்டனர். (ங-23)

## பிற்போடப்பட்டது உதைபந்து

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் வீரர்களான சாந்தன், யூட்சன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்டு வந்த லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி, நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை சீரின்மை காரணமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் அரையிறுதி ஆட்டங்கள் காலநிலை சீரின்மையால் பிற்போடப்பட்டுள்ளன. மீளவும் போட்டிகள் நடைபெறும் திகதிகள் உரிய கழகங்களுக்கு அறியத் தரப்படும் என உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ங-23)

# ஆவரங்கால் இந்து,புத்தூர் கலைமதி கரப்பந்து அரையிறுதியில் வெற்றி

யாழ்ப்பாணம்,டிசெ.28

சுன்னாகம் சூராவத்தை நியூவோரியர்ஸ் விளையாட்டுக் கழகம் தனது முதலாவது ஆண்டு நிறைவையொட்டி, யாழ். மாவட்ட ரீதியாக அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தி வருகிறது. இந்தத் தொடரில் நடைபெற்ற கத்தரிக்கோல் முறையிலான முதலாவது அரையிறுதியாட்டத்தில் பன்னாலை கணேசா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

ஏற்கனவே யாழ்.மாவட்ட ரீதியில் கரப்பந்தாட்டத் துறையில் முன்னிலையில் உள்ள கழகமான ஆவரங்கால் இந்து இளைஞர் அணிக்கு சவால்விடும் வகையில் தனது அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது பன்னாலை கணேசா அணி முயன்றால் முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில் கணேசாவின் அதிரடி ஆட்டத்தைக் கண்டு ஆவரங்கால் இந்து இளைஞர் அணி அதிர்ந்தது. இந்த அதிர்ச்சியை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட பன்னாலை கணேசா அணி வீரர்கள் முதல் சுற்றில் புள்ளிகளை குவிக்கத் தொடங்கினர். இலகுவான வெற்றியைப் பெற்றுவிடலாம் என்று களமிறங்கிய ஆவரங்கால் இந்து இளைஞர் அணியின் கனவைத் தவிடு பொடியாக்கிய பன்னாலை கணேசா விளையாட்டுக் கழக அணி, 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் செற்றை தன்வசமாக்கியது.

இந்தவெற்றிக்களிப்போடு இரண்டாவது சுற்றில் களமிறங்கிய கணேசா அணியினர் தமது ஆட்டத்தில் முதல் சுற்றைப் போன்று வேகத்தைக் காட்டத் தவறினர். எனினும் அடிபட்ட புலிகளாக இரண்டாவது சுற்றில் பாய்ந்தனர் ஆவரங்கால் இந்து அணி வீரர்கள். முதல் சுற்றில் விட்ட தவறுகளில் இருந்து பாடம் படித்திருந்த ஆவரங்கால் இந்து இளைஞர் அணி வீரர்கள், இரண்டாவது சுற்றில் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி கரப்பந்துத் துறையில் தாம் அசைக்க முடியாத வல்லமை கொண்டவர்கள் தான் என்பதை வெளிப்படுத்தினர்.

இரண்டாவது சுற்றில் ஆவரங்கால் இந்து அணியின் விஸ்வரூபத்தைக் கண்டு, திணறியது கணேசா அணி. இதனால் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி இரண்டாவது சுற்றினை 23:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி ஆட்டத்தில் சமநிலை பெற்றது.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்த அரையிறுதியாட்டத்தில் முதல் இரண்டு சுற்றுக்களிலும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்று இரு அணிகளும் 1:1 என்ற ரீதியில் சமநிலையில் இருந்தன.

எனவே மூன்றாவது சுற்றில் வெல்பவர்களே போட்டியின் வெற்றியாளராக முடியும் என்ற நிலையில் மூன்றாவது சுற்று தீர்க்கமானதாக அமைந்தது. ஆயினும் முக்கியமான இந்தச் சுற்றில் பெரியளவிலான எதிர்ப்பைக் காட்ட பன்னாலை கணேசா அணி தவறியது.

எதிரணியின் பலவீனமான பகுதிகளை இனங்கண்டு, மிகச்சரியான பந்தைக் கணித்து அடித்து புள்ளிகள் மேல் புள்ளிகளாகப் பெறத் தொடங்கினர் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியினர். அவர்களின் புள்ளிக் குவிப்பு வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் பன்னாலை கணேசா அணி வீரர்கள் பின்தங்கத் தொடங்கினர்.

இதனால் மூன்றாவது சுற்றை 25:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் மிக இலகுவாகத் தமது பிடிக்குள் கொண்டுவந்தனர் ஆவரங்கால் இந்து அணி வீரர்கள். எனவே முதலாவது அரையிறுதியாட்டத்தில் 2:1 என்ற சுற்றுக்களின் அடிப்படையில் பன்னாலை கணேசாவை வீழ்த்தி வாகை சூடியது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி களமிறங்கியது.

3 சுற்றுக்களை கொண்ட ஆட்டத்தை ஆரம்பத்திலிருந்தே தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது புத்தூர் கலைமதி விளையாட்டு கழக அணி. முதலாவது சுற்றை 25:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் மிக இலகுவாக புத்தூர் கலைமதி அணி தனதாக்கிக் கொண்டது. இதேபோன்று இரண்டாவது சுற்றிலும் இலகுவான வெற்றியைப் பெற்றுவிடலாம் என்ற நினைப்புடன் களமிறங்கிய கலைமதி வீரர்களுக்கு பதிலடிகொடுக்கும் வகையில் அச்சுவேலி ஸ்ரார் அணியினர் ஆடினர். ஆயினும் இறுதியில் அடுத்தடுத்து புள்ளிகளைக் குவித்து இரண்டாவது சுற்றையும் 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தன்வசமாக்கியது புத்தூர் கலைமதி. இதன் மூலம் 2:0 என்ற நேர் செற்களில் அரையிறுதியில் அச்சுவேலி ஸ்ராரை வீழ்த்தி புத்தூர் கலைமதி வெற்றியீட்டியது. (ங-23)

# கோல்டன் பிறதர்ஸிடம் வீழ்ந்தது வடதாரகை

வவுனியா,டிசெ.28

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் முன்னாள் வீரர்களான சாந்தன், யூட்சன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகவும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

இந்தச் சுற்றுப் போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் வடதாரகை விளையாட்டுக் கழக அணியும். மோதிக் கொண்டன.

ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை இரு அணிகளும் சமபலத்தோடு மோதிக் கொண்டன. இருப்பினும் வடதாரகை வீரர்கள் அலட்சியமாக இருந்த தருணத்தைப் பயன்படுத்தி கோல்டன் பிறதர்ஸ் அணி ஒரு கோலை அடித்து முன்னிலை பெற்றது. இதனால் ஆட்ட நேர முடிவில் கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வடதாரகையை வீழ்த்தியது. (ங-23)

## வலைப்பயிற்சி மைதானம் வடமராட்சியில் அமைப்பு

வலி.வடக்கு,டிசெ.28

வடமராட்சியில் கடினப் பந்து கிரிக்கெட் விளையாட்டை வளர்த்தெடுக்கும் முகமாக வலைப்பயிற்சி மைதானம் ஒன்று உடுப்பிட்டியில் அமைக்கப்படவுள்ளது. இதற்கென வடமராட்சி ஈகிள் விளையாட்டு மைதானம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

"வடமராட்சிப் பகுதியில் சில பாடசாலைகள் கடினப் பந்து கிரிக்கெட்டில் ஈடுபடுகின்ற போதிலும், ஒரு கழகம் மட்டுமே கடினப்பந்து கிரிக்கெட் போட்டிகளில் மாவட்ட ரீதியில் பங்குபெறுகின்றது. இந்த நிலையில் கடினப்பந்து கிரிக்கெட்டுக்கான வலைப் பயிற்சி மைதானத்தை அமைப்பதன் மூலம் வடமராட்சியிலும் கிரிக்கெட்டை வளர்த்தெடுக்க முடியும். சுமார் இரண்டுலட்சத்தி எழுபத்தையாயிரம் ரூபா செலவில் இந்த வலைப் பயிற்சி மைதானத்தை அமைக்கவுள்ளது" என்று யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கச் செயலர் தெரிவித்துள்ளார். (ங-86)

# வை.எம்.எச்.ஏ. யை பந்தாடியது றெயின்போ

யாழ்ப்பாணம்,டிசெ.28

அரசடி றெயின் போ விளையாட்டுக் கழக அணிக்கும், திருநெல்வேலி வை. எம்.எச் ஏ. விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டத்தில் அரசடி றெயின்போ விளையாட்டுக் கழக அணி 8 இலக்குகளால் வெற்றி பெற்றது.

அரசடி றெயின்போ அணிக்கும், திருநெல்வேலியில் வை. எம்.எச்.ஏ நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ,நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற திருநெல்வேலி வை.எம். எச்.ஏ விளையாட் டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித் தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய வை.எம்.எச்.ஏ விளையாட்டுக் கழக அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 139 ஓட்டங்களையே பெற்றது.

இதில் அனேஜன் 31 ஓட்டங்களையும், யகோபன் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் றெயின்போ விளையாட்டுக் கழக அணி சார்பில் தர்சன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், திலிப் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், டர்வின் 3 பந்துப்பரிமாற்றங்ள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

140 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றெயின்போ விளையாட்டுக் கழக அணி 19 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

சௌமிதரன் ஆட்டம் இழக்காமல் 36 பந்துகளை எதிர்கொண்டு அதிரடியாக 5 சிக்ஸசர் 5 பவுண்டரி அடங்களாக 71 ஓட்டங்களையும், காண்டீபன் 19 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். பந்து வீச்சில் வை.எம்.எச்.ஏ. அணி சார்பில் சிவேந்திரன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2[illegible] ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினை வீழ்த்தினார். (ங-23)




யாழ்.உதைபந்தாட்ட லீக், அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திய லீக் முறையிலான [illegible] தொடரில் 'ஏ' பிரிவில் வெற்றியீட்டிய பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணித் தலைவர் சோபஸிடம் பிரதம விருந்தினர் கருணாகரன் சம்பியன் கிண்ணத்தை வழங்குகின்றார். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளார்க் சதம்; ஆஸி. அபாரம்

இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் அணித்தலைவர் கிளார்க் சதம் அடித்து கைகொடுக்க








ஆஸ்திரேலிய அணி முன்னிலை பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்டில் ஆஸ்திரேலியா வென்றது. இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் மெல்போர்னில் நடைபெறுகிறது.

முதல் இன்னிங்சில் இலங்கை அணி 156 ஓட்டங்கள் எடுத்தது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில், ஆஸ்திரேலியா 3 இலக்குகள் இழப்புக்கு 150 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கிளார்க் 20 ஓட்டங்களுடனும், வொட்சன் 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸைத் தொடர்ந்த ஆஸ்திரேலிய அணிக்கு கிளார்க், வொட்சன் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரும் இணைந்து இலங்கையின் பந்து வீச்சை சுலபமாகச் சமாளித்தனர். ஆஸ்ரேலிய அணி சார்பாக 4ஆவது இலக்குக்காக ஷேன் வொட்சன், மைக்கல் கிளார்க் இருவரும் 194 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

வொட்சன் டெஸ்ட் அரங்கில் தனது 19 ஆவது அரைசதத்தைப் பதிவு செய்தார். இவர் 83 ஓட்டங்கள் எடுத்த போது பரசாத் வேகத்தில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் அணித்தலைவர் கிளார்க்(106) டெஸ்ட் அரங்கில் தனது 22வது சதத்தை பதிவு செய்தார். இவர் 56 ஓட்டங்கள் எடுத்த போது டெஸ்டில் ஒரே ஆண்டில் அதிக ஓட்டங்கள் (1595) சேர்த்த ஆஸ்திரேலிய வீரர் என்ற பெருமை பெற்றார்.

இதற்கு முன் பொண்டிங் ஒருவருடத்தில் டெஸ்ட் போட்டிகளில் 1544 ஓட்டங்கள் சேர்த்ததே சாதனையாக இருந்தது. அடுத்து வந்த வேட்(1) ஏமாற்றினார்.

நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி 8 இலக்குகளை இழந்து 440 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதன்படி ஆஸ்திரேலிய அணி 2 இலக்குகள் கைவசமுள்ள நிலையில் 284 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது. களத்தில் மிற்சல் ஜோன்சன் 73 ஓட்டங்களுடனும், நதன் லயன் ஓட்டமெதனையும் பெறாமலும் உள்ளனர். பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக தம்மிக்க பிரசாத் 3 இலக்குகளையும், ஷமின்ட எரங்க 2 இலக்குகளையும், அன்ஜலோ மத்தியூஸ், திலகரட்ண டில்ஷான் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

இன்று நடைபெறும் மூன்றாம் நாள் ஆட்டத்திலும் ஆஸியின் ஆதிக்கம் தொடருமா? அல்லது இலங்கை பொறுப்புடன் ஆடுமா? என்பதே ரசிகர்களின் கேள்வியாகும்.

(ங)

# தொடர் தென்னாபிரிக்காவுக்கு

தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான 3ஆவதும், இறுதியுமான 20/20போட்டியில் வென்று, தென்னாபிரிக்க அணி இந்த்தொடரை 2-1 என்ற கணக்கில் சுவீகரித்தது.

போர்ட் எலிசபத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 179 ஓட்டங்களைக் குவித்தது. முதலாவது இலக்குக்காக அணித்தலைவர் டு பளசிஸை 2 ஓட்டங்களுடன் அந்த அணி இழந்தது. அதன் பின்னர் 2ஆவது இலக்கையும் 26 ஓட்டங்களுக்குள் இழந்த தென்னாபிரிக்க அணி, பன்னர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

துடுப்பாட்டத்தில் தென்னாபரிக்க அணி சார்பாக ஹென்றி டேவிட்ஸ் 51 பந்துகளில் 68 ஓட்டங்களையும், ஜஸ்டின் ஒன்ரொங் 30 பந்துகளில் 48 ஓட்டங்களையும், டேவிட் மில்லர் 15 பந்துகளில் 28 ஓட்டங்களையும், பர்ஹான் பெஹர்டியன் 11 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.





பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக மிற்சல் மக்லநகன் 2 இலக்குகளையும், டக் பரேஸ்வெல் 2 இலக்குகளையும், ரொனி ஹீரா, ஜேம்ஸ் ஃபராங்ளின் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

180 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 33 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

6 ஓட்டங்களைப் பெறுவதற்கிடையில் தனது முதல் இலக்கை இழந்த நியூசிலாந்து அணி, ஒரு கட்டத்தில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து 53 ஓட்டங்களுடன் பலமான நிலையில் காணப்பட்டது. ஆயினும் அதன் பின்னர் இலக்குகளைத் தொடர்ச்சியாக அந்த அணி இழக்கத் தொடங்கியது. இந்த வீழ்ச்சியில் இருந்து நியூசிலாந்தால் மீள முடியவில்லை.


துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக பரென்டன் மக்கலம் 22 பந்துகளில் 25 ஓட்டங்களையும், மார்ட்டின் குப்தில் 20 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக றயன் மக்லரன், ஆரோன் ஃபங்கிசோ இருவரும் தலா 3 இலக்குகளையும், ரொபன் பீற்றர்சன், ரோறி கிளெய்ன்வெல்ட்ற் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக தென்னாபிரிக்காவின் ஹென்றி டேவிட்ஸ் தெரிவானார்.

(ங)

# ரஞ்சியிலும் இல்லை சச்சின்




குஜராத் அணிக்கு எதிரான ரஞ்சி கிண்ண லீக் போட்டியில் சச்சின் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஞ்சி கிண்ணத் தொடரில் மும்பை அணி ஏ பிரிவில் இடம் பெற்றுள்ளது. இதுவரை நடந்த போட்டிகளின் முடிவில், பஞ்சாப் அணி இந்தப் பிரிவில் இருந்து 32 புள்ளிகளுடன் காலிறுதிக்கு முன்னேறிவிட்டது.

மீதமுள்ள இரு இடங்களைப் பிடிக்க குஜராத் (21புள்ளிகள்), மும்பை (20 புள்ளிகள்), மத்திய பிரதேசம் (20 புள்ளிகள்), சவுராஷ்டிரா (17 புள்ளிகள்) அணிகள் இடையே கடும்போட்டி நிலவுகிறது.

மும்பை அணி கடைசி லீக் போட்டியில் குஜராத்தைச் சந்திக்கிறது. இதில் மும்பை அணி முதல் இன்னிங்ஸில் முன்னிலை அல்லது வெற்றி பெற வேண்டும். அப்போது தான் காலிறுதிக்குச் செல்லலாம்.

இந்தப்போட்டியில், இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் பங்கேற்பதாக இருந்தது. ஆனால் தற்போது ஓய்வில் உள்ள சச்சின், இந்தப்போட்டியில் இருந்து விலகியுள்ளார்.

இதுகுறித்து மும்பை கிரிக்கெட் சங்க (எம்.சி.ஏ) செயலர் நிடின் தலால், தான்ஓய்வில் இருப்பதால் குஜராத் அணிக்கு எதிராக விளையாட முடியாது எனவும், ஒருவேளை மும்பை அணி காலிறுதிக்கு முன்னேறினால், அதில் விளையாடத் தயார் எனவும் சச்சின் தெரிவித்தார் என்று கூறியுள்ளார்.

(ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# After O/Level's..?

இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து T-SHIRT ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்

New batches
2nd Jan 2013
5th Jan 2013
@ 9.00 am

FREE for All Registrations

- DiITEC — Diploma in Information Technology — 4 Months
- DiCA — Diploma in Computerized Accounting — 4 Months
- DiBM — Diploma in Business management — 4 Months
- DiSE — Diploma in Software Engineering — 6 Months
- DiWE — Diploma in Web Engineering — 6 Months
- DiE — Diploma in English — 4 Months

HOTLINE 077 309 9 308



ESOFT Trusted IT Partner

ESOFT Metro Campus - Jaffna
137, K.K.S Road, Jaffna.
Tel :021 2224142 , Web :www.esoft.lk

| Nelliady | Kilinochchi | Jaffna 2nd Branch |
|---|---|---|
| 151, Jaffna Rd | 01, Kanagapuram Rd, | No. 17/1, Brown Rd, |
| 021 226 4940 | 021 228 5444 | 021 222 0345 |


## வெளியேறினார் வெலகெதர

ஆஸ்திரேலிய, இலங்கை அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டியின் 2ஆவது நாளான நேற்று இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் சானக வெலகெதர காயமடைந்துள்ளார்.

போட்டியில் தனது 15ஆவது பந்துப்பரிமாற்றத்தை வீசியபோது அவரது வலது பன்தொடைப் பகுதியில் உபாதையேற்பட்டது. இதனால் அவர் மைதானத்தை விட்டு வெளியேறினார்.

வெலகெதரவின் காலில் ஏற்பட்ட உபாதைக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக அவர் ஸ்கான் பரிசோதனைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளார். (ங)


A/L 2015
New Economics College
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
கலை, வர்த்தகப் பிரிவு
ஜனவரி 05 சனி 8.00மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

நியூசிலாந்து, ஆஸ்திரேலியா
குடும்பமாக ,Skill Migration,
படிக்க, உழைக்க
விசா ஆலோசனைகளுக்கு
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் 175
பருத்தித்துறைவீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
0212219016
(27304)(14)

NEW SCIENCE CENTRE
வெலிங்டன்சந்தி, யாழ்-நகர்.
A/L 2015
PHY — பிரபல ஆசிரியர் (கொழும்பு) பிரபா
CHE — அன்பழகன் (அன்பு) சுசாந்தன்
BIO — நித்தியானந்தன்
MATHS — தஜீகரன்
ஆரம்பம்: 30/12/2012
ஞாயிறு 9.00 a.m
(27282)(14)

BIT Project மற்றும் Semester வகுப்புகள்
- 2007 இல் இருந்து Supervisor(40 Projects)
- யாழில் 25 இற்கு மேற்பட்ட Software
- Windows and Web based Projects
- BIT மற்றும் ஏனைய IT Group classes
- 2012 இல் சென்ற 12வரில் 11பேர் pass, 1வர் திருத்திய project
இல:28/23,
மணல்தரை வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS) 0779785796
(Project : Batch I- Sat & Sun 6pm, Batch II - Mon to Fri aft 4.30pm)

நியூ சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி-வதிரி
புதிய இடத்தில்புதிய நிர்வாகத்தின் கீழ்
A/L 2015 கணித, விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பம்.
காலம் : 28.12.2012 வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 7.30 மணி
இடம் : வடமராட்சி மத்தியமகளிர் கல்லூரிக்கு அருகில் (வதிரியில்)

| | | |
|---|---|---|
| இரசாயனவியல் | : | S.தங்கராசா B.Sc.Dip.in.Edu.<br>K.சிவச்சந்திரன் B.Sc. |
| பௌதிகவியல் | : | S.சோதிலிங்கம் B.Sc.Dip.in.Edu.<br>J.சந்திரப்பிரகாசம் M.Sc. Med.<br>G.பிரபா B.Sc. |
| இணைந்தகணிதம் | : | S.செந்தில்ராஜ் B.Sc.<br>K.அருளானந்தம் B.Sc.Dip.in.Edu.<br>P.விமலநாதன் B.Sc.Dip.in.Edu. |
| உயிரியல் | : | பொன் திவாகரன் B.Sc.Dip.in.Edu.<br>E.இளங்கோ B.Sc.Dip.in.Edu. |

அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம்.
தம்பியோடை,
வதிரி,கரவெட்டி.
(C/2679)(14)
நிர்வாகி.

விடுதலைப் பெருவிழா
வாருங்கள்... இலவசம்...!
கவலை, கண்ணீர், தீராத வியாதி, பிசாசின் பிடி, பில்லி - சூனியக்கட்டு, பாவங்கள், பரம்பரை சாபங்கள், அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து
இயேசு விடுதலை கொடுக்கிறார் !!!
இடம்: யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை மைதானம் (யாழ். வலயக் கல்வி அலுவலகம்) செம்மணி வீதி, நல்லூர்.
காலம் : 27,28,29 மார்கழி 2012
நேரம் : தினமும் மாலை 4.00மணி
"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும்என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." (மத்தேயு 11:28)
இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
673 பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி, நல்லூர்.

ஒரு மாதத்தில் நீங்கள் ஆங்கிலம் பேசக்கூடிய அரியவாய்ப்பு!
- அனைவருக்கும் உரிய விசேட ஆங்கிலக்கற்கை நெறி
- உங்கள் ஆங்கில அறிவை மேம்படுத்த ஆஸ்திரேலிய பிரஜையிடம் கற்கக் கூடிய பொன்னான சந்தர்ப்பம்

Spoken English ஆரம்பம் சனி 29.12.2012 மு.ப 10 மணி



அதிவண.மைகேல்

அடிக்குறிப்பு :
ஆஸ்திரேலியா நாட்டுப்பிரஜையிடமிருந்து மேற்படி கற்கை மூலம் உங்கள் ஆங்கிலஅறிவை தங்கள் தற்போதைய நிலையிலிருந்து உயர்த்திக்கொள்ளலாமே தவிர அனைவரும் ஆங்கிலத்தைப் பேசப்பழகிக் கொள்வதென்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றது. இவ்வடிக்குறிப்பானது எமது கௌரவ இயக்குநர் சபையின் கட்டளைக் கமைவாக இவ்விளம்பரத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது

திசைகாட்டி (பிறைவேற்)லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
0212219016
(27302)(14)

NEW SCIENCE HALL
JAFFNA
2015A/L
ENGLISH MEDIUM
MAT&BIO
COMMENCES ON
28.12.2012

| | |
|---|---|
| PHYSICS | :MR.S.SOTHILINGAM |
| CHEMISTRY | :MR.M.MAHESWARAN<br>MR.S.DIAS |
| COM.MATHS | :MR.S.SIVAKARAN |
| BIOLOGY | :MR.T.THAMBIRAJAH<br>OUR USUAL TEACHER |

கபிலா காலணியகத்தில் அதிரடி கழிவு
Bata DSI
புத்தாண்டை முன்னிட்டு பாடசாலை மாணவ மாணவிகளின் காலணி வகைகள் விசேட விலைக்கழிவில் பொறிக்கப்பட்ட விலையிலிருந்து எங்கும் எதிர்பாராத மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்



பொறிக்கப்பட்ட விலையிலிருந்து குறைவான விலையில்
KABILA SHOE PALACE
24, Kasthuriyar Road, Jaffna.



Branch:
No: 13,
Power House Road,
New Market,
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.